பக்கங்கள் - 24
விலை - 30ரூபா

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 265 ஆவணி 04 ஆம் நாள் புதன்கிழமை 21 ஒகஸ்ட் 2019 வள்ளுவர் ஆண்டு 2050



UGC Recognized ....
International Degree in
Banking
BLC CAMPUS
0777 174 443
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 493 6666
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk


# இரட்டைக் குடியுரிமையால் ஆணைக்குழுவும் குழப்பம்

யாழ்ப்பாணம், ஓக. 21
அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் இரட்டைக்குடியுரிமையைக் கொண்டிருந்தால், அவரை ஆணைக்குழுத் தவிசாளர் நீக்க முடியுமா? அல்லது குடிமகன் ஒருவர் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டுமா? என்பது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுக்குள் கருத்து வேறுபாடு எழுந்துள்ளது.
நவம்பர் மாதம் 8ஆம் திகதிக்கும் 16ஆம் திகதிக்கும் இடைப்பட்ட ஓர் நாளில் அரச தலைவர் தேர்தல் நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு ஆலோ

21

# மல்லுக்கு நிற்கிறது இலங்கை

## சவேந்திர சில்வா விவகாரத்தில் வெளிநாடுகள் எவையும் தலையிட முடியாது என எச்சரிக்கை

**கொழும்பு, ஒகஸ்ட் 21**
**இலங்கையின் இராணுவத் தளபதியாக சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டமை தொடர்பாக வெளிநாடுகள் அழுத்தங்கள் பிரயோகிக்க முடியாது என்று அயலுறவுத்துறை அமைச்சு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.**
**நேற்று அயலுறவுத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.**

21

## விபத்தில் உறுப்பினர்கள் காயம்

யாழ்ப்பாணம், ஓக. 21
தேர்தல்கள் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் மூவரில் இருவர் விபத்துக்களில் சிக்கியுள்ளனர். ஒருவரின் காலில் சிறு முறிவும், மற்றையவரின் கையில் முறிவும் ஏற்பட்

21

# தமிழ் மக்கள் பிரச்சினையில் தடுமாறுகிறார் அநுரகுமார

## தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தத் தயக்கம்

கொழும்பு, ஓக. 21
தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் மற்றும் அரசியல் தீர்வு தொடர்பில் தனது தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்த, ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரும், தேசிய மக்கள் சக்தி கூட்டணியின் அரச தலைவர் வேட்பாளருமான அநுரகுமார திசநாயக்கா தவறியுள்ளார்.
தேசிய மக்கள் சக்தி கூட்டணி

07

# 13 வேண்டும் என்ற ஈ.பி.டி.பிக்கு பதிலளிக்காது நழுவிய கோத்தா

யாழ்ப்பாணம், ஓக. 21
13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று ஈ.பி.டி.பி. கோரிக்கை முன்வைத்த போதும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச தெளிவான பதிலை வழங்கவில்லை என்று உதயன் அறிகின்றான்.
கோத்தபாய ராஜபக்சவை, ஈ.பி.டி.பியின் செயலர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம்

03

## மகனைத் தேடிய தந்தை நிராசையுடன் உயிரிழப்பு

வவுனியா, ஓக. 21
காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடியலைந்த தந்தை ஒருவர் தனது மகனுக்கு என்ன நடந்தது என்பதை அறியாமலேயே நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். ஓமந்தை, மகிழங்குளத்தைச் சேர்ந்த வேலாயுதம் செல்வராசா (வயது-56) என்ப

21

# பிடியை இறுக்குங்கள்

## பன்னாடுகளிடம் கோருகிறது ஜஸ்மின் சூக்காவின் அமைப்பு

கொழும்பு, ஓக. 21
இராணுவத் தளபதியாக லெப். ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டதைக் கண்டித்துள்ள, பன்னாட்டு உண்மை மற்றும் நீதிக்கான திட்டம், இந்த நியமனத்தின் மூலம் அரசு தனது

21

## பட்டப் பகலில் வீடு புகுந்து நவாலி வடக்கில் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஓக. 21
யாழ்ப்பாணம், நவாலி வடக்கில் வீடொன்றுக்குள் புகுந்த கும்பல் அங்கிருந்த பொருள்களை அடித்து நொறுக்கியதுடன், தீயிட்டு விட்டுத் தப்பிச்

21

# முஸ்லிம் தரப்பில் ஒருவரை கோதாவில் இறக்க முயற்சி

## சூடு பிடிக்கின்றது தேர்தல் களம்

யாழ்ப்பாணம், ஓக. 21
அரச தலைவர் தேர்தலில் முஸ்லிம் நபர் ஒருவரை வேட்பாளராக்குவதற்கான பேச்சுக்கள் அடிபடத் தொடங்கியுள்ளன. அதில் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாவின் பெயர் மும்முரமாக அடிபடுகிறது.
எதிர்வரும் டிசெம்பர் மாதமளவில் அரச தலைவர் தேர்தல் இடம்பெறவுள்

08

## ஐ.நா. செயலரும் கவலை

கொழும்பு, ஓக. 21
இராணுவத் தளபதியாக லெப். ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டுள்ளமை குறித்து கவலை தருகின்றது என்று ஐ.நா பொதுச்செயலர் அன்ரனியோ குட்டரெஸின் சார்பில், அவரது பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் தெரிவித்துள்ளார்.

21

## புதிய உந்துருளியை பறித்துச் சென்ற கும்பல்

யாழ்ப்பாணம், ஓக. 21
புதிதாக வாங்கிய உந்துருளியை சில மணி நேரத்திலேயே மர்மக் கும்பல் பறித்துச் சென்ற சம்பவம் நேற்றுமுன்தினம் இணுவிலில் நடந்துள்ளது.
இணுவில் பகுதியைச் சேர்ந்த

03

## ஐரோப்பிய ஒன்றியம் விசனம்

கொழும்பு, ஓக. 21
மனித உரிமை மீறல் தொடர்பான பாரதூரமான குற்றச்சாட்டுக்களுக்கு இலக்காகியுள்ள மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர்

21

# பிஸ்கட்டைக் கையில் கொடுத்து கொன்றவரே சவேந்திர சில்வா

## சிறீதரன் எம்.பி. கொதிப்பு

கொழும்பு, ஓக. 21
இறுதிப்போரின்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனுக்கு பிஸ்கெட்டைக் கொடுத்து அவரைச் சுட்டுக்கொன்றவர்தான் இந்தச் சவேந்திர சில்வா என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தெரிவித்தார்.
நாடாளுமன்றில் நேற்றுப் பிற்பகல் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
சவேந்திர சில்வாவின் கடைவாயில் தமிழர்களின் குருதி வழிகிறது . அவ

08

# கோத்தாவின் காலத்தில் இடம்பெற்ற குற்றங்களை அடுக்கிய அசாத் சாலி!

யாழ்ப்பாணம், ஓக. 21
கோத்தபாயவின் காலத்தில் அனைத்தும் நன்றாக நடந்தது என்கின்றனர். அது உண்மைதான். லசந்த கொலை செய்யப்பட்டமை, தாஜுதீன் கொலை செய்யப்பட்டமை, ஊடக நிறுவனங்களுக்குள் தாக்குதல் நடத்தப்பட்டமை, அருங்காட்சியகத்துக்குள் சென்று வாள்கள் களவெடுத்தமை என அனைத்தும் நடந்தது கோத்தபாய ராஜபக்ச காலத்தில்

21


பெற்றுக் கொள்ள விருப்பமான
DATA LOAN
300 MB RS. 29
825 MB RS. 49
1650 MB RS. 99
எதிர்பாராமல் டேட்டா முடிந்து விட்டால் டக்கென்று மொபிடெல் இடமிருந்து பிரச்சினைகள் எதுவுமில்லாமல் டேட்டா லோன் ஒன்றைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
4G LTE
செயற்படுத்த அழையுங்கள் #170#
Sri Lanka Telecom Mobitel

# உங்கள் நட்சத்திரங்களுக்குரிய பொதுவான குணங்கள்

## பூரம்

இரண்டு கண்களின் கருமணிகள்போல் அமைந்த இரண்டு நட்சத்திரங்கள் இதில் அடங்கும். இதுவும் சூரியன் ஆட்சி செய்யும் சிம்ம ராசியில் அடங்கும்.

**பொதுவான குணங்கள்**
நுண்கலைகளான ஓவியம், இசை, நடனம், நாடக நடிப்பு போன்றவற்றில் ஈடுபாடும் திறமையும் இருக்கும். கலைக்காக எதையும் செய்யத் துணிந்தவர்கள். பேராசை, புகழாசை, பொருளாசை கொண்டவர்கள். ஆடை அணிகலன்கள் அணிவதில் விருப்பம் கொண்டவர்கள். அழகை ஆராதிப்பவர்கள். தங்கள் புகழையே பேசிக்கொண்டிருப்பவர்கள். தான தர்மங்கள் செய்து அதனால் புகழும் பெருமையும் அடைய ஆசையுள்ளவர்கள்.

**பூரம் நட்சத்திரம் முதல் பாதம்:**
இதன் அதிபதி சூரியன். திறமைசாலிகள். நல்ல நினைவாற்றல் உள்ளவர்கள். பேச்சுத்திறமை மிக்கவர்கள். எதையும் எதிர்த்துப் போராடி, எப்படியாவது வெற்றியடைய வேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்கள். நண்பர்களை நேசிப்பவர்கள். உடல் நலனில் கவனம் செலுத்தமாட்டார்கள்.

**பூரம் நட்சத்திரம் இரண்டாம் பாதம்:**
இதன் அதிபதி புதன். நல்ல கல்வியும் திறமையும் இருந்தாலும், அடிக்கடி தோல்வியைச் சந்திப்பார்கள். தனக்கொரு நியாயம், பிறருக்கொரு நியாயம் என்ற பாகுபாடு கொண்டவர்கள். தோல்வியைக் கண்டு துவண்டுவிடுவார் கள். பிறர் உதவியை எப்போதும் எதிர்பார்த்து, பிறரைச் சார்ந்து வாழ நினைப் பவர்கள். தெய்வ பக்தி உள்ளவர்கள்.

**பூரம் நட்சத்திரம் மூன்றாம் பாதம்:** சுக்கிரன் இதன் அதிபதி. ஆசாபாசம் மிக்கவர்கள். ஓவியம், சிற்பம், புகைப்படம் எடுப்பது போன்றவற்றில் ஈடுபாடு இருக்கும். பேராசை மிக்கவர்கள். பிறரைப் பற்றிக் கவலைப்படாமல் தன் சுகத்தையும், முன்னேற்றத்தையும் பற்றி மட்டுமே சிந்திப்பவர்கள்.



**பூரம் நட்சத்திரம் நான்காம் பாதம்:**
செவ்வாய் இதன் அதிபதி. அவசரப்பட்டு முடிவெடுப்பவர்கள். பணத்தைச் சேர்த்த வேகத்தில் செலவழித்து விட்டுக் கஷ்டப்படுபவர்கள். திட்டமிட்டுச் செயலாற்றும் திறமை இருக்காது. தெரியாமல் தவறுகள் செய்துவிட்டு, அதனால் பெயரும் புகழும் பாதிக்கும் சூழ்நிலை இவர்களுக்கு ஏற்படும். செவ்வாய்க் கிழமைகளில் பக்தியுடன் முருகனை வழிபட்டால், துயரங்கள் நீங்கும்.

## மரண அறிவித்தல்

### கதிரேசு சுந்தரமூர்த்தி

**(முன்னாள் பிரபல புகையிலை வர்த்தகர்)**



பன்னாலையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கதிரேசு சுந்தரமூர்த்தி (முன்னாள் பிரபல புகையிலை வர்த்தகர்) 20.08.2019 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரேசு பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளையின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான கார்திகேசு, வைத்திலிங்கம், சண்முகம், சின்னத்தங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கந்தையா காலஞ்சென்ற சுந்தரவல்லி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், புஷ்பராணி, வில்வராணி, திருக்கேதீஸ்வரன், அருள்மொழிராணி, புஷ்பலீலாவதி, கிருஷ்ணலீலாவதி கலாநிதி ஆகியோரின் அன்புத் தந்தையும், மதிவாணன், காலஞ்சென்ற விவேகானந்தன் மற்றும் சூரியமலர், குமாரசாமி, ஜீவதாசன், பாக்கியநாதன், செல்வக்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் ,இலிங்காயினி, வேணுகாணன், நிலாஜினி, கலைஷாணி, கஜிதன், தர்ஜிதன், கௌசலா, கௌதம், கௌரிஷா, அஜீறதன், சஜீரணி, கபிலன், கோகுலன், ஜீவராஜ், அஜிராஜ், பற்ஷனா, பவிதிரன், பிரவீன். றோகான், கேசினி, நிறோஜன், வசிகரன், ஜெயாழினி, பிரியதர்சினி, பிரசன்னா ஆகியோரின் பாசமிகு பேரனும், அலக்சியா, கரீன், நிரோஜன், நவீன், அஜாரிஜா, ருயாந்தன், ருயாந்தி, சயந்தினி, கிசானி, யஸ்மிதா, ஆரபி, கஜானி, மாயவன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.08.2019 வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சு. திருக்கேதீஸ்வரன் (மகன்: நோர்வே)**
**+4741213198, +4771760411**
**கு. அருள்மொழிராணி(மகள்: இலங்கை)**
**0779038634, 0214916472**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மகம்

இது இரட்டை நட்சத்திரம். பூர நட்சத்திரம் போலவே இரு கண் விழிகள்போல் அமைந்தவை. நேர் கோட்டில் அமையாமல், சற்று ஏற்றத் தாழ்வுகளுடன் அமைந்தவை. இதன் முதல் பாதம் சிம்ம ராசியிலும் 2, 3, 4 பாதங்கள் கன்னி ராசியிலும் அமையும். முதல் பாதத்துக்கு ராசிநாதன் சூரியன். மற்ற மூன்று பாதங்களின் ராசிநாதன் புதன்.

**பொதுவான குணங்கள்:**
திறமைசாலிகள். கல்வியறிவும், சமயோசித புத்தியும் கொண்டவர்கள். ஆசாபாசங்கள் அதிகமிருந்தாலும், பிறருக்கு உதவ வேண்டும் என்ற தர்ம சிந்தனை இருக்கும். கோபம் இருந்தாலும், தன்னடக்கமும் இருக்கும். 'தான் நினைத்ததுதான் சரி' என்ற பிடிவாத குணமும் உண்டு. தெய்வபக்தி, நேர்மை உள்ளவர்கள்.

**உத்திரம் நட்சத்திரம் முதல் பாதம்:**
இந்தப் பாதத்தின் அதிபதி குருபகவான். அறிவாற்றல், திறமை, உழைப்பு, நியாய உணர்வு மிக்கவர்கள். சாஸ்திரங்களில் ஈடுபாடும், நம்பிக்கையும் இருக்கும். குருவை நாடி ஞானம் பெற நினைப்பவர்கள். உணர்ச்சிவசப்படக் கூடியவர்கள். சூது, கபடம், பழிவாங்கும் வெறி போன்ற தீய குணங்கள் இருக்காது. அன்பும், பண்பும், சகோதர பாசமும் உள்ளவர்கள்.

**உத்திரம் நட்சத்திரம் இரண்டாம் பாதம்:**
இதனை ஆட்சி செய்பவர் சனி. பொருளும், புகழும் சேர்ப்பதில் ஈடுபாடு மிக்கவர்கள். தலைமைக் குணங்கள் மேலோங்கி நிற்கும். சுயநலம் மிக்கவர்கள். அவசரக்காரர்கள். ஈட்டிய பொருளை இழந்து தவிப்பவர்கள்.

**உத்திரம் நட்சத்திரம் மூன்றாம் பாதம்:**
இதற்கும் அதிபதி சனியே. 2ஆம் பாதத்துக்கு உரியவர்களின் இயல்பும் குணங்களும் இவர்களுக்கும் இருக்கும். கர்வம், ஆணவம், 'தான்' என்ற அகம்பாவம் மிக்கவர்கள். எனவே, பலரால் விரும்பப்படாதவர்கள். வெற்றிக்காக எதையும் செய்பவர்கள்.

**உத்திரம் நட்சத்திரம் நான்காம் பாதம்:**
இதன் அதிபதி குரு. நிதானமானவர்கள். அடக்கமானவர்கள். வளைந்து கொடுத்து வாழத் தெரிந்தவர்கள். கல்வியில் சிறந்தவர்கள். திறமைசாலிகள். நல்ல உழைப்பாளிகள். தர்மசிந்தனை உள்ளவர்கள்.

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1596
சீட்டிழுப்பு திகதி 20.08.2019
வெற்றி இலக்கங்கள் 28 33 49 67 G
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட் ரூ.36,078,304/=




## 13 வேண்டும்...

திங்கட்கிழமை இரவு சந்தித்துப் பேசினர்.

இந்தச்சந்திப்பில்தமிழ்மக்களின்ஆகக்குறைந்தவேணவாக்கள் என்ற அடிப்படையில் 16 அம்சக் கோரிக்கைகள் அடங்கியஆவணத்தைகோத்தபாயவிடம்சமர்ப்பித்துள்ளனர். கோத்தாவுடன் இதன் பின்னர் இடம்பெற்ற கலந்துரையாடலில், 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று ஈ.பி.டி.பி. கோரிக்கைமுன்வைத்தது. அதற்குகோத்தபாய, நீங்கள் அரசில் பலமான பங்காளியாக இருங்கள். உங்கள் கோரிக்கைகளை(டிமாண்ட்)முன்வைத்துத்தொடர்ந்து கேளுங்கள்என்று கூறியுள்ளார். 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் என்றோ அல்லது நடைமுறைப்படுத்த மாட்டேன் என்றோ அவர் பதில் எதுவும் குறிப்பிடவில்லை.

இதேவேளை-தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்நாடாளுமன்ற உறுப்பினர்த. சித்தார்த்தனை சிலவாரங்களுக்கு முன்னர்சந்தித்திருந்தகோத்தபாய,13ஆவதுதிருத்தத்தை முழுமையாகநடைமுறைப்படுத்துவேன்என்றும்காணி அதிகாரத்தை வழங்குவதில்தான்சிக்கல்இருக்கின்றதுஎன்றும்கூறியிருந்தார். இந்த நிலையில்,13ஐமுழுமையாக நடைமுறைப்படுத்துங்கள் என்றும் ஈ.பி.டி.பி. கோரிக்கைமுன்வைத்த போது அதற்குத் தெளிவான பதிலை கோத்தபாயவழங்கவில்லை.

(ஒ.5)

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1026
சீட்டிழுப்பு திகதி 2019.08.19 திங்கட்கிழமை
C 06 17 45 46
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 72,121,176/-
தொ.பே: 0112 333 545/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 706
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.08.20
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 81,553,865/-
வெற்றி இலக்கங்கள் 04 14 23 54 F
விசேட வெற்றி இல. 7444
0114 625 825

ராசி அதிர்ஷ்டம்
திகதி 20.08.2019
வெற்றி வாரம் 2592
வர்ணம் சிகப்பு
மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 07 31 47 62
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,541,118/=
டபள் சான்ஸ்
ரூ.500 பரிசுக்காக 3553
ரூ.100 பரிசுக்காக 656
விசேட இல.
21.08.2019 ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
## பழைய மாணவர்கள் ஒன்றுகூடல் - 25.08.2019

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர்களுடன் பாடசாலையில் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு எதிர்வரும் 25.08.2019 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கல்லூரி சபாலிங்கம் மண்டபத்தில் அனைத்துப் பழைய மாணவர்களை ஒன்று கூடுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(IN/11030)(11,17)

- அதிபர் -

## புதிய...

இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் உள்ள உந்துருளி விற்பனை நிலையம் ஒன்றில் நேற்றுமுன்தினம் சுமார் 2 லட்சத்து 38 ஆயிரம் ரூபா பெறுமதியான உந்துருளியை வாங்கியுள்ளார்.

புதிதாகவாங்கியஉந்துருளியை ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர், உறவினர் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

அப்போதுஅவரைவழிமறித்த 9 பேர்கொண்ட குழு ஒன்று சரமாரியாகத்தாக்கிவிட்டுஉந்துருளியைப் பறித்துச் சென்றனர் என்று கூறப்படுகின்றது.

இதுதொடர்பில்பாதிக்கப்பட்ட இளைஞர் நேற்று சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இது தொடர்பில்விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று பொலிஸார்தெரிவித்தனர்.

(எ-26)






# Department of English Language & Soft Skill Training Unit

## Certificate in English

க.பொ.த.சாதாரணதரத்தில் ஆங்கில பாடத்தில் சித்தியடையாத மாணவர்களுக்கான அடிப்படைப் பாடநெறி ஆகும்.
மாணவர்களுக்கு மிக அடிப்படையான ஆங்கில அறிவு வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆங்கிலத்தை அடிப்படையிலிருந்து கற்க விரும்பும் மாணவர்களுக்கு ஒரு சிறந்த ஆரம்பத்தினை பெற்றுக் கொடுக்கும்.

## Diploma in English

மாணவர்கள் அடிப்படை ஆங்கில அறிவுக்கு மேலதிகமாக அன்றாட நடவடிக்கைகளுக்குத் தேவையான ஆங்கில அறிவைப் பெற்றுக்கொள்வதை உறுதிப் படுத்தும் பாடநெறி.

# Smart Up

ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் (MS Office, Internet & E-mail, Hardware, Graphic Designing), சிங்களம், Soft Skill மற்றும் ஆளுமை விருத்தி என்பவற்றை உள்ளடக்கிய ஒரு தீவிர பயிற்சிக் கற்கைநெறியாகும்.

- ✔ தனியார் நிறுவனங்கள், அலுவலகங்களில் உடனடி வேலைவாய்ப்பு ஒன்றினை பெற்றுக் கொள்வதற்கு இப்பயிற்சி உதவியாக அமையும்.
- ✔ உயர்கல்வி நிமித்தம் பட்டப்படிப்பு அல்லது தொழிற் கற்கைநெறி ஒன்றைத் தொடர இருப்பவர்களுக்கு இப்பயிற்சி நெறி அடிப்படையாகவும் உந்து சக்தியாகவும் இருக்கும்.
- ✔ பாடநெறி முடிவில் 3 சான்றிதழ்களை மாணவர்கள் பெற்றுக்கொள்வர்.
  - ◇ Diploma in English
  - ◇ Diploma in IT
  - ◇ Certificate in Spoken Sinhala



## Diploma in Information Technology

தகவல் தொழில்நுட்பம், அடிப்படை கணினி அறிவுகளான MS Office, Computer Hardware, Basic Graphic Designing, Internet, E-mail & Social Media என்பவற்றை உள்ளடக்கிய ஒரு சிறந்த பாட நெறி ஆகும்.

**உடன் அழையுங்கள்**
**0777174443**
www.blccampus.edu.lk

BLC CAMPUS

LINCOLN UNIVERSITY COLLEGE
Recognized by:

**4th Lane, Brown Road, Jaffna.**
T - 021 493 5555, 021 437 4443
E - info@blccampus.edu.lk

## அழியா நினைவுகளுடன் 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 03 . 03 . 1946



மறைவு 21 . 08 . 2015

### அமரர் பெஞ்சமின் குணநாயகம்

ஆண்டுகள் நான்கு ஆனாலும் ஆறுமோ எம் துயர்
வாழ்வில் உம்மை நேசித்தோம் மரணத்திலும் உம்மை மறவோம்.

152/1, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

உம் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(cs 27593) (13.17)

## வேலையாள் தேவை

யாழ் நகரில் இயங்கும் பிரபல சுப்பர் மார்கட் ஒன்றுக்கு காசாளர் பெண் உடன் தேவை.

- Salary - 15,000-22,000/=
- தகைமை - O/L

(CS 27510(16/17))

தொடர்புகள்:- 077 477 3480

## பனாட்டு தேவை

பனாட்டு, பாணிபனாட்டு தேவை.
உற்பத்தி செய்பவர்கள் நேரடியாக தொடர்புகொள்ளவும்.
நல்ல விலை தரப்படும்.

(CS 27424) (14.17)

075 491 8984

## பகோடா தயாரிப்பாளர் தேவை

பகோடா செய்யக் கூடியவர்கள்.
பகோடா செய்யும் கருவி செய்யக் கூடியவர்கள் தேவை.

075 491 8984

## மாபெரும் மலிவு விற்பனை

இந்தியாவில் இருந்து இறக்குமதியான லட்சுமி சுதா. சாண்டில்யன். சிவபாரதி. ஓஷோ. இந்திராசௌந்தர்ராஜன். கண்ணதாசன். கல்கி. ரமணிச்சந்திரன் . சுஜாதா. ராஜேஸ்குமார். பட்டுக்கோட்டை பிரபாகர். அமுதவல்லி கல்யாணசுந்தரம். காஞ்சனா ஜெயதிலகர். ஜெய்சக்தி. ஆர்.சுமதி ஆகியோரின் இனிமையான கதைகள் நிறைந்த புத்தகங்கள் இந்தியன் விலைப்படி 3.50 ஆல் பெருக்கப்பட்டு 10% தொடக்கம் 50% வரையான விசேட விலைக்கழிவுடன் வழங்கப்படும் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
இல.212,214, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

## நாகபூஷணி திருமண சேவை

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்படும்.

257, பலாலி வீதி, கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.
021 222 9306, 077 138 7596

## முதலாம் ஆண்டு நினைவு நாளும் திவச அழைப்பும்



கடந்த 02.09.2018 ஞாயிற்றுக் கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் கந்தையா திருநாவுக்கரசு

திதி: ஸப்தமி

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினமும் திவசக்கிரியை களும் நாளை (22.08.2019) வியாழக் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தோற்றம் 19.01.1937

மறைவு 02.09.2018

சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

குடும்பத்தினர்.

## வீடு வாடகைக்கு

கொழும்புத்துறை பிரதான வீதியில் புத்தம் புதிய மாடி வீட்டின் கீழ்வீடு மூன்று படுக்கை அறை. ஒரு சமையலறை. இரண்டு பாத்றூம். பெரிய ஹோல் பல்கனியுடன் வெளிநாட்டவர்களுக்கு வாடகைக்கு விடப்படும்.
(Fridge, Micro oven, Camera 24 Hours, Oppasite Beach, தளபாடங்கள்)

தொடர்பு கொள்ள வேண்டிய T.P:-
076 129 8099

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் தில்லைநாதன் கமலாசினி

உயிருக்கு உயிராக இருந்து
எமைக்காத்த எமது தெய்வமே!
ஏழு ஆண்டுகள் சென்றாலும்
ஆறவில்லை எங்கள் துயரம்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.



## விநாயகர் திருமண சேவை

- எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களின் ஜாதகங்கள் உள்ளன.
- பதிவுக் கட்டணம் இலவசம்.

CS27511(16/17)

இல-22 ,முருகன் கோவிலடி,
தாவடி தெற்கு, தாவடி.
தொ.பே-077 255 0807 (வைபர்)

## மரண அறிவித்தல்



### திருமதி தேவகி பாலச்சந்திரன்

இத்தியடி பிள்ளையார் கோயிலடி. சங்கத்தானை. சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி தேவகி பாலச்சந்திரன் 16.08.2019 அன்று அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான காசிலிங்கம் தங்கரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும் பாலச்சந்திரனின் அன்பு மனைவியும் இராகுலன். நவகுலன் (முகாமையாளர். கொமர்ஷல் கிரடிட். யாழ்ப்பாணக் கிளை). பாலசுலோசனி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஸ்ரீநந்தினி. கவிதா. தயாபரன் ஆகியோரின் அன்பு மாமியும் ரம்மியா. அபர்ணா. தமன்ஞா. ஹரிஷ்ராம். அனிஷ்ராம். பிரித்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அன்னலட்சுமி. காலஞ்சென்ற தர்மதுரை மற்றும் ஜெகஜோதி. இராசகோபால். மங்கையர்க்கரசி. இராசபூபதி. இரத்தினகோபால். தெய்வேந்திரன். இரத்தினபூபதி. காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் நாகேந்திரன். இராகவன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற திருஞானசுந்தரம் மற்றும் யோகாம்பிகை. தர்மலிங்கம். தனலட்சுமி. காலஞ்சென்ற விவேகானந்தன் மற்றும் கனகராஜா. காலஞ்சென்ற சறோஜினிதேவி மற்றும் செல்வராணி. சின்னராசா. தனலட்சுமி. றஜனி. ஸ்ரீறஞ்சினி. காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் திலகரட்ணம். நாகரத்தினம். வாணி. வேவி. ஹனி. றணி. றூபி. கரன் மற்றும் சுபாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.08.2019) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்,

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இத்தியடி பிள்ளையார் கோயில் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

தகவல் :
குடும்பத்தினர்.

(C 11033) (14.17)

077 107 7784 (நவகுலன்) /021 227 1856

## மரண அறிவித்தல்



### திருமதி பூரணம் கந்தசாமி (இலக்கணம்)

புலோலி தெற்கு. சாரையடி . வீரபத்திரகோயிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூரணம் கந்தசாமி 17.08.2019 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - பொன்னம்மா தம்பதிகளின் மருமகளும் கந்தசாமியின் பாசமிகு மனைவியும் துவாபரன் (கனடா). மோகனதாஸ் (ஜேர்மனி). புவிதரன் (ஜேர்மனி). நவீந்திரன். குகனேசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் ஜனனி. பவானி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் தர்மிகா. தாருகா. தனுஷார்ந் ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான பாக்கியம். விநாயகம் ஆகியோரின் சகோதரியும் மகேஸ்வரியின் மைத்துனியும் சிவகுருநாதனின் சிறியதாயாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2019) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வீரபத்திரகோயிலடி, சாரையடி,
புலோலி தெற்கு, புலோலி.

தகவல் :
குடும்பத்தினர்.

(CS 00942) (14.17)

077 500 2162

## கண்ணீர் அஞ்சலி

### க.சின்னராசா
**(முன்னாள் மத்திய வங்கி அதிகாரி)**

உரும்பிராய் இந்துவின் புகழ்பூத்த மைந்தன் க.சின்னராசாவின் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். தான் கல்வி கற்ற கல்லூரிக்குப் பல பெருமைகளைத் தேடித் தந்ததோடு, தமிழ் ஆசான் அமரர் பொன்னம்பலம் ஆசிரியரின் ஞாபகார்த்தமாக உயர்தரத்தில் தமிழை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களுக்கு பரிசுத்திட்டம் ஒன்றை உருவாக்கி என்றைக்கும் நடைமுறைப்படுத்தும் வண்ணம் எம்மோடு விட்டுச் சென்றுள்ளார்.

இனியவரை இழந்து தவிக்கும் குடும்பத்தவர்களுக்கும் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் .தெரிவிப்பதோடு அவரது ஆன்மா என்றைக்கும் சிவபூதவராயரின் பாதங்களில் இன்புற்றிருக்கப் பிரார்த்திக்கின்றோம்.

" வாழ்க அவர் நாமம், வளர்க அவர் பணி"

பழைய மாணவர் சங்கம்,.
உரும்பிராய் இந்துக்கல்லூரி.

(IN 11032)(11.17)

## கமத்தொழில் அமைச்சு கேள்வி அறிவித்தல் 2019 - August

வடமாகாண விவசாய நவீன மயமாக்கல் செயற்திட்ட அலுவலகத்திற்கு அலுவலக உபயோகத்திற்காக நாளாந்த வாடகை அடிப்படையில் வாகன சேவையினை பெற்றுக் கொள்ளல்.

வடக்கு மாகாண சபையின் விவசாய நவீன மயமாக்கல் செயற்திட்ட அலுவலகத்திற்கு நாளாந்த வாடகை அடிப்படையில் வாகன சேவையினை பெறல் நோக்கத்திற்காக கேள்வி அறிவித்தல் மாகாண பிரதி திட்ட பணிப்பாளர் அவர்களினால் கோரப்படுகிறது.

இச் சேவையினை வழங்கவுள்ள வழங்குநர்கள் இவற்றிற்கான விண்ணப்பப் படிவத்தினை இல. 127, கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள விவசாய நவீன மயமாக்கல் செயற்திட்ட அலுவலகத்தில் 26.08.2019 ஆம் திகதியிலிருந்து 02.09.2019 ஆம் திகதி வரை அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். முழுமையாக பூரணப்படுத்திய கேள்வி ஆவணங்கள் 09.09.2019 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் எமது அலுவலகத்திற்கு பதிவுத்தபாலிலோ / நேரடியாகவோ கிடைக்குமாறு அனுப்பி வைக்கவும்.

மாகாண பிரதி திட்ட பணிப்பாளர்,
விவசாய நவீன மயமாக்கல் செயற்திட்டம்,
வடக்குமாகாணம்.

(IN 11031)(14.17)

# INVITATION FOR BID
# DISTRICT SECRETARIAT MULLAITIVU

1. **The Chairman, Procurement Committee, District Secretariat, Mullaitivu on behalf of the Government Agent/ District Secretary, Mullaitivu** now invites sealed bids from eligible and qualified bidders for the Construction work described in the table below.
2. Bidding will be conducted through **National Competitive bidding** however, **limited to the bidders who registered within the administrative boundary of the Northern Province as per the Public Finance Circular No. 04/2016 (i) dated 30th September 2016**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been black listed and shall be registered in the field of building construction for the Construction Industry Development Authority (CIDA), valid until the date of closing of the bids. Further the registration should be valid at the date of award.
4. Qualifications requirements are indicate in section 4 of the Bidding document. Additional details are provided in the schedule/Bidding Date & Contract Date.(Section-5)
5. Interested bidders may obtain further information from the **Procurement Branch, District Secretariat, Mullaitivu.** And inspect the Bidding Documents at the same address on any working days from **9.00 hrs to 15.00 hrs from21.08.2019.**
   Contact numbers are: phone:-0212290096 Fax 021 229 0045.
6. A Complete set of Bidding Documents in English language could be purchased by interested bidders on the submission of a written application to the **Procurement Branch, District Secretariat, Mullaitivu from21.08.2019** until **03.09.2019** from **9.00 hrs** to **15.00 hrs** upon payment of a non- refundable fees mentioned in the table below. The method of payment should be by cash.
7. Sealed bids shall be(Original& Duplicate) sent by registered post addressed to the **Chairman, Procurement Committee, District Secretariat, Mullaitivu** or deposited in the Tender Box available at the **Government Agent Office, District Secretariat, Mullaitivu** on or before**15.00 hrs on 04.09.2019**Late bids will be rejected, Bidders should write the job description and bid No. on the top left hand corner of the envelope. Bids will be opened soon after closing in the presence of the bidders or bidders representatives who choose to attend.
8. Pre bid conference will be held at Board Room commencing at **15.00** hrs on **29.08.2019.**
9. Bid shall be accompanied by bid security as per the information given in the table.

| Bid No | Description of work | Estimated amount(Rs in(million) (Excluding Vat) | Contract Period | Required Grade | Nonrefundable fees (Rs) | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs) | Valid Period |
| MU/KAC/PRO/ENG/CAP2019/04 | Renovation of Meteorological Office at Mullaitivu. | 3.31 | 60 Days | C8& C7 (Buildings) | 2000.00 | 35,000.00 | 03.12.2019 |
| MU/KAC/PRO/ENG/CAP2019/05 | Land Improvement and Fencing at Meteoroligical Office Mullaitivu. | 2.30 | 45 Days | C8& C7 (Buildings) | 2000.00 | 25,000.00 | 03.12.2019 |
| MU/KAC/DPS/2019/16 | Reconstruction of Pathukan Bridge at Katsilaimadu in Muthuiyankaddu, Mullaitivu. | 31.65 | 90 Days | C5 & C4 (Bridge) | 4000.00 | 320,000.00 | 30.12.2019 |
| MU/KAC/DPS/2019/17 | Construction of Classroom Building for Mu/Helambawewa Primary School. | 6.88 | 90 Days | C7& C6 (Buildings) | 4000.00 | 70,000.00 | 16.12.2019 |
| MU/KAC/DPS/2019/18 | Rehabilitation of Metaling & Taring on Maliga Paddy Road at Oddusuddan Mullaitivu | 8.09 | 60 Days | C7& C6 (Highway) | 4000.00 | 82,000.00 | 16.12.2019 |
| MU/KAC/DPS/2019/19 | Construction of Bund in Ralkulam Veethy-Bund Work. | 6.65 | 60 Days | C7& C6 (Irrigation) | 4000.00 | 68,000.00 | 16.12.2019 |
| MU/KAC/DPS/2019/20 | Construction of Manikapuram GHC at Puthukkudiyiruppu MOH area Puthukkudiyiruppu DS Division. | 3.44 | 60 Days | C8& C7 (Buildings) | 2000.00 | 35,000.00 | 03.12.2019 |
| MU/KAC/DPS/2019/21 | Construction of Manakandal GHC at Puthukkudiyiruppu MOH area Puthukkudiyiruppu DS Division. | 4.30 | 60 Days | C8& C7 (Buildings) | 2000.00 | 45,000.00 | 03.12.2019 |
| MU/KAC/DPS/2019/22 | Construction of Mallavi GHC at Mallavi MOH area Thunukkai DS Division. | 4.30 | 60 Days | C8& C7 (Buildings) | 2000.00 | 45,000.00 | 03.12.2019 |
| MU/KAC/DPS/2019/23 | Construction of GHC with staff quarters at kokkuthoduvai, mullaitivu. | 6.82 | 90 Days | C7& C6 (Buildings) | 4000.00 | 70,000.00 | 16.12.2019 |

Mrs.R.Ketheeswaran,
Chairman,
Departmental Procurement Committee
District Secretariat, Mullaitivu District.

(IN 11028)(14.17)

# பழைய முறையில் மாகாணத் தேர்தல் தனிநபர் சட்ட வரைவு நாடாளுமன்றில்

**யாழ்ப்பாணம், ஓக. 21**

**மாகாண சபைத் தேர்தலைப் பழைய தேர்தல் முறைமையில் நடத்த வேண்டும் என்ற தனிநபர் சட்ட வரைபு ஒன்றைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் நாடாளுமன்றில் சமர்ப்பித்துள்ளார்.**

மாகாண சபைகளின் ஆயுள்காலம் முடிந்துள்ளபோதும் அவற்றுக்கான தேர்தல்களை நடத்தப்படவில்லை. சட்டநெருக்கடிகள் காரணமாகவே தேர்தலை நடத்த முடியாதுள்ளது என்று கூறப்படுகின்றது.

மாகாணசபைத் தேர்தல் முறைமை தொகுதி மற்றும் விகிதாசாரம் கலந்த முறைமைக்கு 2017ஆம் ஆண்டு மாற்றப்பட்டிருந்தது. புதிய முறைமையில் தேர்தல் நடத்தப்பட வேண்டுமாயின் தொகுதிகள் பிரிக்கப்பட்டு எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்பட வேண்டும். அது தொடர்பாக நியமிக்கப்பட்ட ஆணைக் குழு தனது அறிக்கையை சமர்ப்பித்திருந்த போதும் அது நாடாளுமன்றில் நிறைவேற்றப்படவில்லை. அதன்பின்னர் எல்லை நிர்ணயம் இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை. அதனால் பழைய மற்றும் புதிய முறைமைகளில் தேர்தலை நடத்த முடியாத நிலைமை உள்ளது.

அதையடுத்தே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தனிநபர் சட்ட வரைபை நாடாளுமன்றில் சமர்பித்துள்ளார். பழைய முறைமையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான சட்டத் திருத்த வரைபே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த தனிநபர் சட்டவரைபு இந்த மாதம் நடைபெறும் நாடாளுமன்ற அமர்வுகளில் எடுத்துக்கொள்ளப்படுவதற்கான வாய்ப்புக்கள் குறைவு என்றும், அடுத்த மாத ஆரம்பத்தில் நடக்கும் நாடாளுமன்ற அமர்வுகளின்போது எடுத்துக்கொள்ளப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை பழைய தேர்தல் முறைமையில் மாகாணத் தேர்தல்களைத் தற்போது நடத்த முடியுமான என்ற கருதுகோள் ஆணை ஒன்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன சார்பாகச் சட்டமா அதிபரால் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அது தொடர்பாக நாளை மறுதினம் உயர் நீதிமன்று ஆராயவுள்ளது. (எ-105)

## சிறுமியைக் கடத்த முயன்ற குற்றச்சாட்டில் 11 பேர் கைது

வவுனியா, ஓக. 21

பதின்ம வயது யுவதி ஒருவரைக் கடத்த முயன்றனர் என்ற குற்றச்சாட்டில் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா, புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா வடக்கு, காஞ்சிராமோட்டையில் உள்ள 17 வயதுச் சிறுமி ஒருவரை வாகனத்தில் வந்து கடத்த முயன்றனர் என்றும் - கிராம மக்களின் உதவியுடன் அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் - பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் நடந்துள்ளது. ஹைஏஸ் வாகனம் மற்றும் முச்சக்கர வண்டியில் வந்தவர்கள் சிறுமியைக் கடத்திக் கொண்டு சென்றனர் என்றும், கிராம மக்கள் தகவல் வழங்கியதை அடுத்து, பொலிஸாரும் கிராம மக்களும் இணைந்து அவர்களை மடக்கிப் பிடித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் வவுனியா, ஆச்சிபுரத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (எ-ரி4)

## கோத்தாவுக்கு பதில் சிரந்தியா? கொழும்பு அரசியலில் பரபரப்பு

யாழ்ப்பாணம், ஓக. 21

பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராக மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாய ராஜபக்சவுக்கு பதிலாக இறுதி நேரத்தில், மகிந்த ராஜபக்சவின் துணைவியாரான சிரந்தி ராஜபக்சவே களமிறங்குவார் என்ற பேச்சுக்கள் கொழும்பு அரசியலில் பேசப்பட்டு வருகிறது.

அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திமா கமகேயும் இவ்வாறான கருத்தைத் தெரிவித்துள்ளார். அரச தலைவர் தேர்தல் தொடர்பான பேச்சுக்கள் இடம்பெற்றபோது, பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளராக பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாய ராஜபக்ச, எதிர்க்கட்சித் தலைவரும், பொதுமக்கள் முன்னணியின் தலைவருமான மகிந்த ராஜபக்சவால் அறிமுகப்படுத்தப்பட்டார். மகிந்த ராஜபக்ச மீண்டும் அரச தலைவர் வேட்பாளராகப் போட்டியிட முடியாத சூழலில் கோத்தபாய வேட்பாளராக அறிமுகப்படுத்தப்பட்டார். அவரது இரட்டைக் குடியுரிமை தொடர்பாக சர்ச்சைகள் நிலவுகின்ற நிலையில் அவர் அது தொடர்பாக இதுவரை வாய் திறக்கவில்லை என்றும், கடந்த தேர்தலின்போதும் அவர் சட்ட விரோதமாகவே வாக்களித்தார் என்றும் கொழும்பு அரசியலில் பரவலாகப் பேசப்படுகிறது. அமெரிக்கா அண்மையில் வெளியிட்ட அமெரிக்கக் குடியுரிமையைத் துறந்தோர் பட்டியலிலும் கோத்தபாயவின் பெயர் இடம்பெறவில்லை. அதனால் கோத்தபாய ராஜபக்ச அரச தலைவர் வேட்பாளராக களமிறங்க முடியாது போனால் மகிந்த ராஜபக்ச தரப்பில் இருந்து களமிறங்குவதற்காக எஞ்சியுள்ள நபராக சிரந்தி ராஜபக்சவே காணப்படுகிறார். அதனால் இறுதி நேரத்தில் அவர் அரச தலைவர் வேட்பாளராகக் களமிறக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

அண்மையில் செய்தியாளர்களைச் சந்தித்த அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவும் சிரந்தி ராஜபக்ச களமிறக்கப்படலாம் என்று கூறியிருந்தார்.

நேற்றுச் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திமா கமகேயும் அப்படியான கருத்தையே முன்வைத்தார். முன்னாள் பாதுகாப்புச் செயலர் மீது குற்றச்சாட்டுக்கள் உள்ளன. அந்தக் குற்றச்சாட்டுக்கள் மீதான வழக்குகள் நிலுவையில் உள்ளன. இவ்வாறானதொரு சூழ்நிலையில் பொதுமக்கள் முன்னணியின் அரசதலைவர் வேட்பாளராக கோத்தபாயவை அறிவித்திருந்தாலும் தேர்தல் நெருங்கியவுடன் முன்னாள் அரசதலைவரின் மனைவி சிராந்தி ரஜபக்சவே தேர்தலில் களமிறங்குவார் என்று அவர் தெரிவித்தார். (எ-21)

## மைத்திரியைச் சந்தித்தார் முன்னாள் தளபதி மகேஸ்

கொழும்பு, ஓக. 21

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் மகேஸ் சேனநாயக்க அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது, முன்னாள் இராணுவத் தளபதியின் சேவைகளை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பாராட்டினார் என்று அரச தலைவர் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் இராணுவத் தளபதியால் அரச தலைவருக்கு நினைவுச் சின்னம் ஒன்றும் வழங்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)



## அமெரிக்க நாட்டவரிடம் கோண்டாவிலில் வழிப்பறி

யாழ்ப்பாணம், ஓக. 21

யாழ்ப்பாணம், கோண்டாவில் பகுதியில் அமெரிக்க நாட்டவர் ஒருவரிடம் இருந்து பணம் பறிக்கப்பட்டுள்ளது என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு அமெரிக்க நாட்டவர் ஒருவர் சுற்றுப்பயணம் வந்துள்ளார். அவர் நேற்று மதியம் கோண்டாவில் பகுதியில் சென்றுள்ளார். அப்போது உந்துருளியில் அவரைப் பின்தொடர்ந்து வந்த இளைஞர்கள் இருவர் அவரிடம் இருந்து 300 டொலரைப் பறித்துக் கொண்டு தப்பியோடினர் என்று கூறப்படுகின்றது.

அதையடுத்து அந்த அமெரிக்க நாட்டவர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். முறைப்பாட்டை அடுத்துப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-ரி1)

## அனந்தியின்மீதும் விரைவில்வழக்கு!

### டெனீஸ் கூறுகின்றார்

வவுனியா, ஓக. 21

வடக்குமாகாண முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரனுக்கு எதிராக அவதூறு வழக்குத் தொடரவுள்ளேன் என்று வடக்குமாகாண முன்னாள் அமைச்சர் பா. டெனீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வெலி ஓயாப் பகுதியில் இருக்கின்ற சிங்கள குடும்பங்கள் வாழும் பகுதியில் உள்ள குளம் ஒன்றில் மீன்குஞ்சு விடப்பட்டத்தில் மோசடி செய்தேன் என்றும், வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளின்போது பேருந்துத் தரிப்பிடம் அமைக்கும்போது மோசடி இடம்பெற்றது என்றும், மாவீரர் மற்றும் போராளிகளுக்கான வேலைத் திட்டத்தில் ஊழல் நடந்தது என்பன போன்ற குற்றசாட்டுக்களை வடக்கு மாகாண உறுப்பினர் அனந்திசசிதரன் முன்வைத்திருந்தார். நான் அது தொடர்பான விசாரணைக்குச் சென்றதுடன், அவை தொடர்பாகப் பதிலளித்தும் உள்ளேன். குற்றச்சாட்டுக்குப் பதிலளித்த பின்னரும், குற்றச்சாட்டுக்களை முன்வைத்த அனந்திசசிதரன் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. விசாரணைக் குழு பல தடவைகள் அழைத்தும் அவர் அங்கு முன்னிலையாகவுமில்லை. அதனால் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளேன் -என்றார். எ-ரி4)

## கனடாவும் போர்க்கொடி

கொழும்பு, ஓக. 21

இலங்கையின் புதிய இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள சவேந்திர சில்வாவுக்கு எதிராக நம்பகத் தன்மை மிக்க குற்றச்சாட்டுகள் உள்ளன என்று கனடா தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான கனடாவின் தூதரகம் இதனை தெரிவித்துள்ளது. சவேந்திர சில்வாவின் நியமனம் குறித்து ஆழ்ந்த கவலையடைந்துள்ளதாக தூதரகம் தெரிவித்துள்ளது.

அவரது நியமனம் நல்லிணக்க மற்றும் பொறுப்புக்கூறும் முயற்சிகளை பாதித்துள்ளது என்றும் கனடா தெரிவித்துள்ளது. சவேந்திர சில்வாவின் நியமனம் தொடர்பில் அமெரிக்கா, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், ஐ.நா. பொதுச்செயலர் ஆகியோர் கண்டனங்களை வெளியிட்டிருந்தனர். இதன் வரிசையிலேயே கனடாவும் இணைந்துள்ளது. (ஒ.5)

## ரிசாத் வீட்டில் சோதனை

கொழும்பு, ஓக. 21

நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். பி. திசாநாயக்க செய்த முறைப்பாடு ஒன்றையடுத்து புத்தளத்தில் உள்ள அமைச்சர் ரிசாத் பதியுதீனின் வீடு சோதனையிடப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். அங்கு ஆயுதங்கள் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டிருந்தபோதும், சோதனையின்போது அவ்வாறான பொருள்கள் எவையும் மீட்கப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ)

## தமிழ் மக்கள்...

யின் அரச தலைவர் வேட்பாளராக அநுரகுமார திசாநாயக்க கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிவிக்கப்பட்டார். தமிழ் மக்களின் முக்கிய பிரச்சினைகள் தொடர்பில் அரச தலைவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட கூட்டத்தில் அநுரகுமார எந்தவொரு கருத்துக்களையும் வெளியிட்டிருக்கவில்லை. இந்த விடயங்கள் தொடர்பில் அவரின் நிலைப்பாடு என்ன என்று, அநுரகுமாரவிடம் 'உதயன்' வினவியது.

அவர் தெரிவித்ததாவது:

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் ஒன்றில் சாகடிக்கப்பட்டிருக்கலாம் அல்லது சிறையில் அடைக்கப்பட்டிருக்கலாம். சாகடிக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கு இறப்புச் சான்றிதழ் வழங்கவேண்டும். சிறையில் அடைக்கப்பட்டிருந்தால் அவர்கள் தொடர்பான விவரங்களை உறவினர்களுக்கு வழங்கவேண்டும்.

போர்க்காலத்தில் இராணுவத்தின் தேவைக்காக மக்களின் காணிகளை எடுத்தமை நியாயமானது. போர் முடிவுக்கு வந்த பின்னர் நாட்டில் சமாதானம் ஏற்பட்டுள்ள நிலைமையில், மக்களின் காணிகளை அவர்களிடமே மீளக் கையளிக்கவேண்டும்.

**அரசியல் கைதிகள்**

சந்தேகத்தில் கைது செய்வது ஏற்றுக் கொள்ளக் கூடியது. அவர்கள் இழைத்த குற்றங்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும். கைது செய்யப்பட்டவர் குற்றவாளி என்றால் தண்டனை வழங்கலாம். குற்றமற்றவர் என்று இனங்காணப்பட்டால் அவர் விடுவிக்கப்பட வேண்டும். அவர்களை ஆண்டுக்கணக்கில் சிறைகளில் தடுத்து வைத்திருப்பது சட்டவிரோதம் என்றார்.

இதேவேளை, 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் அவரிடம் கேட்டபோது, பின்னர் பேசுவோம். வடக்கு மக்களும் ஆதரவு தரும் ஒரு கட்சியை தெற்கிலே உருவாக்குவோம். பிரச்சினைகள் எல்லா இடங்களிலும் உள்ளன. அவற்றுக்குத் தீர்வு காண்பதுதான் எங்கள் கடமை - என்றார். (எ-ஒ5.21)

**பணிப்பெண் தேவை**

யாழ் நகரில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி நின்று பணிபுரிவதற்கு பணிப்பெண் தேவை.

**தொடர்பு:-077 159 6634**

**பணியாளர் தேவை**

யாழ் நகரில் உள்ள விநியோக நிறுவனம் ஒன்றிற்கு

- முகாமையாளர்
- கணக்காளர்
- களஞ்சியக் காப்பாளர் தேவை

**077 772 2215**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




விவசாய மற்றும் கமநலக் காப்புறுதி சபையின் திருகோணமலை மாவட்ட உதவிப்பணிப்பாளராக கடமையாற்றிவரும்

**யேசுதாசன் ஏபிரகாம் விக்கிரமசேகரன்**

அவர்கள் கடந்த **21.05.2019** தொடக்கம் மாவட்ட பிரதிப்பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றதைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

உங்கள் சேவை தொடர்ந்தும் மாவட்டத்தின் விவசாயப் பெருமக்களுக்கு சிறந்த முறையில் சென்றடைய வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:
J.S.யேசுதாசன் - தந்தை,
Dr.செல்லையா சிறீதரன் - மைத்துனர்,
ஜெயச்சித்திரா சிறீதரன் - சகோதரி,
(சட்டத்தரணி) மற்றும் மருமக்கள்.

இல.04.சென் பீற்றர்ஸ் லேன்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(cs.27451) (13.17)

## மரண அறிவித்தல்



தோற்றம் 25 . 12 . 1937 — மறைவு 20 . 08 . 2019

**தங்கமுத்து நடராசா**

ஊரிக்காடு, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட (சிறிதுகாலம் இந்தியாவிலும் வசித்தவருமான) தங்கமுத்து நடராசா நேற்று (20.08.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு - அன்னமுத்து தம்பதிகளின் இளைய புதல்வியும், காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசமணி, செல்லம்மா, பொன்னுக்கண்டு, பொன்னம்பலம், சபாரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2019) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் மயிலியதனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.துரைராசா - 077 797 0522, சி.உத்தரராசா - 076 369 8282,
த.அழகேஸ்வரராசா (பாண்டியன்)- 447 809 719 242,
சி.ஸ்ரீஸ்கந்தராசா - 077 744 0166, த.கணேசராசா - 417 988 73502

(CS/27508)(13.17)

## முஸ்லிம்...

ளது என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் பொதுமக்கள் முன்னணியில் இருந்து முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் கோத்தபாய ராஜபக்சவும், மக்கள் விடுதலை முன்னணியில் இருந்து அநுரகுமார திஸநாயக்கவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி, மற்றும், சுதந்திரக் கட்சியிடம் இருந்து இதுவரை உத்தியோகபூர்வமான அறிவித்தல்கள் வரவில்லை. இம்முறை அரச தலைவர் தேர்தலில் பல முனைப் போட்டிகள் இடம்பெறவுள்ள நிலையில் வாக்குகள் சிதைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது முஸ்லிம் தரப்பிலிருந்தும் ஒருவரை அரச தலைவராக்கும் பேச்சுக்களும் வெளிக்கிளம்பியுள்ளன. எதிர்வரும் அரசதலைவர் தேர்தலில் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவைப் போட்டியிடுமாறு சபாப் குழுமம் வேண்டுகோள் விடுத்துள்ளது. அந்த குழுமத்தின் தலைவர் எம்.ஐ.எம்.நாசர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் சிறுபான்மைச் சமூகத்தின் சார்பில் ஒருவர் வேட்பாளராகக் களமிறங்க வேண்டும். இதற்காக கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவைக் களமிறங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். அண்மைக்காலமாக இலங்கையிலுள்ள முஸ்லிம் சமூகம் பல்வேறு நெருக்கடிகளுக்கு ஆளாகிவரும் நிலையில் இலங்கை முஸ்லிம் சமூகத்தின் தனித்துவத்தையும் ஆதரவையும் வெளிப்படுத்தும் வகையில் முஸ்லிம் சமூகத்தின் சார்பில் ஒருவர் அரச தலைவர் வேட்பாளராகப் போட்டியிட வேண்டும். இதற்குப் பொருத்தமானவராக கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா காணப்படுகின்றார். கடந்த காலங்களில் இந்த நாட்டை ஆட்சி செய்த இரண்டு முதன்மைக் கட்சிகளும் முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகளுக்காக சரியான சட்ட நடவடிக்கைகளை எடுக்கவில்லை. இந்த வகையில் எமது சமூகத்தின் பிரச்சினைகளையும் உரிமையையும் சொல்வதற்காக பன்னாட்டு மட்டத்துக்குத் தெரியப்படுத்துவதற்காக ஒரு முஸ்லிம் வேட்பாளர் களமிறங்க வேண்டும். இதற்காக எதிர்வரும் தேர்தலில் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவை வேட்பாளராகப் போட்டியிடுமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம் என்று அவர் கோரியுள்ளார்.

இதேவேளை, கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட்டும் அது தொடர்பான கருத்தொன்றை முன்வைத்துள்ளார். எந்தவொரு அரச தலைவர் வேட்பாளரும் இம்முறை 50 சதவீத வாக்குகளைப்பெறப் போவதில்லை. சிறுபான்மை மக்களின் வாக்குகளே அரசதலைவர் யார் என்பதை உறுதி செய்யப்போகின்றன. எனவே முஸ்லிம் மக்கள் தமது சக்தி எத்தகையது என்பதை வெளிக்காட்டும் விதத்தில் அரசதலைவர் வேட்பாளராக முஸ்லிம் ஒருவரை நிறுத்தி அவருக்கு ஒட்டுமொத்தமாக தமது முதலாவது வாக்கை அளிக்கவேண்டும்.

இரண்டாவது வாக்கை முஸ்லிம்களின் கோரிக்கைகளை ஏற்று அதற்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் செயற்படக்கூடிய வேட்பாளருக்கு வழங்கவேண்டும். இத்தகைய நடவடிக்கையே சமகால அரசியல் போக்கில் முஸ்லிம்களுக்கு சிறந்த பெறுபேற்றைத்தரும் என நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

(எ-ம-21)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 01 . 11 . 1940 — மறைவு 22 . 07 . 2019

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்ற

திருமதி **முத்துத்தம்பி அன்னலட்சுமி**

திதி: அபரபட்ச பஞ்சமி (22.07.2019

சித்திவிநாயகர் கோயில்,
உடுவில் தெற்கு, மானிப்பாய்.
077 332 2192, 021 225 6517

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(1.21(039)) (13.17)

## பிஸ்கட்டைக்...

ரையே இராணுவத் தளபதியாக நியமித்திருக்கிறார் அரசதலைவர். வடக்கு - கிழக்கில் தமிழர்களை போர் வரையறைக்குள் - இராணுவப் பிடிக்குள் வைத்திருப்பதற்கான செய்தியே அது. உலக அரங்கில் 20ஆம் நூற்றாண்டின் இனப்படுகொலைகளை செய்த சவேந்திர சில்வாவை இராணுவத் தளபதியாக நியமித்துள்ளீர்கள். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனுக்கு பிஸ்கட் கொடுத்து சுட்டுக் கொன்றவர் இவர். இசைப்பிரியாவை சுட்டுக் கொன்றவரும் இவர் தான். தமிழர்களான நாங்கள் அவரின் நியமனத்தை ஏற்கவில்லை என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் குறிப்பிட்டுள்ளார்.

போர்க்குற்றவாளி என இனங்காணப் பட்டுள்ள மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நேற்றுமுன்தினம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் இலங்கை இராணுவத் தளபதியாக நியமிக்கப் பட்டார். அவருடைய நியமனம் தொடர்பில் தமிழ்த் தரப்பினர், மற்றும், .அமெரிக்க ஐரோப்பிய நாடுகள் கடும் கண்டனங்களை வெளியிட்டு வருகின்றன. இவ்வாறான நிலையில் நேற்று இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் சிறீதரனும் இந்தக் கருத்தை முன்வைத்தார்.

(21)

# 1st year Remembrance



Born 07 . 02 . 1930 — Called to rest 21 . 08 . 2018

**Rev. Sr. Mary James Mariampillai (A.C)**

One year has flown in a jet speed since we lost a precious gem
You had set an example for all leaders and mothers in every way
Now you are enjoying well-deserved heavenly banquet and
All the saints and angels are endearingly spelling out your name
You were a master piece of God because we saw only in you
the optimum mixture of 'kind-hearted soul', 'Iron Lady' and 'Lady - King Solomon'

**Sadly missed and fondly remembered by**

Your ever loving nephew

**69/2, Vembadi Road, Jaffna**

**Mr.Reynold Edward &Family**
**077 903 7264, 021 221 9638**

# மன்னார் சமுர்த்தி பட்டியலில் 2,800 பேரின் பெயர்கள் நீக்கம்

## தகுதியற்றோர் என கண்டுபிடித்ததால் மாவட்டச் செயலகம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக.21

**மன்னார் மாவட்டத்தில் புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள சமுர்த்திப் பயனாளிகள் பட்டியலில் புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்தோர் உட்பட 2 ஆயிரத்து 800 பேரின் பெயர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று மாவட்டச் செயலக அதிகாரி தெரிவித்தார்.**

மன்னார் மாவட்டத்தில் புதிதாக 10 ஆயிரத்து 110 பேர் புதிதாக சமுர்த்தித் திட்டத்துக்குள் உள்வாங்கப்பட்ட நிலையில் அவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த ஜூன் மாதம் 9ஆம் திகதி சமுர்த்தி அமைச்சர் தயா கமகே தலைமையில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் உரையாற்றியிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், மன்னார் மாவட்டத்தில் வசிக்காத பலருக்குத் தற்போது சமுர்த்தி வழங்கப்பட்டுள்ளது. புதிதாக 10 ஆயிரத்தை தாண்டிய மக்களுக்கு மன்னாரில் சமுர்த்தி வழங்கப்படுவது மகிழ்ச்சியான விடயம். ஆனால் உப்புக்குளத்தில் தனித்து வாழும் ஒரு தாயாருக்கு இந்தச் சந்தர்ப்பம் மறுக்கப்படும் அதே நேரம் இந்த மாவட்டத்தில் வாழாத 120 குடும்பங்களுக்கு அதே கிராமத்தில் வழங்கப்படுகின்றது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

உப்புக்குளத்தில் தேர்வான அந்த 120 குடும்பங்களும் புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றே கூறப்படுகின்றது. இந்த மாவட்டத்தில் வாழும் எந்த சமூகத்தவர்களிலும் உள்ள வறிய மக்களுக்கு வழங்குங்கள். மாவட்டத்தில் வாழாத மக்களுக்கு வழங்கி, மாவட்ட மக்களுக்கு துரோகம் இழைக்க வேண்டாம். புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு வழங்குவது தொடர்பில் உரிய நடவடிக்கை வேண்டும் என்று கூறியிருந்தார்.

இது தொடர்பாக ஆராயப்படும் என்று மாவட்டச் செயலகத்தினர் தெரிவித்திருந்து நிலையில், இது தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று வினவியபோதே மாவட்டச் செயலக அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

மன்னார் மாவட்டத்துக்கு 10 ஆயிரத்து 110 பேருக்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. அந்தப் பட்டியலில் சிலர் வேறு பிரதேச செயலர் பிரிவிலும் சிலர் வேறு மாவட்டத்திலும், சமுர்த்தி பெறுவது கண்டுபிடிக்கப்பட்டது. சிலர் மன்னாரில் வசிக்காது புத்தளத்தில் வசிப்பதும் கண்டறியப்பட்டது. சில அரச அலுவலர்களின் குடும்பங்களும் இதில் உள்வாங்கப்பட்டிருந்தன. இவ்வாறு 2 ஆயிரத்து 800 பேர் வரையில் இனங்காணப்பட்டனர். அவர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. எஞ்சிய தகுதியானவர்களுக்கு மட்டும் தற்போது சமுர்த்தி முத்திரை வழங்கப்பட்டுள்ளது - என்றனர். (எ-105)

# இலங்கையின் செயற்பாடுகள் உலகுக்கு முன்னுதாரணமாம்

## யசுஷி அகாஷி புகழாரம்

கொழும்பு, ஒக. 21

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலின் பின்னரான இலங்கையின் செயற்பாடுகள் உலகத்துக்கே முன்னுதாரணமாகும் என்று தெரிவித்துள்ள இலங்கைக்கான முன்னாள் ஜப்பான் சிறப்புப் பிரதிநிதி யசுஷி அகாஷி கொடிய பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் அதேவேளை, நாட்டில் இனங்களுக்கிடையிலான சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும் நிலைநாட்ட இலங்கையால் முடிந்துள்ளமை உலகின் ஏனைய நாடுகளுக்கு சிறந்த படிப்பினையாகும் என்றும் கூறியுள் ளார்.

அரசதலைவர் செயலகத்தில் நேற்றுக்காலை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு கூறினார் என்று அரச தலைவரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அரச தலைவரின் ஊடகப் பிரிவு அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது;

நேற்று முன்தினம் பிற்பகல் பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற தேசிய விருது விழாவில் இலங்கைக்கும் பொதுவாக மனித குலத்துக்கும் ஆற்றிய உன்னத சேவையைப் பாராட்டும் முகமாக இலங்கையர் அல்லாதவர்களுக்கு வழங்கப்படும் சிறிலங்கா ரத்ன விருது ஜப்பான் நாட்டவரான யசுஷி அகாஷிக்கு வழங்கப்பட்டது. இலங்கையில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்காக யசுஷி அகாஷி மேற்கொண்ட பெரும் முயற்சிகளுக்கு அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன இதன்போது அவருக்கு நன்றியைத் தெரிவித்தார்.

உலக சமாதானத்தை உறுதி செய்யும் செயற்பாடுகளில் தொடர்ந்தும் ஈடுபடுவதற்கான வலிமையும் - தைரியமும் - நீண்ட ஆயுளும் அவருக்கு கிடைக்க வேண்டுமென வாழ்த்துத் தெரிவித்த மைத்திரி, இலங்கைக்கும் ஜப்பானுக்குமிடையிலான நட்புறவை மேம்படுத்துவதற்காக அவர் ஆற்றிய பணிகளையும் வெகுவாகப் பாராட்டினார்.

தமக்கு அளிக்கப்பட்ட இந்த மதிப்புக்காக அரச தலைவருக்கும், ஒட்டுமொத்த இலங்கையர்களுக்கும் நன்றி தெரிவித்த யசுஷி அகாஷி, ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையே பல ஒற்றுமைகள் காணப்படுவதுடன், பௌத்த தர்மம் இரு நாடுகளுக்குமிடையிலான நட்புறவை உறுதிப்படுத்தும் சிறப்பு அம்சமாகும் எனத் தெரிவித்தார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, ஜப்பானிய தூதுவர் அகிரா சுகியாமா மற்றும் அரச தலைரின் மேலதிக செயலர் எசெல வீரக்கோன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்-என்றுள்ளது. (எ-21)



# மருத்துவரை விடுவிக்கக்கோரி பளையில் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக.21

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட பளைப் பிரதேச மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவ அதிகாரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும்-பளைப் பிரதேச மருத்துவமனைக்கு பதில் மருத்துவர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்றும் - வலியுறுத்தி நேற்று கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

பளைப் பிரதேச மருத்துவமனையின் நோயாளர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அதில் பிரதேச மக்களும் கலந்து கொண்டனர்.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யட்ட மருத்துவ அதிகாரியை விடுவிக்க வேண்டும். மருத்துவமனைக்குச் சிகிச்சைக் காக வந்த மக்கள் மருத்துவர் இல்லாது திரும்பிச் செல்லும் நிலை உள்ளது. இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். பதில் மருத்துவர் ஒருவ்ரை நியமிக்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.

பளை பிரதேச மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவ அதிகாரி கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார். அவர் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டிலேயே கைது செய்யப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது. (எ-6,35)

# காங்கேசன்துறைக்கு புதிய எஸ்.பி.

யாழ்ப்பாணம், ஒக.21



காங்கேசன் துறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சராக டபிள்யூ.பி.ஜே.சேனாதிரா நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனது கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றார். முன்னர் இந்தப் பதவியில் இருந்த புத்தி உடுகமசூரிய காலிக்கு இடமாற்றப்பட்டதை அடுத்தே டபிள்யூ.பி.ஜே.சேனாதிரா நியமிக்கப்பட்டுள்ளார். (எ-26)

# "என்ரபிறைஸ் சிறிலங்கா" நடமாடும் சேவை விரைவில்

## ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக.21

நிதி அமைச்சின் ஏற்பாட்டில் அடுத்த மாதம் யாழ்ப்பாணத்தில் நடக்கவுள்ள "என்ரபிறைஸ் சிறிலங்கா" நடமாடும் சேவைக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சின் ஏற்பாட்டில் "என்ரபிறைஸ் சிறிலங்கா" நடமாடும் சேவை நாடு முழுவதும் முன்னெடுக்கப்படுகின்றது. அதன் முதலாவது நடமாடும் சேவை கடந்த ஜூலை மாதம் 27ஆம் திகதி அநுராதபுரத்தில் நடைபெற்றது. அதன்போது யாழ்ப்பாணத்தில் நடைபெறும் நடமாடும் சேவை தொடர்பாக அறிவித்தல் விடுக்கப்பட்டது.

இது தொடர்பாக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் தெரிவித்ததாவது:

இந்த நடமாடும் சேவை நடைபெறும் மாவட்டத்திடம் அதற்கான அடையாளச் சின்னம் கையளிக்கப்படுவது வழமை. எமக்கான அடையாளச் சின்னம் அநுராதபுரத்தில் எம்மிடம் கையளிக்கப்பட்டது. 3ஆவது நடமாடும் சேவை எமது மாவட்டத்தில் நடக்கவுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் அனைத்து நன்மைகளையும் நடமாடும் சேவையில் பெற்றுக்கொள்ள முடியும்.

நடமாடும் சேவையில் நிதி அமைச்சுக்கு உட்பட்ட திணைக்களங்களும், அதனோடு இணைந்த அதிகாரிகளும் கலந்து கொள்வார்கள். அமைச்சின் செயலர் மற்றும் அமைச்சர்களும் கலந்துகொள்வார்கள். யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக இந்த நடமாடும் சேவை நடைபெறும்.

இந்த நடமாடும் சேவைக்கான முன்னாய்த்தக் கலந்துரையாடல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடைபெறும். நிதி அமைச்சின் அலுவலர்கள் இதை ஏற்பாடு செய்துள்ளனர். அந்தக் கலந்துரையாடலிலேயே நடமாடும் சேவைக்கான திகதி முடிவு செய்யப்படும் - என்றார். (எ-105)

# புங்குடுதீவில் 16 கிலோ கிராம் கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், புங்குடு தீவுப் பகுதியில் வியாபாரத்துக்கு தயார் நிலையில் வ்வைக்கப்பட்டிருந்த 16 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்று சிறப்புப் போதை தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர். இதனுடன் தொடர்புடைய சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. புங்குடுதீவுப் பகுதியில் நேற்று மு.ப 10 மணியளவில் கஞ்சா மீட்கப்பட்டது என்றும்-வியாபரத்துக்காக வெளி மாவட்டத்துக்குக் கொண்டு செல்வதற்காகப் பொதி செய்யப்பட்ட நிலையில் கஞ்சா கைப்பற்றப்பட்டது என்றும்-பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்கள் வவுனியா மற்றும் மன்னாரைச் சேர்ந்த 27 வயது மற்றும் 41 வயதை உடையவர்கள் என்றும்-கைது செய்யப்பட்டவர்கள் சான்றுப் பொருள்களுடன் ஊர்காவற்றுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-26)

# தமிழ் மக்களின் பிரச்சினையை ஐ.நாவுக்கு கொண்டு செல்வேன்

## சிறப்பு அறிக்கையாளர் அகமட் சஹீட் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 21

தமிழ் மக்களின் பிரச்சினைகள் மற்றும் எதிர்பார்ப்புத் தொடர்பில் தனது அறிக்கையில் குறிப்பிட்டு ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்துக்குக் கொண்டு மசலைவன ஜுவ வாறு தெரிவித்தார் ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு அறிக்கையாளர் அஹமட் சஹீட்.





சமய அல்லது நம்பிக்கை சுதந்திரம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் சிறப்பு அறிக்கையாளர் அஹமட் சஹீட் மற்றும் குழுவினர் நல்லை ஆதீனம், சின்மியா மிசன், சைவ மகா சபை பிரதிநிதிகளை அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது சமயப் பிரதிநிதிகளால் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட் டுள்ளன.

2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த பின்னர் நாம் நல்லிணக்கத்தை எதிர்பார்த்தோம். அதை 2015ஆம் ஆண்டு நல்லாட்சி என்று சொல்லப்படும் அரசு செய்யும் என்று நம்பினோம். ஆரம்பத்தில் அவர்கள் இந்த விடயத்தில் கூடிய கவனத்துடன் செயற்பட்டு வந்தனர். பின்னர் அந்த நடவடிக்கைகள் குறைந்து சென்று விட்டன. காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், காணி சுவீகரிப்பு, இனப் படுகொலை விடயங்களில் எமக்கு நீதி வேண்டும்.

மதங்களைப் பொறுத்தமட்டில் பல்வேறு குழப்பமான நிலைகள் தற்போது காணப்படுகிறன. செம்மலை நீராவியடி பிள்ளையார், கன்னியா வெந்நீரூற்று பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றில் பௌத்த மயமாக்கல் இடம்பெற்று வருகிறது. அத்துமீறிய விகாரை அமைப்பு, சிங்களக் குடியேற்றங்கள் வடக்கில் தொடர்கின்றன.

இவை சமய நல்லிணக்கத்தைக் குலைக்கும். அதேபோன்று வறுமை அறியாமை போன்ற விடயங்களை காரணம் காட்டி ஒரு சமய வகுப்பினர் இன்னொரு சமயத்தை தாழ்த்திப் பேசுதல், மதம் மாற்ற முயற்சித்தல் போன்றவை இடம்பெறுகின்றன - என்று சமயப் பிரதிநிதிகள் குறிப்பிட்ட னர்.

இதையடுத்தே தனது அறிக்கையில் இந்த விடயங்கள் அனைத்தையும் சுட்டிக்காட்டுவேன் என்று குறிப்பிட்டுள்ளார் சிறப்பு அறிக்கையாளர்.

இந்தக் குழுவினர் நல்லூர் கந்தசுவாமி கோவிலில் வழிபாடுகளிலும் ஈடுபட்டதோடு யாழ்ப்பாண சின்மியா மிசனுக்கும் சென்று வதிவிட ஆச்சாரியுடன் மாணவர்களின் ஆன்மிகம் மற்றும் மத நல்லிக்கணம் தொடர்பாக கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# தூக்கில் மீட்கப்பட்ட சடலத்தை உடற்கூறு செய்யுமாறு உத்தரவு

## 21 நாள்களில் பொறுப்பேற்கப்படவில்லையேல் அரச செலவில் அடக்கம் செய்யவும் கட்டளை

சாவகச்சேரி, ஓக. 21

சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி கிறிஸ்தவ சேமக்காலையின் பின்பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்ட ஆணின் சடலத்தை யாழ். போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி மூலம் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை தாக்கல் செய்யுமாறு சாவகச்சேரி நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

தொடர்ச்சியாக அடையாளம் காண எவரும் முன்வராத பட்சத்தில் 21 தினங்களின் பின்னர் சடலத்தை அரச செலவில் அடக்கம் செய்யுமாறும் மன்று மன்றுரைத்தது.

கடந்த 13ஆம் திகதி சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி கிறிஸ்தவ சேமக்காலை அருகில் தூக்கில் தொங்கிய நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்ட ஆணின் சடலம் அடையாளம் காண்பதற்காக சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்தது. கடந்த ஞாயிற்றுக்கிழமை நீதிவானின் பணிப்பின் பேரில் மேலும் அடையாளம் காண்பதற்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

சடலம் நேற்று வரை உறவினர்களால் அடையாளம் காணப்படாத நிலையில் சாவகச்சேரி பொலிஸாரால் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அறிக்கையைப் பார்வையிட்ட பின்னர் சடலத்தை போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி மூலம் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை தாக்கல் செய்யுமாறும் பின்னர் சடலத்தை 21 தினங்கள் அடையாளம் காண்பதற்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வைக்குமாறும் அதுவரை அடையாளம் காணப்படாவிடத்து அரச செலவில் அடக்கம் செய்யுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டது. (ம-9)

# வடக்கு மாகாணத்தில் சிறப்பு தேவையுடையோருக்கு மலசல கூடங்கள் விரைவில்

யாழ்ப்பாணம்,ஓக. 21

வடக்கு மாகாணத்தில் சிறப்பு தேவையுடைவர்களுக்கான மல சல கூடங்கள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மகளிர் விவகாரம் மற்றும் மறுவாழ்வு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

சிறப்பு தேவையுடையவர்களுக்கு சிறப்பாக வடிவமைக்கப்பட்ட மலசல கூடங்கள் அவசியமாகத் தேவைப்படுகிறன.

இதனைக் கருத்தில் கொண்டு சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பெறுமதியான மலசலகூடங்களை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்காக மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியாக 10 மில்லியன் கிடைத்தது. இதில் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட கட்டுமானப் பணிகளில் 31 மலசல கூடங்களின் வேலைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.

இந்த வருடம் 42 மலசல கூடங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. கிடைக்கும் நிதிக்கு அமைவாக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சுமார் 100க்கும் அதிகமான சிறப்பு தேவையுடையோர் தமக்கு மலசல கூடங்களை அமைத்து தருமாறு கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இவற்றுக்கான நிதி கிடைக்கும் பட்சத்தில் அவர்களுக்கும் மலசல கூடங்களை அமைத்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ-7)

# செயலமர்வு

கொழும்புத்துறை, ஓக. 21

"கடந்த காலத்தை ஆற்றுப்படுத்தலும் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புதலும்" என்னும் தொனிப்பொருளில் செயலமர்வு ஒன்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையத்தில் இடம்பெற்றது. யாழ்ப்பாண சமூக செயற்பாட்டு மையம், சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான செயலகம் அனுசரணையில் நடைபெற்றது.

சாவகச்சேரி பிரதேச சபை சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர் திருமதி யோகேஸ்வரி சுரேஸ்குமார் கலந்துகொண்டு செயலமர்வை நெறிப்படுத்தினார். (ஜ-135)

# மாணவர்களுக்கு உதவி

யாழ்ப்பாணம், ஓக. 21

வட இலங்கை சமாதான நீதிவான்கள் சங்கத்தினரும் காங்கேசன்துறை கோட்லன் லயன்ஸ் கழகத்தினரும் இணைந்து கிளிநொச்சி சக்தி கருணை இல்ல மாணவர்களுக்கு அண்மையில் உதவிப் பொருள்களை வழங்கியுள்ளனர். அங்குள்ள மாணவர்களின் தேவைகளை கேட்டறிந்து, வட இலங்கை சமாதான நீதிவான்கள் சங்கத் தலைவர் கலாநிதி கா.பீ. ஜெயவிந்தன் தலைமையிலான குழுவினர் மாணவர்களின் தேவைக்குரிய உபகரணங்களை வழங்கினர். (ம-9)





# அத்துமீறி மீன்பிடித்தனர் என 4 இந்திய மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம், ஓக. 21

யாழ்ப்பாணம், நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் நான்கு இந்திய மீனவர்களை கடற்படையினர் நேற்று அதிகாலை கைது செய்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் தமிழகத்தின் புதுக்கோட்டையைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் பயன்படுத்திய படகை நெடுந்தீவு கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர். கைது செய்த மீனவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ம-ரி1)

# வீதி சீரமைப்பு

கொடிகாமம், ஓக. 21

யாழ்ப்பாணம் மாகியப்பிட்டி சூரியோதய வீதி, மறுமலர்ச்சி வீதி, விஸ்வா மில் வீதி, கொம்பனிப்புல வீதி ஆகியவற்றை இணைக்கும் வீதியின் சீரமைப்பு பணி நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித் தார்த்தனின் 1.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இவ் வீதி சீரமைக்கப்படவுள்ளது. நிகழ்வில் சித்தார்த் தன், வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், வலி.தென்மேற்கு பிரதேசசபை தவிசாளர் அ.ஜெபநேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஜ-159)

# சுகாதார சீர்கேடாக இயங்கி வந்த இரு உணவகங்களை மூட உத்தரவு

வலி.தென்மேற்கு.ஓக. 21

சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கி வந்த இரு உணவகங்களை உடனடியாக மூடுமாறு உத்தரவிட்ட நீதிவான் தண்டனை வழங்குவதற்கான மேல் விசாரணையை ஒத்தி வைத்துள்ளார். மானிப்பாய் பகுதியிலுள்ள உணவகங்களைச் சோதனைக்கு உட்படுத்தியபோது முதன்மை வீதியிலுள்ள இரு உணவகங்கள் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிக்காமல் இயங்கி வந்தமை தெரியவந்தது.

இதையடுத்து உணவகங்களைத் திருத்தியமைப்பதற்கு வசதியாக சுகாதாரப் பரிசோதகர் கே.கேதீஸ்ஸால் 3 மாத கால அவகாசம் வழங்கப்பட்டது. இந்த நிலையில் தொடர்ந்தும் சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கி வந்துள்ளதை அவதானித்த பரிசோதகர், இரு உணவக உரிமையாளர்களுக்கும் எதிராகத் தலா 4 குற்றச் சாட்டுக்கள் சுமத்தி, மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார்.

வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இரு உணவகங்களின் உரிமையாளர்களும் குற்றத்தை ஏற்றுக் கொண்டனர். இதையடுத்து உணவகங்களை மூடுமாறு உத்தரவிட்ட நீதிவான் தண்டனை வழங்குவதற்கான மேல் விசாரணையை ஒத்தி வைத்துள்ளார். (ஜ-115)

# சாரதிக்கு ரூ.25 ஆயிரம் தண்டம் விதிப்பு

சாவகச்சேரி, ஓக. 21

காப்புறுதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சாரதி குற்றத்தை ஒப்புக்கொண்டார். இதனையடுத்து அவருக்குத் தண்டம் விதிக்கப்பட்டது. (ஜ-9)

# எந்த அரச தலைவர் வேட்பாளரையும் தமிழ் மக்கள் ஆதரிப்பதால் பயனில்லை

## இப்படிக் கூறுகிறது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

*யாழ்ப்பாணம், ஓக. 21*

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் போட்டியிடவுள்ள, போட்டியிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்ற வேட்பாளர்கள் அனைவரும் தமிழ் மக்களின் வேணவாக்களுக்கு எதிரானவர்கள். தமிழ்த் தேசத்தின் இருப்புக்கு மாறானவர்கள். இவர்களின் எவர் அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டாலும், அவர்களால் தமிழ் மக்களுக்கு எந்தவொரு நன்மையும் கிடைக்காது.

ஏனவே எந்தவொரு வேட்பாளரையும் தெரிவு செய்யும் முடிவுக்கு தமிழ் மக்கள் செல்வதால் அவர்களுக்கு எந்தப் பயனுமில்லை. இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் கோத்தபாய ராஜபக்சவை தமிழ் மக்கள் ஆதரிக்கவேண்டும் என்று வடகிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்துத் தொடர்பில் ஊடக சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கே கஜேந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரதராஜப் பெருமாள் மக்களை தனது பக்கம் ஈர்க்கின்ற நோக்கோடு ஒரு கருத்தைக் குறிப்பிட்டுள்ளார். தமிழ் மக்களின் விடுதலைக்காக தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டும் போராடவில்லை. தாங்களும் போராடியவர்கள் என்ற தோற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றார். அதற்கு உதாரணமாகத்தான் சிறீதரன், சுரேஷ்பிரேமச்சந்திரன், கருணா, பிள்ளையான், சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் எல்லோரும் தமிழ் மக்களுக்காகப் போராடியவர்கள் என்ற ஏமாற்றுக் கருத்தைக் கூறியிருக்கின்றார். அவர் ஒரு விடயத்தை இந்த இடத்தில் சொல்ல மறந்து விட்டார். தாங்கள் எல்லோரும் இந்த விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக்கொடுத்தவர்கள் என்ற வார்த்தையைச் சேர்த்துக்கொள்ள மறந்துவிட்டார்.

30ஆண்டுகளாக தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களுடைய விடுதலைக்காகப் போராடியபோது இவர் உட்பட இவர் குறிப்பிட்ட அத்தனை தரப்புக்களும் இந்திய மற்றும் இலங்கை இராணுவத்தோடு இணைந்து புலிகளைக் காட்டிக் கொடுத்து சொந்த மக்களைக் கடத்திக் கொலை செய்து கப்பம் பெறுகின்ற செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள்தான்.

இவர்கள் தாம் விடுதலைக்காகப் போராடியவர்கள் என்று கூறுவதற்கு எந்த அருகதையும் அற்றவர்கள். உலகத்திலே விடுதலைக்காகப் போராடுதல் என்பது அடக்குமுறை இராணுவத்தின் ஆக்கிரமிப்பில், அந்த அரசினுடைய பிடியில் இருந்து விடுபடப் போராடு வதுதான் விடுதலைப் போராட்டமே தவிர, அடக்குமுறையாளர்களுக்கும் ஆக்கிரமிப்பாளர்களுக்கும் காட்டிக் கொடுப்பதும்- கூட்டிக் கொடுப்பதும் அவர்களோடு சேர்ந்து கொலைகளைச் செய்வதும் கப்பம் பெறுவதும் ஒரு பொழுதும் விடுதலைக்காகப் போராடுதல் என்று அர்த்தம் அல்ல.

விடுதலைக்காகப் போராடுதல் என்ற அர்த்தத்தை அவருக்கு அருகில் இருப்பவர்கள் எவராவது சொல்லிக் கொடுத்தால் பயனுள்ளதாக இருக்கும்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் ஆயுதப்படைகளின் பாதுகாப்புடன் வலம் வந்தவர்தான் வரதராஜப் பெருமாள். இன்று சுமந்திரன் எப்படி சிறப்பு அதிரடிப் படை பாதுகாப்புடன் வலம் வருகின்றாரோ அதே போன்றே வரதராஜப் பெருமாளும் முன்னர் அத்தகைய பாதுகாப்புக்களை விட அதிகளவு பாதுகாப்புக்களுடன் வலம் வந்திருந்தார் என்பதையும் எங்கள் மக்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் -என்றார். (ஔ.5.ரி1)



# இரு பிரதேச செயலகங்கள் வந்தால் தென்மராட்சியில் துரித அபிவிருத்தி

## சரா எம்.பி நம்பிக்கை

கொடிகாமம், ஓக. 21

தென்மராட்சியில் 60 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளன. இங்கு இரண்டு பிரதேச செயலகங்கள் தேவை. இரண்டு பிரதேச செயலகங்கள் வருமாக இருந்தால் அபிவிருத்திகள் துரித கதியில் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன்.

கொடிகாமம், கச்சாய் முதலாம் ஒழுங்கையைச் சீரமைப்பதற்கான ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது. சாவகச்சேரி பிரதேச சபையின் வட்டார உறுப்பினர் சி.சிவனேசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். அங்கு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பல திசைகளிலும் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு உரித்தான நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். நீங்கள் எல்லோருக்கும் வாக்களித்துள்ளீர்கள். அதனால் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் உதவி மற்றும் அபிவிருத்திகளைச் செய்ய வேண்டிய கடமை உள்ளது. எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் தென்மராட்சியில் 100 வீடுகளைப் பெற்றுக்கொடுக்கவில்லை. ஆனால் நான் பெற்றுக்கொடுத்திருக்கிறேன். ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக தென்மராட்சிக்குச் செய்ய வேண்டியதைவிட அதிகமாகச் செய்திருக்கிறேன்.

தென்மராட்சி 60 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டது.

இரண்டு பிரதேச செயலகம் வருமாக இருந்தால் அபிவிருத்திகளைத் துரித கதியில் இங்கு மேற்கொள்ள முடியும்.

இன்னும் சில அபிவிருத்தித் திட்டங்கள் என்னால் மிக விரைவில் இங்கு ஆரம்பித்து வைக்கப்படும்- என்றார். (ம-159)



# கஞ்சாவுடன் ஒருவர் யாழ். நகரில் கைது

யாழ்ப்பாணம், ஓக.21

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதிப் பகுதியில் ஒன்றரைக் கிலோ கஞ்சாவுடன் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிறப்பு அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இவர் கைது செய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைது ெய்யப்பட்டவர் குருநகர் பகுதியைச் சேர்ந்தவர் என்றும், கைது செய்யப்பட்டுள்ளவர் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்றும் சிறப்பு அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர். (எ-26.ரி1)

# நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 21

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருவிழாவின் பக்தி நிகழ்வுகள் வரிசையில் சிறிலசிறி ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் பஜனை நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. இன்று கோப்பாய் சித்திரவேலாயுதர் அறநெறிப் பாடசாலைச் சமூகத்தினர் வழங்கும் பஜனை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இடம்பெற்று வருகின்ற கந்தபுராண எழுச்சி அருள்நெறியில் இன்று மாலை 6.30 மணிக்கு வணக்கத்திற்குரிய நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குரு முதல்வர், சிறீலசிறி சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் கோப்பாய், சித்திரவேலாயுதர் கோயிற் பிரதம குரு, சிவசிறி பூரண. கீதச்சந்திரக் குருக்கள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.கர்ஜின் தலைமையில், மகளிர் விவகாரம், மறுவாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும், தொழிற்றுறை தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் செயலாளர் ஆர். வரதீஸ்வரன் முதன்மை விருந்தினராகவும், வடக்கு மாகாண உதவி முதன்மைச் செயலர் உ.தர்சினி சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்க நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

வேலணைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நயினாதீவு சிறி நாகபூசணி அமுதசுரபி இந்து அறநெறிப் பாடசாலை, மடத்துவெளி முருகன் அறநெறிப் பாடசாலை, தொண்டர் திருநாவுக்கரசு அறநெறிப் பாடசாலை மற்றும் சிறி முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும், கோப்பாய், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் கு.பாலசண்முகனின் "அயனைச் சிறையிடுதல்" எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன.

சிறப்புச் சொற்பொழிவின்போது மாணவர்களிடையே சொற்பொழிவு தொடர்பான வினாக்கள் உள்ளடங்கிய வினாத்தாள் வழங்கப்பட்டுச் சிறப்புத் திறனை வெளிப்படுத்துவோருக்குப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. இன்றைய தின நிகழ்வுகளின் சிறப்பு நிகழ்வாக மட்டுவில் சகோதரிகளான கலாவித்தகர், சங்கீதா தில்லை நாதன் மற்றும் கலாவித்தகர், ஆரணி தில்லைநாதன் ஆகியோர் வழங்கும் "இசைக்கச்சேரி" நிகழ்வும் இடம்பெறவுள்ளது என்று இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

⊙ ⊙ ⊙ ⊙ ⊙

நல்லூர்க் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் தினமும் தெய்வீக இசையரங்கு நடத்தப்பட்டு வருகிறது.

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் அனுசரணையுடன் இலங்கை இளங்கலைஞர் மன்றத்தால் தினமும் மாலை 6.45 மணி தொடக்கம் 8.15 மணி வரை தெய்வீக இசையரங்கு நடத்தப்பட்டு வருகிறது. தெய்வீக இசையரங்கில் இன்று வ்யலின் இசை,இசைக்கச்சேரி என்பன இடம்பெறவுள்ளன. வயலின் இசையில் வயலின்வனஜா ஈஸ்வர சர்மா,மிருதங்கம் ந.சதீஸ்குமார்,கெஞ்சிராச. ஜெனில்சங்கர் ஆகியோரும்- இசைக்கச்சேரியில் பாட்டு ஜெகதீஸ்வரன் மதூசிகன்,வயலின்அ.ஜெயராமன்,மிருதங்கம்ஞா.வசந்,கெஞ்சிராக.இசைநிலவன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (ஐ)

# கல்வி வலயங்களைப் பிரிப்பதில் வடமராட்சி கிழக்கு புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 21

வடக்கு மாகாணத்தின் தற்போதுள்ள 12 கல்வி வலயங்களை 20 கல்வி வலயங்களாக பிரிப்பதற்கான திட்டத் தயாரிப்பில் வடமராட்சி கிழக்குத் தொடர்பிலும் சிறப்புக் கவனம் செலுத்தப்படும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் தெரிவித்தபோதும் குறித்த பிரதேசம் புறக்கணிக்கப்பட்டே வரைபு அனுப்பப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் தற்போது 12 கல்வி வலயங்கள் காணப்படுகின்றன.

அதனை இலகுவான நிர்வாகம், போதிய நிதியீட்டல் என்னும் பெயரில் 20 கல்வி வலயங்களாகப் பிரிப்ப தற்கான திட்ட முன்மொழிவு ஒன்று மத்திய கல்வி அமைச்சுக்கு முன்வைக்கப்பட்டு, அதற்கான திட்டம் தற்போது வடக்கு மாகாண கல்வி அமைச்சால் கொழும்புக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் யாழ்ப்பாண மாவட்டத்தை 7 கல்வி வலயங்களாகவும், கிளிநொச்சி மாவட்டத்தை 2 வலயங்களாகவும், முல்லைத்தீவு மற்றும் மன்னார் என்பனவற்றைத் தலா 3 கல்வி வலயங்களாகவும் வவுனியா மாவட்டத்தை 5 கல்வி வலயங்களாகவும் பிரிக்கத் திட்டமிடப்பட்டது.

இந்த வலயப் பிரிப்பில் குடாநாட்டின் மிகவும் பின்தங்கிய பிரதேசமான வடமராட்சி கிழக்கு தொடர்பில் எந்த கரிசனையும் கொள்ளப்படவில்லை.

மருதங்கேணி கோட்டம் தனியான வலயமாக அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதிலும், அது தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டுள்ளமை கல்வியியலாளர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. (ம-105)

# மகிந்தவும் ரணிலும் கூறியிருந்தனரெனினும் தொழிற்சாலைகள் அமைக்கப்படவேயில்லை



கிளிநொச்சி, ஓக. 21

இங்குள்ள அனைவருக்கும் தொழிற்சாலைகள் அமைத்து தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படும் என்று, போர் நிறைவுற்ற பின்னர், மகிந்த ராஜபக்ச கூறியிருந்தார். அவருக்குப் பின்னர் ஆட்சி பிடித்த ரணில் விக்கிரமசிங்கவும் இதைத்தான் கூறியிருந்தார். ஆனால் எதுவும் நடக்கவில்லை.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

கிளிநொச்சி, வட்டக்கச்சி, மாயவனூர் பிரதேச மக்களுக்கு, கடந்த ஞாயிற்றுக்கிழமை வாழ்வாதார உதவிகள் அவர் வழங்கினார். 100 பேருக்கு உலருணவுப் பொதிகள், மரக்கன்றுகள் மற்றும் அறநெறி பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் ஆகியன வழங்கப்பட்டன. அதன் பின்னர் உரையாற்றுகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர்கள் அவ்வாறு கூறி ஏமாற்றுகின்றனரே தவிர உண்மையிலேயே அவற்றை அமைக்க வேண்டும் என்ற நோக்கம் இல்லை. அதனால் எமது மக்களுக்கு எந்த விதத் தீர்வும் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்தார். (த-6)

## சமுர்த்திப் பயனாளிகளின் பிள்ளைகளுக்கு உதவிகள்

ஏழாலை,ஓக.21

சமுர்த்திப் பயனாளிகளின் பிள்ளைகளுக்கு விளையாட்டு அபிவிருத்திக்கான உதவிகள் வழங்கப்படவுள்ளன. இதற்கான விண்ணப்பங்கள் சமுர்த்தி அலுவலர்களால் வழங்கப்பட்டுவருகிறது.

சமுர்த்திஅபிவிருத்தித்திணைக்களத்தின் சமுர்த்தி சமுதாய மட்ட மற்றும் விளையாட்டுப்பிரிவால்விளையாட்டு அபிவிருத்தி உதவிகள் வேலைத்திட்டத்தின் கீழ் இந்த உதவிகள்வழங்கப்படவுள்ளன.

விளையாட்டு அபிவிருத்தி உதவிகள் தேவையான பிள்ளையின் தாய், தந்தை அல்லது பாதுகாவலர்கள். சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைபொன்றில் அங்கத்துவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

விளையாட்டுஅபிவிருத்திஉதவிகள். தேவையான பிள்ளைகள் அரச பாடசாலைகளில் கல்வி கற்கின்றவர்களாக இருத்தல்வேண்டும்.

அத்துடன் அரச நிறுவனமொன்றின் ஏற்பாட்டின் மூலம் அல்லது முழுமையான அரச அனுசரணையின் பிரகாரம் நடத்தப்பட்ட தனிநபர் மற்றும் குழுப் போட்டியொன்றில் இருந்து கல்விவலயமட்டத்தில்.வெற்றிபெற்று மாவட்டமற்றும் மாகாணமட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் கலந்துகொண்டு, அப்போட்டிகளில் 1 ஆம், 2 ஆம் அல்லது 3ஆம் இடத்தில் வெற்றிகளைக் பெற்றுக் கொண்ட பாடசாலைமாணவர்ஒருவராக இருத்தல் வேண்டும்.

இதேவேளை, விண்ணபத்தைப் பெற்றுக்கொண்ட பயனாளிகள் முழுமைப் படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களில்குறித்தபாடசாலையின்அதிபர், விளையாட்டுத்துறைபொறுப்பாசிரியர் , குறித்த சமுர்த்தி, சமுதாய மட்ட அமைப் பின் தலைவரின் கையொப்பங்களைப் பெற்று, சமுர்த்தி அபிவிருத்தி அலுவலரிடம் வழங்க வேண்டும்என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அரசின் மீதான கூட்டமைப்பின் நம்பிக்கைகள் வீணாகியுள்ளன

*வவுனியாவில் வைத்துத் தெரிவித்தார் தினேஷ் குணவர்த்தன எம்.பி.*

வவுனியா, ஓக. 21

அரசுக்கு ஒட்சிசன் வழங்கினால் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற கூட்டமைப்பின் நம்பிக்கை வீணாகப் போயுள்ளது இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன. வவுனியா இரட்டை பெரியகுளத்தில் உள்ள விருந்தினர் விடுதியில் தனது ஆதரவாளர்களை நேற்றையதினம் சந்தித்த பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: தமிழ்த்தேசியக்கூட்டமைப்புஎன்பதுவடக்குமக்களுடையகட்சியாகும். அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானங்களின் போது அதை ஆதரிக்கும்படி கூட்டமைப்பினருக்கு நாங்கள் தொடர்ச்சியாகச் சொல்லிவந்தோம். ஆனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அவ்வாறு வாக்களிக்கவில்லை. அவ்வாறு வாக்களித்திருந்தால் அரசை வீட்டுக்கு அனுப்பியிருக்க முடியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினர் அரசுக்கு ஆதரவாக இருந்து ஒட்சிசன் வழங்கினால் அரசிடம் இருந்து தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வை பெற்றுக்கொள்ள முடியும் என்று நம்பினார்கள். அப்படி அதற்கு தீர்வு கிடைக்கப்பெற வில்லை என்பதை அவர்கள் இப்பொழுது விளங்கி யிருப்பார் கள். மகிந்த ராஜபக்சவும்அவர்களுடன்இருக்கின்றநாங்களும்நாட்டில்உள்ள எல்லாஇனமக்களையும்நோக்கி கோரிக்கைவிடுக்கின்றோம். இது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கட்டம், தேசிய முக்கியத்துவம் வாய்ந்தபோராட்டம், புதியநம்பிக்கையைக்கட்டியெழுப்பும்போராட்டம். இந்த வேலைத்திட்டத்தில் இன, மத, பேதமின்றி அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்எனகோரிக்கைவிடுக்கின்றோம்- என்றார். (ம-110)

## செல்வச் சந்நிதி ஆலய திருவிழா ஏற்பாடு தொடர்பான ஆரம்பகட்ட கலந்துரையாடல்

தொண்டமனாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா எதிர்வரும் 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இந்நிலையில் ஆலய திருவிழா ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றது.

பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பின்வரும் விடயங்கள் பொதுமக்களின் கவனத்துக்கு அறியத்தரப்பட்டுள்ளன.

திருவிழாக் காலத்தில் கடந்த வருடத்தைப் போன்று ஆலயச்சூழலில் ஒரு வழிப்பாதை நடைமுறைப்படுத்தப்படும். ஆலய வீதியில் கடைகள் மற்றும் வீதியோரக் கடைகள் ஆலய அமைக்கப்படுவதற்கு தடைசெய்யப்படும். ஆலய சுற்றாடலில் உணவு கையாளும் நிலையங்கள் அமைப்பவர்கள் பதிவு செய்யப்பட்ட உணவுச் சாலைகள் நடத்துபவர்களாக இருத்தல்வேண்டும். பொதுச் சுகாதார பரிசோதகரின் கண்காணிப்புக்கு உட்பட்ட கிணறுகளிலிருந்து பெறப்படும் குடிதண்ணீரையே உபயோகித்தல் வேண்டும். ஆலயச் சுற்றாடலில் இனிப்புக் கடைகள், கச்சான் விற்பவர்கள் உற்பத்தியை ஆலய சூழலில் மேற்கொள்ள முடியாது விற்பனையை மட்டும் செய்ய முடியும். அன்னதான மடங்களில் உணவு தயாரிப்பவர்கள் மருத்துவச் சான்றிதழ்பெற்றிருக்க வேண்டும். சகல கடை உரிமையாளர்களும் ஒவ்வொரு நாளும் வரும் கழிவுகளை வெளியில் வீசாது. ஒன்றாகச் சேர்த்து பிரதேச சபை வாகனம் வரும் பொழுது கொடுத்தல் வேண்டும். ஐஸ்கிறீம் விற்பனை செய்பவர்கள் குளிரூட்டி யைத் தொடர்ந்து உரிய குளிர் நிலையில் பேண வேண்டும். திருவிழாக் காலத்தில் ஆலயச் சூழலில் அனுமதியற்ற விதத்தில் நடத்தப்படும் பச்சை குத்தும் செயற்பாடு தடைசெய்யப்பட்டுள்ளது. பொலித்தீன் பாவனை முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

புகைத்தல், மதுபாவனைப் பொருள்கள்என்பவற்றின் பாவனை, விற்பனை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. தண்ணீர் பந்தல்களில் ஐஸ் கட்டி தொழிற்சாலைகளிலிருந்து பெறப்படும் ஐஸ்கட்டி பயன்படுத்தக் கூடாது. போன்ற நடைமுறைகளை கடைபிடிக்குமாறு பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



## சமாதான நீதிவான்கள் நியமனம்

சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்கள் சமாதான நீதிவான்களாக கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் முன்னிலையில் பதவியேற்றனர்.

கடந்த மாதம் புதிதாக கடமைகளை பொறுப்பேற்ற தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்களான சிவகுமாரன் கஜேன், ஜெயக்குமார் நிதர்சன், இராமநாதன் யோகேஸ்வரன், கந்தையா துர்க்கா ஆகியோர் சமாதான நீதி வான்களாகப் பதவியேற்றனர்.

## சுகாதார சீர்கேடு; 9 உணவகங்களுக்கு எதிராக நடவடிக்கை



யாழ்ப்பாணம், ஓக. 21

சங்கானைப் பிரதேச சபைக் குட்பட்ட 9 உணவகங்கள் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கியதாகத் தெரிவித்து, அவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனின் அறிவுறுத்தலுக்கு அமைவாக குறித்த பகுதியில் உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் மற்றும் ஆளுநர் செயலணி இணைந்து நேற்றுமுன்தினம் திடீர் கண்காணிப்பு பயணத்தை மேற்கொண்டனர். இதன்போது 15 உணவகங்கள் மிகவும் தகுதியற்று சுகாதார சீர்கேடுகளுடன் காணப்பட்டன.

அவற்றில் தரமற்ற உணவு தயாரிப்புக்கள் , உணவு தயாரிக்கும் சமையல்கூடங்கள் மற்றும் பாத்திரங்கள் அசுத்தமாகவும், சமைத்த உணவுகள் பிளாஸ்ரிக் பாத்திரங்களில் சேமிக்கப்பட்டிருந்தமை மற்றும் அழுகிய மரக்கறிவகைகள் சமையல் பாவனைக்கு பயன்படுத்தபட இருந்தமை போன்ற சுகாதார சீர்கேடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில் அதிகளவிலான சுகாதார சீர்கேடுகளுடன் காணப்பட்ட 9 உணவகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

உணவகம் ஒன்றில் காணப்பட்ட தகுதியற்ற ரொட்டிகள் மற்றும் மரக்கறிவகைகள் அழிக்கப்பட்டன. மேலும், சுகாதார சீர்கேடுகளுடன் தரமற்று காணப்பட்ட ஏனைய உணவகங்களுக்கு கால அவகாசம் வழங்கப்பட்டதுடன் அவ்வாறு தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. தகுதியற்ற உணவகங்கள் காணப்படின் அதுதொடர்பில் ஆளுநர் அலுவலகத்தின் 0212219375 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அறியத்தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-7-26)

## இலவச செயலமர்வு

வடமராட்சி,ஓக.21

'நாட்டுக்காக ஒன்றிணைவோம்' செயற்றிட்டத்தின் கீழ் வடமராட்சிவடக்குபிரதேசசெயலகவிதாதாவளநிலையத்தால் இலவச செயலமர்வுகள் நடத்தப்படவுள்ளன.

நாளைமறுதினம்23ஆம்திகதி காலை 9 மணிக்கு புலோலி தெற்குவிக்னேஸ்வராமுன்பள்ளியில் 'பணம் பழ உணவு உற்பத்தி .ஆர்.ரி.எஸ். குடிபானம் என்ற தலைப்பிலும் 27 ஆம் திகதி பிரதேசசெயலகமாநாட்டு மண்டபத்தில்காலை9மணிக்கு 'மின்சாரநெருக்கீட்டைமாற்றுச் சக்தி முதல்கள் மூலம் நிவர்த்தி செய்தல்" என்ற தலைபிலும், 28 ஆம் திகதி யாழ்ப்பாணம் கம்பர்மலைவித்தியாலயத்தில் காலை 9 மணிக்கு "ஏற்றுமதி வருவாய்க்கான இலை முருங்கைச் செய்கை மற்றும் சேதன விவசாயம் மூலம் நஞ்சற்ற உணவுற்பத்தி" என்ற தலைபிலும் 29ஆம் திகதி பிரதேச செயலகமாநாட்டுமண்டபத்தில் காலை 9 மணிக்கு கணினி "வலையமைப்பு"என்றதலைபிலும்செயலமர்வுகள்இடம்பெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பண்டாரவன்னியனின் நினைவுதினம் வவுனியாவில் எதிர்வரும் ஞாயிறன்று

*வவுனியா, ஓக. 21*


பண்டாரவன்னியனின் 216ஆவது நினைவு தின நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் அங்கு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.


வவுனியா நகர சபைத் தலைவர் கௌதமன் தலைமையில் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

பண்டாரவன்னியனின் நினைவு தினத்தை முன்னிட்டு வவுனியா மாவட்ட செயலகத்துக்கு அருகிலுள்ள அன்னாரின் நினைவுத் தூபி கடந்த சில தினங்களாக நகரசபை ஊழியர்களால் அழகு படுத்தப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நினைவுத் தூபிக்கு காலை 8.15 மணியளவில் மலர் மாலை அணிவிக்கும் நிகழ்வையடுத்து, நகரசபை கலாசார மண்டபத்தில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

சிறப்புச் சொற்பொழிவை தமிழ்மணி அகளங்கனும் பண்டாரவன்னியனின் நினைவுப் பேருரையை அருணா செல்லத்துரையும், உயிரோவியம் தமிழருவி த.சிவகுமாரும் நிகழ்த்தவுள்ளனர். (ம)





## தொடருந்துடன் மோதி இரு கன்றுகள் சாவு

வவுனியா.ஓக.21

தொடருந்துடன் மோதி இரு கன்றுகள் உயிரிழந்துள்ளதுடன் மற்றொரு கன்று காயமடைந்துள்ளது.

இந்தச் சம்பவம் வவுனியா தாண்டிக்குளத்தில் நேற்று காலை இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த தொடருந்தே தண்டவாளத்தில் நின்ற மூன்று கன்றுகளை மோதியது.

இதனால் இரு கன்றுகள் சம்பவஇடத்திலேயே உயிரிழந்தன. காயமடைந்த மற்றைய கன்றுக்கு அப்பகுதி மக்களால் சிகிச்சை அளிக்கப்பட்டது. இதேவேளை - தாண்டிக்குளம் பகுதியில் அண்மையிலும் தொடருந்துடன் மோதி 10 மாடுகள் உயிரிழந்தன.

அண்மைக்காலமாக கால்நடைகள் தொடருந்துடன் மோதுண்டு வரும் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இதனைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-110)

## வடக்கு மாகாணக் கல்வி அமைச்சால் வவுனியாவில் திருக்குறள் பெருவிழா

வவுனியா. ஓக. 21

உலகப் பொதுமறையான திருக்குறளை அனைவரும் உணர்த்தும் வகையில்வடக்கு மாகாண கல்வி அமைச்சால்திருக்குறள்பெருவிழா நடத்தப்படவுள்ளது.

அரச தலைவரின் எண்ணக்கருவிலும் ஆளுநரின் வழிகாட்டலுடனும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் நாளை மறுதினம் தொடக்கம் எதிர்வரும் 30ஆம் திகதி வரையில் இந்த வாரம் கடைப்பிடிக்கப்படவுள்ளது. திருக்குறள் பெருவிழா எதிர்வரும் 24ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு வவுனியா பிரதேச குடியிருப்பு கலாசார மண்டபத்தில் நடத்துவதற்கு தீர்மானிக் கப்பட்டுள்ளது.



விழா தொடர்பான கலந்துரையாடல் வவுனியா மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் தி.திரேஸ்குமார் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போது திருக்குறள் பெருவிழா நிகழ்வு ஏற்பாடுகள் மற்றும் அதன் முக்கியத்துவம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர், அமைச்சின் அதிகாரிகள், வவுனியா மாவட்டத்துக் குட்பட்ட பிரதேச செயலகங்களின் பிரதேச செயலர்கள், வலய கல்வி பணிமனை அதிகாரிகள், ஆசிரிய ஆலோசகர்கள், கலாசார அலுவலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம)



## டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கை

வவுனியா.ஓக.21

டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கை நேற்று வவுனியா ஓமந்தைக் கிராம அலுவலர் பிரிவில் முன்னெடுக்கப்பட்டது.

தற்போது பெய்துவரும் பருவ மழையை அடுத்து நுளம்பு பெருகும் இடங்களை இனங்கண்டு அழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஓமந்தை சுகாதாரப் பரிசோதகர் க. சிவரஞ்சன் தலைமையில் வவுனியா ஓமந்தைப் பொலிஸ் நிலையத்திலிருந்து அம்மாச்சி உணவகம் வரையான கண்டி முதன்மை வீதி ஓரங்கள் துப்புரவு செய்யப்பட்டன. (ஐ)



## பயிற்சிப் பட்டறை

சாவகச்சேரி ஓக.21

வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளுக்கு உலக வங்கியின் நிதிப் பங்களிப்புடன் மேற்கொள்ளவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பான பயிற்சிப் பட்டறை நேற்று சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் நடைபெற்றது.

மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட பயிற்சிப் பட்டறையில் மாகாண முதன்மைச் செயலர் அ.பத்திநாதன், உள்ளூராட்சி அமைச்சின் செயலர், உலக வங்கியின் பிரதிநிதிகள், மாகாண பிரதி முதன்மைச் செயலர் (நிதி) ,யாழ்ப்பாண மாநகர முதல்வர் இ.ஆனல்ட், உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், சபைகளின் தெரிவு செய்யப்பட்ட தலா ஐந்து பிரதிநிதிகள், சபைகளின் செயலர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-9)

## நல்லைக் கந்தன் ஆலயத்துக்கான பாத யாத்திரை

வவுனியா.ஓக.21

வவுனியா வேப்பங்குளம் அருள்மிகு சிறி பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் இருந்து நல்லைக் கந்தன் ஆலயத்துக்கான வேல் தாங்கிய பாத யாத்திரை நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ளது.

இந்த பாத யாத்திரை நாளைமறுதினம் 23 ஆம் திகதி ஆரம்பித்து மன்னார் வீதி வழியாக வவுனியா நகரை வந்தடைந்து 29 ஆம் திகதி நல்லூர் கந்தன் தேர்த் திருவிழாவில் இந்தப் பாத யாத்திரை நல்லூரை வந்தடையும்.

இந்த 7நாள்கள்பாதயாத்திரையின் போது யாத்திரை வீதி வழியாக வரும் அனைத்து ஆலயங்களையும் தரிசித்து. ஆலயங்களில் தங்கி நின்று நல்லூரை வந்தடையும் என்று ஆலயத்தினர் தெரிவித்தனர். (ஐ)

## 'இருள் சூழ்ந்த இளமை' திரைப்படத்துக்கு பூசை போடும் நிகழ்வு

முல்லைத்தீவு,ஓக.21

"இருள் சூழ்ந்த இளமை" என்னும் திரைப்படத் துக்கான பூசை போடும் நிகழ்வு முல்லைத்தீவு புதுநகர், சிவன் கோவிலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது. நிகழ்வில் வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் கலந்து கொண்டார்.

தற்கால இளையோரின் செயற்பாடுகள், மற்றும் இன்று தமிழ் சமூகத்தின் மத்தியில் இடம்பெறும் பல்வேறுபட்ட கலாசார சீரழிவுகளை எடுத்துக்கூறி அவற்றிலிருந்து எமது சமூகம் மீண்டுவர வேண்டும் என்பதைக் கூறும் படமாக இந்தப் படம் அமையவுள்ளதாக திரைப்பட இயக்குநர் கேதீஸ்வரன் தனுசன் தெரிவித்துள்ளார்.

திரைப்பட இயக்குசநரான தனுசன், கடந்த காலங்களில் "வட்டி இலக்கம் 303" என்னும் முழு நீளத் திரைப்படத்தில் பணியாற்றியதுடன், மனதோடு மழைச்சாரல், உயிர்சாயி, எதிர் வைரஸ், சிலம்பம் போன்ற குறும்படங்களில் பணியாற்றியுள்ளார். இந்த நிலையிலேயே இருள் சூழ்ந்த இளமை என்னும் 45நிமிடத் திரைப்படத்தை இயக்குகின்றார்.

மேலும் நிகழ்வில் புதுக்குடியிருப்பு இளைஞர்சேவை அதிகாரி அ.விஜிதரன், திரைப்படத்தின் சண்டைப் பயிற்சி ஆசிரியர் சூசைநாதர் யசோதரன் மற்றும் படக்குழுவினர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-246)

## அனுமதி இன்றி மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் சாரதிகள் மூவர் கைது

கிளிநொச்சி, ஓக 21

அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய இரு டிப்பர் வாகனங்களையும், ஒரு உழவியந்திரத்தையும் கைப்பற்றியுள்ளதாக பளை பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முகமாலை பகுதியில் வெள்ளை மணல் ஏற்றி வந்த இரு டிப்பர் வாகனங்கள் நேற்றுமுன்தினம் இரவு கைப்பற்றப்பட்டன.

அதே போல் கிளாலிப் பகுதியில் மணல் ஏற்றிய உழவியந்திரம் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. இதன்படி மூன்று வாகனங்களின் சாரதிகளுக்கும் விசாரணையின் பின்னர் பொலிஸ் பிணை வழங்கப்பட்டதுடன் நீதிமன்றில் முற்ப டுத்துவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளதாக பளைப் பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ-6)

## மணல் ஏற்றிய சாரதிக்கு ஒரு லட்சம் ரூபா தண்டம்

சாவகச்சேரி ஓக.21

அனுமதிப் பத்தமிரமின்றி மணல் ஏற்றி வந்த சாரதிக்கு ஒரு லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்ட்து.

வீதிப் பரிசோதனையில் ஈடுபட்ட போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவினர் அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிவந்த பரந்தனைச் சேர்ந்த டிப்பர் சாரதியையும் வாகனத்தையும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் இடம்பெற்றது.

சந்தேகநபருக்கு எதிராக பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

ஆரம்ப கட்ட விசாரணையில் சுற்றவாளி எனத் தெரிவித்ததால் சாரதி பிணையில் விடுவிக்கப்பட்டு வழக்கு நீதிமன்றில் நடைபெற்றுவந்தது.

நேற்று மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது சாரதி குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

இதனையடுத்து அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய குற்றத்துக்காக ஒரு லட்சம் ரூபா தண்டம் விதித்ததுடன் மணலைப் பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிடப்பட்டது.

அத்துடன் தண்டத் தொகை செலுத்தத் தவறின் 10 மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்கமாறும் நீதிமன்றால் உத்தரவிடப்பட்டது. (ஐ-9)

# கோத்தபாயவை ஈ.பி.டி.பி. ஆதரிக்கும்

## நேரில் சென்று கூறினார் டக்ளஸ்



கொழும்பு, ஓக. 21

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி சார்பில் நிறுத்தப்பட்டுள்ள முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவை ஈ.பி.டி.பி. ஆதரிக்கும் என்று அந்தக் கட்சியின் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் தேர்தலுக்காக வேட்பாளர்கள் எவரென்று முழுமையாக இதுவரை தெரியாத நிலையில், 2009ஆம் ஆண்டு இறுதிக் கட்டப் போரை வழிநடத்திய கோத்த பாய ராஜபக்சவுக்கு ஆதரவு வழங்குவதாக ஈ.பி.டி.பி. அறிவித்துள்ளது.

ஈ.பி.டி.பியின் செயலர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, யாழ்ப்பாண மாநகர சபையின் முன்னாள் மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா மற்றும் ஈ.பி.டி.பி.யின் மூத்த உறுப்பினர் தயானந்தா ஆகியோர், கோத்த பாய ராஜபக்சவை நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக, ஈ.பி.டி.பி. வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எந்தவொரு ஆட்சி இங்கு வந்தாலும் அவர்களுடன் பேரம் பேசி தமிழ் மக்களின் வேணவாக்களைத் தீர்த்து வைப்பதே எமது ஆழ் மன இலட்சிய அரசியல் விருப்பமாகும். எவரும் விரும்பியோ விரும்பாமலோ ஆட்சி அதிகாரத்தில் உட்காரப்போகின்ற கோத்தபாய ராஜபக்சவை எந்தவித அரசியல் பலமும் இன்றி, அந்த அரசியல் பலத்தை எமது மக்கள் இனி வரும் காலத்தில் வழங்குவார்கள் என்ற நம்பிக்கையோடு, எமது நல்லிணக்க உறவுகளோடு மட்டும் சந்தித்திருந்தோம்.

இலங்கைத்தீவின் சகல இன மக்களும் ஏற்றுக் கொண்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இருந்து தொடங்கி, அதை மேலும் பலப்படுத்தி அரசியல் தீர்வு நோக்கி செல்வது, எமது தேசத்தை தூக்கி நிறுத்தும் அபிவிருத்தி பணிகளை நாம் விட்ட குறையில் இருந்து மீண்டும் தொடங்குவது, முதற்கட்டமாக வேலையற்ற தமிழ் இளையோரில் ஒரு இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொடுப்பது, போர் காரணமாக கல்வி தகைமையை இழந்து நிற்கும் தமிழ் இளையோருக்கு தற்காலிக வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொடுப்பதோடு கால அவகாசத்தின் அடிப்படையில் அதற்கான கல்வித்தகைமையை அவர்கள் பெற்றிடவும், வேலையை நிரந்தரமாக்கவும் ஏற்பாடு செய்வது, காணாமற்போன உறவுகளை தேடும் மக்களின் கண்ணீருக்கு பரிகாரம் பெற்றுக் கொடுப்பது, அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான முயற்சியில் வெற்றி காண்பது, நாம் ஏற்கனவே விடுவித்து, இதுவரை மீட்கப்படாத எமது மக்களின் காணி நிலங்களை விடுவிப்பது. வீடற்ற மக்களுக்கு வீடு, நிலமற்ற மக்களுக்கு நிலம், மீள்குடியேறிய மக்களுக்கு நிரந்தர வாழ்வியல் உரிமை. இன நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் நடைபெறும் இன, மத ரீதியிலான சகல திணிப்பு நடவடிக்கைகளையும் தடுத்து நிறுத்துவது.

முள்ளிவாய்க்கால் வரை போரில் கொல்லப்பட்ட சகல மனித உயிர்களுக்கும் மரியாதை செலுத்தும் வகையில் பொதுச் சதுக்கத்தையும் அதற்கான ஒரு நினைவு நாளையும் உருவாக்குவது, இது போன்ற எமது மக்களின் வேணவாக்கள் குறித்து எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் வெல்லப்போகின்ற கோத்த பாய ராஜபக்சவுடன் நாம் மனம் திறந்து பேசியதில் எமக்கு நம்பிக்கை தரும் சமிக்ஞைகள் கிடைத்திருக்கின்றன.

மாற்றமொன்று இந்த நாட்டில் விரைவில் நிகழும் என்பதில் மாற்றமில்லை. தமிழ் பேசும் மக்களாகிய நாம் இந்த மாற்றத்தில் பங்குதாரர்களாக இருக்கப்போகின்றோமா? பார்வையாளர்களாக இருக்கப்போகின்றோமா? அல்லது வெறும் எதிர்ப்பாளர்களாக இருக்கபோகின்றோமா? இதை தமிழ் பேசும் மக்களாகிய நாமே தீர்மானிக்க வேண்டும். நிகழப்போகின்ற அந்த மாற்றத்தில் தமிழ் பேசும் மக்களின் பங்களிப்பும் கணிசமான அளவு இருந்தாக வேண்டும். அதன் ஊடாகவே அந்த மாற்றத்தின் விமோசனங்களை தமிழ் பேசும் மக்களும் அனுபவிக்க முடியும். மாற்றத்தை உருவாக்குவோம் என்று தமிழ் மக்களிடம் கூறி, இன்றைய அரசை உருவாக்க பங்களித்த சக தமிழ் கட்சிகளே இன்று அதே அரசு தம்மை ஏமாற்றி விட்டதாக புலம்பத்தொடங்கிவிட்டார்கள். அவர்களைப்போல் நானும் எதிர்காலத்தில் எமது அரசு எம்மை ஏமாற்றி விட்டதாக ஒரு போதும் கூறப்போவதில்லை. எவருக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று நான் கோருகின்றேனோ, அவர்களுக்கு வாக்களித்தால் அதற்கான பொறுப்பை நானே ஏற்பேன். எமது மக்களிடம் இன்று இருப்பது வாக்குப்பலம் ஒன்றே. அதை வைத்து எமது மக்களின் சகல உரிமைகளையும் வென்றெடுத்தே தீருவோம் என்ற எமது உறுதியான ஆத்ம பலம் எம்மிடம் உண்டு. எமது அகராதியில் எமது சொந்த சலுகைகளை பெறுவதற்காக எந்தக் காலத்திலும் எந்த அரசுடனும் நாம் உறவு வைத்திருந்தவர்கள் அல்ல. அதற்காக எமது மக்களை எவருக்கும் வாக்களிக்குமாறு நாம் கேட்டதும் இல்லை. இனியும் அது நடக்காது.

நிகழப்போகின்ற ஆட்சி மாற்றத்தை வைத்து எமது மக்களின் வாக்குப்பலத்தால் அனைத்து உரிமைகளையும் நான் பெற்றுத் தருவேன். யதார்த்தமான, உறுதியான எமது அரசியல் வழிமுறைக்கு யதார்த்தமானதும், உறுதியானதுமான நாட்டில் தலைவர் ஒருவர் உருவாகும் போது, அவரது வருகையை நாம் சரிவரக் கையாள வேண்டும்.

போரின் போது தமிழ் மக்கள் சந்தித்திருந்த அவலங்களுக்கு ஒரு தரப்பை மட்டுமே தமது குறுகிய சுயலாப அரசியல் நோக்கில் பாரபட்சமுடன் சிலர் குற்றஞ் சுமத்துகிறார்கள். ஆனாலும், தென்னிலங்கை அரசியல் வாதிகள் பலரும் போரை நடத்தி, அதில் வெற்றி கண்டவர்கள் தாமே என்று ஒவ்வொரு காரணம் சொல்லி போர் வெற்றிக்கு உரிமை கோருகின்றார்கள். இன்று இதில் எந்த வேட்பாளரை ஆதரிப்பது? இதுவே தமிழ் மக்களின் கேள்வி?

இல்லாத ஊருக்கும், இலக்கற்ற பயணத்திற்கும் நாம் ஒரு போதும் வழி காட்டப் போவதில்லை. எமது அரசியல் பலத்துக்கு ஏற்றவாறு இதுவரை எமது மக்களுக்கு எம்மால் முடிந்ததை பெற்றுத்தந்த நாம், எதிர் வரும் காலத்தில் தமிழ் அரசியல் பலத்தோடு மக்களின் தலைவிதியையே மாற்றியமைப்போம். எதையும் சாதிக்க முடிந்த வல்லமை படைத்த உறுதியானதொரு நாட்டின் தலைவர் மூலமே தமிழ் மக்களின் வரலாற்றிலும் நாம் மாற்றங்களை உருவாக்க முடியும்.

இந்த உறுதியான நிலைப்பாட்டில் இருந்து எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் கோத்த பாய ராஜபக்சவை ஆதரிப்பதென நாம் தீர்மானம் எடுத்துள்ளோம் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஒ.5)

# இரண்டு ஆண்டுகளாக என்ன செய்தார் மைத்திரி?

## கேள்வி எழுப்புகிறார் பீரிஸ்

கொழும்பு, ஓக. 21

அரச தலைவர் தேர்தலுக்கு முன்னதாக மாகாணசபைத் தேர்தலை நடத்த முடியுமா என்று உயர் நீதிமன்றத்தில் சட்ட வியாக்கியானம் கோரும் அரச தலைவர், கடந்த இரண்டு ஆண்டு காலமாக மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் ஏன் நிறைவேற்று அதிகாரத்தைச் செயற்படுத்தவில்லை. நடைமுறையில் உள்ள பிரச்சினைகளுக்கு மாகாணசபைத் தேர்தல் ஊடாகத் தீர்வு காண முடியாது. இவ்வாறு சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.



பொதுமக்கள் முன்னணியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களில் 129வது அத்தியாயத்துக்கு அமைவாக தற்போது பழைய தேர்தல் முறையில் மாகாண சபை தேர்தலை நடத்த முடியுமா என்று அரசதலைவர் மைத்திரிபால உயர்நீதிமன்றில் சட்ட வியாக்கியானம் கோரியுள்ளார்.

மாகாண சபை தேர்தல் தொடர்பில் தற்போது நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தும் அவர் கடந்த இரண்டு வருட காலமாக மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு எந்தவித சட்ட நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றிப் பிற்போட்டுள்ளமைக்கு ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சுதந்திரக் கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகிய தரப்பினர் மாத்திரமே பொறுப்புக் கூற வேண்டும். மாகாண சபைத் தேர்தலை பழைய தேர்தல் முறையில் தற்போது நடத்துவது எந்தவிதத்திலும் சாத்தியப்படாது. எழுந்துள்ள அரசியல் மற்றும் சமூக பிரச்சினைகளுக்கு அரசதலைவர் தேர்தலின் ஊடாகவே நிரந்தரத் தீர்வு காண முடியும் - என்றார். (ஓ.5,21)

# அமெரிக்காவின் நிலைப்பாட்டையே எனது அறிக்கை வெளிப்படுத்தியது

## கூறுகிறார் தூதுவர் அலய்னா ரெப்லிட்ஸ்



கொழும்பு, ஓக. 21

இராணுவத் தளபதியாக லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டுள்ளது தொடர்பாக தாம் வெளியிட்ட அறிக்கை, அமெரிக்காவின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் நோக்கிலானது என்று இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலய்னா ரெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க தூதுவர் கொழும்பில் தனது இல்லத்தில் நேற்றுமுன்தினம் மாலை சில ஊடகவியலாளர்களைச் சந்தித்துப் பேசினார்.

இதன்போது, இராணுவத் தளபதியாக லெப். ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டதற்கு கவலை தெரிவித்து அமெரிக்க தூதரகம் வெளியிட்ட அறிக்கை குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அமெரிக்க தூதுவர், பதிலளிக்கும் போது, இது எனது நாட்டின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவது மட்டுமேயாகும். ஒரு நாட்டுக்கு, என்ன செய்ய வேண்டும் என்று கூறுவதற்கும், அதன் செயல்கள் குறித்து கவலை தெரிவிப்பதற்கும் இடையில் வித்தியாசம் உள்ளது. அமெரிக்காவின் கொள்கைகளையும் முடிவுகளையும் பகிர்ந்துகொள்வதே எனது கடமை என்று அவர் கூறினார். (ஒ.5)

# 7 ஆயிரம் அடி உயரத்திலிருந்து வீழ்ந்த இராணுவ அதிகாரி சாவு



கொழும்பு, ஓக. 21

இராணுவ சிறப்புப் படைப் பிரிவின் அதிகாரி ஒருவர், பரசூட்டில் இருந்து குதித்த போது, நிலத்தில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

அம்பாறை வான்படைத் தளத்தில் நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வான்படையின் வானூர்தியிலிருந்து பரசூட் மூலம் குதிக்கும் பயிற்சியில் ஈடுபட்டிருந்த சிறப்புப் படையைச் சேர்ந்த அதிகாரி ஒருவரே, எதிர்பாராத விதமாக நிலத்தில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார். சுமார் 7 ஆயிரம் அடி உயரத்தில் இருந்து குதித்த இராணுவ அதிகாரியின் பரசூட் சரியாக விரியாததால், அவர் நிலத்தில் வீழ்ந்தாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ஒ.5)

# ஊடக சந்திப்பை நிறுத்திய ராணுவம்

*கொழும்பு, ஓக. 21*

இராணுவம் ஆண்டு தோறும் நடத்தும், கொழும்பு பாதுகாப்பு கருத்தரங்கு தொடர்பாக நேற்று நடத்தவிருந்த ஊடகவியலாளர் மாநாடு திடீரென காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

புதிய இராணுவத் தளபதியாக லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டுள்ளமை குறித்து பன்னாட்டுச் சமூகமும் உள்ளூர் செயற்பாட்டாளர் களும், அதிருப்தியை வெளிப்படுத்தி வரும் நிலையில், இராணுவத்தின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இராணுவம் ஆண்டு தோறும்நடத்தும், கொழும்பு பாதுகாப்பு கருத்தரங்கு எதிர்வரும் 29, 30ஆம் திகதிகளில் பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கு தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பு இராணுவத் தலைமையகத்தில் நேற்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இராணுவத் தளபதியாக லெப். ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று முன்தினம் நியமிக்கப் பட்டதை அடுத்து, உள்நாட்டிலும், பன்னாட்டு அளவிலும் கடுமையான எதிர்ப்புகள் வெளியிடப்பட்டு வருகின்றன. இவ்வாறான தொரு நிலையிலேயே ஊடக சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ஓ.5)

## ஓய்வுபெற்ற ராணுவத் தளபதி ஜெனரலாக பதவி உயர்வு

கொழும்பு, ஓக. 21

முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க, ஜெனரல் பதவிக்கு உயர்த்தப்பட்டுள்ளார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் அவருக்கு இந்த தரமுயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் 23ஆவது இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவும் லெப்டினன் ஜெனரலாக பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (ஓ.5)

## தீ விபத்தால் 14 வீடுகள் தீக்கிரை!

கொழும்பு, ஓக. 21

பேலியகொடை - போரணுகொட்டுவ பகுதியில் வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தினால் 14 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன என்று பேலியகொடை பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு தீயணைப்புப் படையினரால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாகவும் இந்தத் தீ விபத்தின் காரணமாக உயிர்ச்சேதங்கள் எதுவும் இடம்பெறவில்லையென்றும் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (ம)

## சதொசவின் பெரேராவுக்கு கிடைத்தது பிணை

கொழும்பு, ஓக. 21

அரசுக்கு 4 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுத்தினார் என்று குற்றஞ் சுமத்தப்பட்டு ஒரு வருட சிறைத் தண்டனை வழங்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்தின் முன்னாள் பதில் பொது முகாமையாளர் விமல் பெரேரா பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

3 இலட்சம் ரூபா சரீர பிணையில் அவரை விடுதலை செய்ய கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. குறித்த நபருக்கு ஒரு வருட சிறைத் தண்டனை மற்றும் 50 ஆயிரம் ரூபா தண்டப் பணமாக செலுத்துமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட சிறைத்தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்வதாக பிரதிவாதி சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றத்திடம் தெரிவித்ததை அடுத்த அவருக்கு இவ்வாறு பிணை வழங்கப்பட்டுள்ளது. (ம)

# இலங்கை அரசே இனப்படுகொலையாளி

*நாடு கடந்த தமிழீழ அரசு*

கொழும்பு, ஓக. 21

இலங்கை அரச தலைவர் தேர்தல் களத்தில் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள கோத்தபாய ராஜபக்சவை மட்டும் நாம் குற்றவாளியாகப் பார்க்கவில்லை. இனப்படுகொலைக் குற்றவாளியாக இலங்கை அரசையே நாம் பார்க்கின்றோம். இனப்படுகொலை அரசின் முகமாக ஆட்சிபுரிந்தவர்கள் அனைவருமே இனப்படுகொலையாளிகளாக உள்ளனர் என்று நாடுகடந்த தமிழீழ அரசு தெரிவித்துள்ளது.

இலங்கைத்தீவில் அரச தலைவருக்கான தேர்தல் களம் பரபரப்படைந்துள்ள நிலையில், நாடு கடந்த தமிழீழ அரசின் நிலைப்பாடு என்ன என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, நாடு கடந்த தமிழீழ அரசின் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சு இந்தக் கருத்தை வெளிப்படுத்தியுள்ளது.

அரச தலைவருக்கான தேர்தல் என்பது சிங்கள தேசத்துக்கான தேர்தலாகவே இருக்கின்றது. ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ள தமிழர் தேசத்தின் மீது திணிக்கப்படுகின்ற ஒன்றாகவே இந்தத் தேர்தல் காணப்படுகின்றது. இந்தப் பார்வை நிலையில்தான் தமிழர் தேசத்தின் இறைமையை வென்றடைவதற்கான தந்திரோபாயங்களின் அடிப்படையில் இலங்கையின் ஒவ்வொரு தேர்தல்களையும் நாம் அணுகி வருகின்றோம்.

உடனடி சலுகை அரசியலுக்கு அகப்பட்டு, முடிவுகளை எடுக்காமல், நீண்ட காலத்தில் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துக்கு நன்மை தருகின்ற முடிவுகளை நோக்கியே நமது நிலைப்பாடுகள் அமைகின்றன எனவும், இந்த விடயத்தில் இறுதி நிலைப்பாட்டை உரிய நேரத்தில் எமது அரசவை விவாதித்து முடிவெடுக்கும் என்று தெரிவித்துள்ளது. (ஓ.5)

# மாநாடுகள், கூட்டங்களுக்காக திகதி குறித்துள்ள மகிந்த அணி

*24ஆம் திகதி இளைஞரணி மாநாடு*

கொழும்பு, ஓக. 21

அரச தலைவர் தேர்தலுக்கான நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ள நிலையில் மகிந்த ராஜபக்ச தலைமையிலான பொதுமக்கள் முன்னணி தனது கட்சி மாநாடுகள், கூட்டங்களுக்கான திகதிகளையும் அறிவித்துள்ளது.

இதன்படி பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச ஆகியோரின் தலைமையில் பொதுமக்கள் முன்னணியின் இளைஞரணியின் தேசிய மாநாடு எதிர்வரும் 24ஆம் திகதி கொழும்பிலுள்ள தாமரைத் தடாக அரங்கில் மு.ப 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பொதுமக்கள் முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்ற நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கும்போது நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க இதனைத் தெரிவித்தார்.

தொகுதி அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள இளைஞர்களுக்கான எதிர்காலக் கொள்கை திட்டம் இளைஞர் தேசிய மாநாட்டின் போது பொதுமக்கள் முன்னணியின் அரசதலைவர் வேட்பாளரிடமும், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவிடமும் கையளிக்கபபடும். இந்த மாநாட்டை தொடர்ந்து நாடு தழுவிய ரீதியில் ஒவ்வொரு மாகாணத்திலும் பொதுமக்கள் முன்னணியின் இளைஞர் தேசிய மாநாடு நடத்தத் தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் மகளிர் அமைப்பின் தேசிய மாநாடு எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை காலை கொழும்பில் அமைந்துள்ள கண்காட்சி மற்றும் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. அத்தோடு அதே மண்டபத்தில் அன்று பி.ப 2.30 மணிக்கு முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கத்தின் கூட்டமும் இடம்பெறவுள்ளது. செப்ரெம்பர் முதலாம் திகதி முற்பகல் 11 மணிக்கு ஆசிரியர் சங்கத்தின் மாநாடும், அன்றைய தினம் பி.ப 3.30 மணிக்கு தனியார் பேருந்துச் சாரதிகள் சங்கத்தின் மாநாடும் இடம்பெறவுள்ளது.

செப்ரெம்பர் 2ஆம் திகதி ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தின் மாநாடு மு.ப 10 மணிக்கும், பிற்பகல் 2 மணிக்கு உள்ளூராட்சி உறுப்பினர்களின் கூட்டமும் இடம்பெறவுள்ளது.

செப்ரெம்பர் 4ஆம் திகதி காலை மு.ப 10 மணிக்கு பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் சிறு ஏற்றுமதியாளர்களது மாநாடும், பி.ப 3 மணிக்கு மூத்த உறுப்பினர்களுடனான சந்திப்பும் இடம்பெறவுள்ளது. இந்த மாநாடு மற்றும் கூட்டங்கள் அனைத்தும் கண்காட்சி மற்றும் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-21)

# குடியுரிமை பதிவுகள் பிந்தியதாக இருக்கலாம்

*கூறுகிறார் அமெ. தூதுவர்*



கொழும்பு, ஓக. 21

குடியுரிமை துறப்பு விடயத்தில், அமெரிக்க பதிவாளரின் பதிவுகள் சில மாதங்கள் பிந்தியதாக இருக்கலாம் என்று இலங்கைக்கான அமெரிக்கதூதுவர் அலய்னா ரெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள தனது இல்லத்தில் குறிப்பிட்ட சில ஊடகவியலாளர்களை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அமெரிக்கபதிவாளர்திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள, குடியுரிமை துறந்தவர்களின் பட்டியலில், கோத்தபாய ராஜபக்சவின் பெயர் இடம்பெறாமை குறித்து கேள்விகள் எழுப்பப்பட்டன.

அதுகுறித்து கருத்து வெளியிட்ட அமெரிக்க தூதுவர், குடியுரிமையை கைவிடுவது ஒரு நிர்வாக செயல்முறையாகும். குடியுரிமையைக் கைவிடுவதற்கு அதற்கான படிமுறைகளை பின்பற்ற வேண்டும். எனினும், எந்தவொருதனிப்பட்ட நபரினதும், குடியுரிமை துறப்பு தொடர்பாகவும்கருத்து வெளியிட முடியாது. அமெரிக்க சட்டங்கள் அதனை தடுக்கின்றன. ஒருவரின் குடியுரிமை துறப்பு விடயத்தில், அமெரிக்க பதிவாளரின் பதிவுகள் சில மாதங்கள் பிந்தியதாக இருக்கலாம் - என்றார். (ஓ.5)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அமெரிக்காவின் நிகழ்சி நிரலே

*விமல் வீரவன்ச மீண்டும் குற்றச்சாட்டு*

கொழும்பு, ஓக. 21

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய நடத்தப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ஹொக்கந்தர பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்விலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்கொலைதாரி ஸஹ்ரான் திடீரென உருவாகியமைக்கு என்ன காரணம்? அவருக்கு அதுவரை எந்தவொரு கோரிக்கையும் இருக்கவில்லை. தாக்குதலுக்கான உரிமையை ஐ.எஸ். பயங்கரவாதிகள் ஏற்ற போதிலும் அவர்கள் தாக்குதல் நடத்தப்பட்டமைக்கான காரணத்தை தெரிவிக்கவில்லை.

ஸஹ்ரான் போன்ற தீவிரவாதிகள் 2015ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி மைத்திரிபால சிறிசேனவுக்காக வேலை செய்தனர். ஸஹ்ரான் உள்ளிட்டவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சிக்கு கொண்டுவர செயற்பட்டதாக சாய்ந்தமருது மக்கள் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கூறினர்.

2017 ஆம் ஆண்டில் குண்டு தயாரிப்புக்கான பொருள்களை நாட்டுக்கு கொண்டு வந்ததுடன், அப்போது அவர்களுக்கு எதிராகப் பொலிஸார் செயற்படவில்லை. அவசர தருணங்களில் ஆட்சியை காப்பாற்றும் சக்தியாக ஸஹ்ரானை பாவித்தனர்.

ஸஹ்ரான் பின்னால் மேற்குலக நாடுகள் இருந்தன. அவர்களே ரணில்விக்கிரமசிங்க என்ற பொம்மையை தலைமை அமைச்சராக்கினர். அவர்கள் அதனூடாக நாட்டை கைப்பற்ற முனைகின்றனர். நாட்டில் உள்ள பல இடங்களை கையகப்படுத்தும் நோக்கில் அமெரிக்கா காணிச்சட்டத்தை கொண்டுவர உதவியது - என்றார். (ஓ.5)

## சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டோருக்கு விரைவில் இழப்பீடு

கொழும்பு, ஓக. 21

ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலையினால் சுமார் எண்ணாயிரம் வீடுகள் மற்றும் சொத்துக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கும் நடவடிக்கை தற்சமயம் முன்னெடுக்கப்படுவதாகவும் இதற்காக சுமார் எட்டு கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தில் பணிப்பாளர் சமிந்த பத்திராஜ தெரிவித்தார். (ம)

*ஹொங்கொங் விவகாரம்*

# போராட்டக்காரர்களுடன் பேசத் தயார்! நிர்வாகத் தலைவர் அறிவிப்பு

ஹொங்கொங், ஒக. 21
போராட்டக்காரர்களுடன் பேச்சு நடத்துவதற்குத் தயாராகி வருவதாகக் ஹொங்கொங் நிர்வாகத் தலைவர் கேரி லொம் தெரிவித்தார். செய்தியாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அந்தச்சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
நானும் எனது அரசின் அதிகாரிகளும் போராட்டக்காரர்களை நேரடியாகச் சந்தித்துப் பேசுவதற்கு முயற்சித்து மேற்கொண்டு வருகிறோம். அரசியலுக்கு அப்பாற்பட்டு அரசுக்கு உரிய மரியாதையும், இந்தப் பிரச்சினை குறித்த புரிதலுடனும் போராட்டக்காரர்கள் செயற்பட வேண்டும்.
ஆனால் பொது அமைதிக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் விதமான சிக்கல்களைச் சமாளிப்பதற்கு அரசு எந்தவிதமான நடவடிக்கைகளையும் தைரியமாக மேற்கொள்ளும். மேலும், போராட்டக்காரர்கள் மீது தாக்குதலில் ஈடுபட்ட பொலிஸார் குறித்து விசாரணை மேற்கொள்வதற்குத் தனிக் குழு ஒன்று அமைக்கப்பட்டு 6 மாதங்களுக்குள் அந்த விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.
இந்தசமயத்தில் ஹொங்கொங்கில் அமைதியை நிலைநாட்டுவதற்குரிய மிகவும் பொறுப்பானபதில் இதுஎன்று நம்புகிறேன் - என்றார். போராட்டக்காரர்களைச் சிக்க வைப்பதற்கு விரிக்கப்பட்ட வலை என்று கோரிலொமின் இந்தக்கருத்துக்குறித்துப் பதிலளித்தனர் போராட்டக்குழுவின் ஒருங்கிணைப்பாளர்கள்.

**பின்னணி**
பிரிட்டனின் காலனி ஆதிக்கத்தில் இருந்து ஹொங்கொங் விடுவிக்கப்பட்ட பின்னர் 1997ஆம் ஆண்டு சீனாவின் நிர்வாகப் பகுதிகளில் ஒன்றானது.
சீனாவின் நேரடிக்கட்டுப்பாட்டில் இருந்தாலும், ஹொங்கொங்குக்கு என்று தனியான பண அலகு, சட்டம், அரசமைப்பு எல்லாம் உள்ளன. இந்த நிலையில் ஹொங்கொங்கின் குற்றவாளிக ளைச் சீனாவுக்குப் பரிமாற்றம் செய்வதற்கான சட்டத் திருத்த தீர்மானத்தை ஹொங்கொங் நிர்வாகம் நடைமுறைப்படுத்த முனைந்தது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் சீனாவின் ஆதிக்கத்துக்கு எதிராகவும் ஹொங்கொங்கில் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

## ஏவுகணையைப் பரிசோதித்தது அமெரிக்கா!

*பதற்றத்தை அதிகரிக்க முற்படுவதாக ரஷ்யா தெரிவிப்பு*

மொஸ்கோ, ஒக. 21
அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள, சான்நிக்கோலாஸ் தீவில் உள்ள அமெரிக்கக் கடற்படை தளத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமையன்று அமெரிக்கா ஏவுகணைச் சோதனை நடத்தியது. குறித்த ஏவுகணைகள் நடுத்தர, தொலைவு ரகத்தைச்சேர்ந்தவை என அமெரிக்கத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில், அமெரிக்கா நடத்திய இந்த ஏவுகணைச்சோதனை உலக நாடுகளுக்கிடையே பதற்றங்களை அதிகரிக்கச் செய்வதற்கு வழிவகுத்திருப்பதாக ரஷ்யாவின் அயலுறவுத்துறை அமைச்சர் தெரிவித்தார். இது குறித்து ரஷ்யாவின் அயலுறவுத்துறை அமைச்சர் செர்ஜி ரியாப்கோவ் கூறுகையில்; 'அமெரிக்கா ஏவுகணைச்சோதனையைச் செய்திருப்பது கவலைக்குரிய செயலாகும். இதன் மூலம் அமெரிக்கா இராணுவப் பதற்றங்களை அதிகரிப்பதற்கு வழிவகுக்கிறது. ஆனால் நாங்கள் இந்த மாதிரியான ஆத்திரமூட்டும் செயல்களுக்குப் பதிலடி எதுவும் கொடுக்க மாட்டோம் எனத் தெரிவித்தார். கடந்த வாரம் ரஷ்யா பரிசோதித்த அணு ஆயுத ஏவுகணைச் சோதனையின்போது ஏற்பட்ட விபத்தில் 4பேர் சாவடைந்திருந்தனர். இந்த நிலையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளது ரஷ்யா.

**பின்னணி**
2ஆம் உலகப் போருக்குப் பின்னர் வல்லரசு நாடுகளான அமெரிக்கா - ரஷ்யா ஆகிய நாடுகளுக்கிடையில் எழுந்த ஆயுதத் தயாரிப்புப் போட்டியைக் கட்டுப்படுத்தும் விதமாக அமெரிக்கா மற்றும் அப்போதைய சோவியத் ஒன்றியம் இடையே 1987ஆம் ஆண்டு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது. நடுத்தர தொலைவு அணு ஆயுதங்கள் உடன்படிக்கை என்று அழைக்கப்படும் இந்த ஒப்பந்தத்தின்படி சிறிய மற்றும் நடுத்தர தூர அணு ஆயுத ஏவுகணைகளைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டது. கடந்த ஓகஸ்ட் மாதம் இந்த ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா வெளியேறியது. குறித்த ஒப்பந்தம் செயலிழந்துவிட்டதாக ரஷ்யாவும் அறிவித்தது. இந்த நிலையிலேயே இரண்டு நாடுகளும் ஏவுகணைச் சோதனையில் ஆர்வம்காட்டிவருகின்றன.



“புதிய ஆயுதத்தைச் சோதனை செய்வதை, வட கொரியாத் தலைவர் கிம் ஜோங் உன் வழிநடத்துகிறார்” என்று குறிப்பிட்டு, வட கொரியாவின் மத்திய செய்தி நிறுவனம் வெளியிட்ட ஒளிப்படம் இது.

## சிரியா இராணுவம் அதிரடி

டமாஸ்கஸ், ஒக. 21
சிரியாவின் இட்லிப் மாகாணத்தில் ஆயுததாரிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த முக்கிய பகுதியை சிரிய அரச படைகள் கைப்பற்றின. இது குறித்துச் சிரியப் போர்க் கண்காணிப்புக் குழு தெரிவித்ததாவது:
சிரியாவில் இட்லிப் மாகாணத்தில் கடந்த சில நாள்களாக அரச படைகள் கடுமையான தாக்குதலை நடத்தின. இந்தநிலையில் இட்லிப் மாகாணத்தின் வடமேற்கிலுள்ள ஷான் ஷெகுன் பகுதியை அரச படைகள் கைப்பற்றின. இதைத்தொடர்ந்து அந்தப் பகுதியிலிருந்து ஆயுததாரிகள் வெளியேறினர் என்றது.

**பின்னணி**
சிரியாவில் அதிபர் ஆசாத்துக்கும், ஆயுததாரிகளுக்கும் இடையே 8 ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது. இதில் ஆசாத் அரசுக்கு ரஷ்யா ஆதரவு அளித்துவருகிறது. இந்த உள்நாட்டுப் போரில் லட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். பலர் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர். ஆயுததாரிகளுடனான போர் நிறுத்தத்துக்குச் சில நாள்களுக்கு முன்னர் அரசதரப்பில் சம்மதம் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, சில நாள்கள் அங்கு போர் நிறுத்தப்பட்டது.
இந்த நிலையில் ஆயுததாரிகளின் பகுதியில் தாக்குதலை மேற்கொண்டு, அவர்கள் வசமிருந்த பகுதியைக் கைப்பற்றியுள்ளது அரசபடை.

## இன்றைய நாள்

**மேடம்:** மனதில் நம்பிக்கை வளர்ப்பது அவசியமாகும். தொழில் வியாபாரத்தில் உள்ள குறைகளை பிறரிடம் சொல்ல வேண்டாம். அதிக நிபந்தனையுடன் பண்க்கடன் பெறக்கூடாது. வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**இடபம்:** பலநாள் தாமதமான பணி ஒன்று எளிதாக நிறைவேறும். தொழிலில் உற்பத்தி, விற்பனையில் அனுகூலம் ஒருசேரக் கிடைக்கும். பணப்பரிவர்த்தனையில் முன்னேற்றம் உண்டு.

**மிதுனம்:** சிறு செயலையும், நேர்த்தியுடன் செய்வீர்கள். வெற்றிபெற எளிதான வழிபிறக்கும். தொழில் வியாபாரம் வியப்பூட்டும் வகையில் செழிக்கும்.

**கடகம்:** சிலர் உங்களுக்கு தவறான ஆலோசனை சொல்வர். எதிர்கால நலன் கருதி விலகுவது நல்லது. தொழிலில் குறையை சரி செய்வதால் உற்பத்தி, விற்பனை சீராகும்.

**சிம்மம்:** உங்கள் செயல்களில் நிதானம் வேண்டும். சகதொழில் சார்ந்த எவரிடமும் சச்சரவு பேசக்கூடாது. தொழில், வியாபாரத்தில் பணிச் சுமை அதிகரிக்கும்.

**கன்னி:** நேர்மைக்குணம் அதிகம் பின்பற்றுவீர்கள். திறமை வளர்ந்து பல மடங்கு நன்மை தரும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கை அடைவீர்கள். பணம் கொடுக்கல் வாங்கல் சீராகும்.

**துலாம்:** உங்கள் பேச்சில் ரசனை மிகுந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி புதிய அனுபவம் தரும். நிலுவைப்பணம் வசூலாகும். குடும்ப பிரச்சினைக்கு சுமுக தீர்வு கிடைக்கும்.

**விருச்சிகம்:** சொந்த நலனில் அக்கறை கொள்வீர்கள். அவப்பெயர் வராமல் செயல்பட வேண்டும். தொழில்; வியாபரம் கூடுதல் பணி உதவும். அளவான பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** உங்கள் செயற்றிறன் கண்டு சிலர் பொறாமை கொள்வர். பொறுமை காப்பதால் சிரமம் தவிர்க்கலாம். தொழில் வளர்ச்சி பெற கூடுதல் பணிபுரிவது அவசியமாகும்.

**மகரம்:** வாழ்வில் முன்னேற்றம் பெற புதிய வாய்ப்பு வரும். சாமர்த்தியமாக செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி நிறைவேறும். உபரி பணவருமானம் கிடைக்கும்.

**கும்பம்:** சிலர் உதவுவது உங்களுக்கு போல பாசாங்கு செய்வர். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற சில மாற்றம் செய்வீர்கள்.

**மீனம்:** உங்கள் பேச்சில் உறுதி நிறைந்திருக்கும். உயர்ந்த செயல்களால் நன்மதிப்பு பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் குறுக்கிட்ட இடையூறு விலகும்.

உதயன்
@UthayanPrint
புதன் பொய்கை
ஒகஸ்ட் 21, 2019





கே.எஸ்.சிவஞானராஜா

# இலங்கை வேந்தன் கல்லூரியில் தேன் சொட்டிய அரங்கேற்றங்கள்

புலம்பெயர் நாடுகளில் கலைகள் செம்மையாகவும்- செவ்வையாகவும்- சேமிப்பாகவும் போற்றப்படுவதோடு சாதனையாகவும் அரங்கேற்றப்படுகின்றன.

லண்டனை வதிவிடமாகக் கொண்ட இளங்கிளிகளான காயத்திரி கிருஷ்ணதாசன், சகானா கிருஷ்ணதாசன் இருவரினதும் 'வீணை, வயலின், வாய்ப்பாட்டு, பரதநாட்டியம்' ஆகிய நான்கு முதன்மை பேரின்பக் கலைகளின் அரங்கேற்றம் சபையோரின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டன.

கடந்த 10ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இலங்கை வேந்தன் கல்லூரியை நோக்கி இரசிகப் பெருமக்கள் படையெடுத்தனர்.

நல்லூரான் கிருபையும், யாழ்ப்பாண மண்ணின் வரமும் ஒருங்கேகூடிய அரங்காக மண்டபம் சொந்தபந்த உறவுகளாலும் கலைநயப் பிரியர்களாலும் நிரம்பி வழிந்தது.

வழமையான சம்பிரதாய நிகழ்வுகளோடு குரு ஆசீர்வாதமாக வீணை ஆசிரியர் ஸ்ரீமதி அம்பிகை சிவராஜா, வயலின் ஆசிரியர் ஸ்ரீமதி ஸ்ரீரஞ்சினி ராஜேஸ்வரன், வாய்ப்பாட்டு ஆசிரியர் ஸ்ரீமதி கல்பனா செகராஜசிங்கம், பரதநாட்டிய ஆசிரியர் ஸ்ரீமதி மாலதி ஜெயநாயகன் ஆகி யோர் வாலாய வரங்களுக்கு வித்திட்டார்கள்.

**வீணை அரங்கேற்றம்**

நாட்டை, கதனகுதூகலம், பூரணச் சந்திரிகா கல்யாணி, ஆபேரி, மத்தியமாவதி, ஹம்சாநந்தி, இராகத்தில் அமைந்த உருப்படிகள், காயத்திரி, சகானா இருவரையும் உச்சநிலைக்கு இட்டுச் சென்று அரங்கத்தை கதன குதூகலமாக்கிற்று. 'நகுமோ' என்ற உருப்படி இரசிகர்களின் கரங்களுக்கு விருந்தாகிற்று. ஒத்திசைவு பலே.

**வயலின் அரங்கேற்றம்**

கம்பீரநாட்டை, ஸ்ரீ இராகம், ஹிந்தோளம், ரேவதி, சண்முகப்பிரியா ஆகிய இராகத்தில் அமைந்த உருப்படிகள் நாதப் ரம்மத்தைக் கோபுரமாக ஒளிரவைத்தது. ஸ்ரீ இராக பஞ்சரத்தினம் மண்டபத்தை ரம்மியமாக்கியது.

**குரலிசை**

திலங் ராகம், பெளளி ராகம், மோகன ராகம், ரேவதி ராகம், ஆபேரி ராகம், தனா ஸ்ரீ ராகம், செளராஷ்டிர ராகம் ஆகியவற்றிலமைந்த உருப்படிகளில் உன்னதமான மகோன்னத உருப்படியாக மோகன இராகத்திலமைந்த 'இராகம் தானம் பல்லவி' என்ற மனோதர்ம உருப்படி அரங்கேற்ற நாய்கிகளைப் பெறுமதியாக்கிற்று.

**பரதநாட்டியம்**

புஷ்பாஞ்சலி, அலாரிப்பு, வர்ணம், கீர்த்தனம், பதம், காவடிச்சிந்து, தில்லானா யாவுமே பாவ இராக தாள அபிநய ஆர்ப்பரிப்புடன் தேவ கன்னியர்களின் தித்திப்பு ரசமோடு பக்தியும் பரவசமும் பரோபகாரமாகவும் சுவை கொட்டியது. உடை நடை பாவனை உச்சம்.

அளவான அழகான இதமான பதமான நாட்டிய விளம்புதல்களும் தளம்பலில்லாத பாதலயவின்னியாசங்களும் தொய்வுபடாத அங்க அசைவுகளும் பளிச்சென்று கருத்தூறும் அபிநய முத்திரைகளும் பிரம்மாதம்.

மதுவந்தி இராகம் தோய்ந்த பதம் எந்தவித சேதாரமின்றி பார்ப்பவர்கள் நெஞ்சைக் கொள்ளை கொண்டது. அபிநய பாவராக தாளத்தோடு ஒட்டிக் கொண்ட நட்டுவாங்கம் சிறிமதி கிருஷ்ணபவானி சிறிதரனுக்கு ஒரு வரப்பிரசாதம். ஆடல் அரங்க நர்த்தகிகளுக்கு ஒரு முப்பரிமாணமாகக் களைகட்டியது.

ஆரூரனின் சாதனைக்குரல் பரதநாட்டிய தாரகைகளான காயத்திரிக்கும் சகானாவுக்கும் சிகரம் தொடுமாறு தித்திப்புச் செய்தது. திபாகரனின் அதிசயமான வயலினிசையும் வசந்தின் சொற்கட்டு பிசகாத மிருதங்க வார்ப்பும் பிரியந்த தசநாயக்காவின் வேணுகானமும் மற்றும் இலட்சாயினி, இரட்ணதுரை, விஸ்வநாதன் சண்முகாவின் இசைமொழி உபகாரங்களும் பிஞ்சுவிரல் கொஞ்சிய சரண் குட்டியும் அரங்கேற்றத்தின் தான, தர்ம புரோகித பாக்கியங்கள். முதன்மை விருந்தினராக கலாநிதி கிருஷாந்தி ரவீந்திராவும், சிறப்பு விருந்தினராக கலாநிதி அருணந்தி ஆரூரனும் கலந்து காயத்திரிக்கும் சகானாவுக்கும் மகுடமெனப் புகழாரம் சொரிந்து, புலம்பெயர் மக்களின் கலை ஆர்வத்தையும் அக்கறையையும்- அதிசயத்தையும் வியந்து உரையாற்றினார்கள். தரமான கலாநிதிகள் இருவரின் உரமான உரைகள் நம்மண்ணுக்கு மாத்திரம் இல்லாது, புலம்பெயர் நாடுகளில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக பேறு கொண்டன. நல்லூரின் வசந்தம் நாலாபுறமும் பிரவாகிக்கின்றது. திரு.திருமதி கிருஷ்ணதாசன் குடும்பத்தினர் புண்ணியம் செய்தவர்களே!


**அரங்கேற்றம் சொல்லும் செய்தி**

நம்நாட்டிலே ஏராளமான கலைஞர்கள் பல துறைகளிலும் வெற்றி பெற்றுச் சாதனை புரியக் காத்திருக்கிறார்கள். ஆனால் பொருளாதார நெருக்கடிகளால் தத்தம் ஆற்றுகைகளை வெளிப்படுத்த முடியாமல் இருக்கின்றனர். வாரம் ஓர் அரங்கு கொக்குவில் பிரதேசத்தில் நடைபெற ஆவன செய்யப்படுகின்ற செய்தி புலம்பெயர் நாட்டுக் கலைஞர்களையும் வசீகரிக்கும் என்பதில் ஐயமில்லை. முயற்சி திருவினையாகட்டும்.









எழுத்தாளர் மு.சிவனேசன் எழுதிய பாற்கடல் என்கின்ற நூல் ஆக்கத்தின் முதல் பிரதி அண்மையில் வெளியிடப்பட்டது. புலோலி ஆலடிப் பிள்ளையார் மகோற்சவத்தின் இறுதிநாளான கடந்த 15ஆம் திகதி மேற்படி நூல் வெளியிடப்பட்டது. ஆலய தலைமைக்குரு சிவஸ்ரீ.துஷ்யந்தக் குருக்களின் கரங்களால் கம்பவாரிதி இ.ஜெயராஜ் நூலைப் பெற்றுக்கொண்டார்.

# மன். எழுத்தாளர் அன்பழகி எழுதிய 'அமுதப்பிரவாகம்' நூல் வெளியீடு!

மன்னார் எழுத்தாளர் அன்பழகி கஜேந்திரா எழுதிய 'அமுதப்பிரவாகம்' நூல் வெளியிட்டு விழா கடந்த 10ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினர் ஜே.ஆர்.மயூரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நூல் வெளியீட்டு விழாவுக்கு தலைமை விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.சார்ள்ஸ் நிர்மலநாதன் கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைத்தார். (ம-56)



# அழகிய தமிழ்

தமிழ்க் கவிகள்
ஒவ்வொருவரும்
தெரிவிக்கும் கருத்துக்கள்
ஆயிரம் ஆயிரம்!

எரியும் விளக்கின்
எண்ணெயைப் போலதாம் அவைகள்!
இருள் சூழ்ந்த நம் வாழ்வில்
சுடர்ஒளி பரவிட துணை நிற்பவை!

தமிழனை ஆட்சி செய்ய
தமிழன் அவசியம் இல்லை!
தமிழ் மொழியும்
தமிழர்தம் மரபும் அறிந்திடல் வேண்டும்!

சிந்தையினில் பாரதியின் வரிகளை
இந்த வேளையினில் மறவோம்
சாதிகள் இரண்டே! ஒன்று
மேலோர் மற்றொன்று கீழோர்!

நீதிநெறியிலின்று பிறருக்கு உதவும்
நன்னெறி கொண்ட மேலோர்களை
தலைவர்கள் ஆக்குவோம்!
கீழோர்களை ஒதுக்குவோம்!

# 'இலகு ஆங்கிலம்' நூல் வெளியீடு







ஓய்வுபெற்ற கோட்டக் கல்வி அதிகாரி ச.மாட்டின் டயஸ் எழுதிய 'இலகு ஆங்கிலம்' நூல் வெளியீட்டு நிகழ்வு மன்னார் நகர சபையின் கோட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், முதன்மை விருந்தினராக வடக்குமாகாண பிரதி முதன்மைச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமேல் மற்றும் மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் ஜே.ஜே.பிறட்லி ஆகியோர் கலந்து கொண்டனர். இதன்போது வடக்கு மாகாணப் பிரதி முதன்மைச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமேல் குறித்த நூலை வைபவ ரீதியாக வெளியிட்டு வைத்தார். (56)



# எழுதப்படாத நாடக வரலாறு — 15

## மண்சுமந்த மேனியர் நாடகம்

தேவநாயகம் தேவானந்த்

மண்சுமந்த மேனியர் எண்பதுகளில் முனைப்புப்பெற்ற சமூக. அரசியல் நிலமைகளை மிக ஆழமாகப் பேசிச் சென்றிருக்கிறது. தமிழ் சமூகத்தின் இரண்டாயிரம் ஆண்டு பழஞ்சுமைகளையும் எள்ளல் சுவையோடு தந்திருக்கிறது. இந்த நாடகம் செய்துகாட்டல் பாணியைக் கொண்டது. அது ஜேர்மனிய நாடகமேதை பேட்டோல் பிரெட் குறிப்பிடும், அந்நியமாதல் தத்துவத்தை அடிப்படையாகக்கொண்டது. பார்வையாளர்கள் பாரத்திரத்தோடு ஒன்றித்துவிடாது. அதிலிருந்து விடுபட்டு சித்திப்பதற்கான வாய்ப்பை வழங்கும் பண்பு கொண்டது.

நாடகத்தில் உரைஞர்கள் நாடகத்தை நகர்த்திச் செல்கிறார்கள். அவர்களே முரணை உருவாக்குபவர்களாகவும், முரண் தீர்ப்பவர்களாகவும் காணப்படுகின்றார்கள். அதேவேளை அபத்த பாணியில் எதிர்காலத்தோடும் இறந்த காலத்தோடும் தொடர்புபடுத்தி நிகழ்காலத்தை நகர்த்துகிறார்கள் எனலாம். பார்வையாளரை விளிப்பாகவும் செயற்றிறனுடனும் வைத்துக் கொள்ளும் பணியும் எழுத்துரைஞர்களையே சாரும். நாடக மாந்தரையும் கதையையும் பார்வையாளருக்கு இணைக்கின்ற பணியும், நாடகத்தை நகர்த்தும் பணியும் எடுத்துரைஞர்களிடமே கொடுக்கப்பட்டுள்ளது.

⊙ ⊙ ⊙ ⊙ ⊙

தங்கள் பிள்ளைகளின் கல்வியை நம்பி தமது வாழ்நாள் முழுமையையும் செலவு செய்யும் வழக்கத்தைக் கொண்டதாக யாழ்ப்பாணச் சமூகம் காணப்படுவதும், பிள்ளை படித்தால் ஓர் அரச உத்தியோகம் கிடைக்கும், அதன் வழி குடும்பம் சிறக்கும் என்ற மனப்பாங்குடைய சமூக உளவியலை நாடகாசிரியர் நன்கு வெளிப்படுத்துகிறார். நிலத்தைக் கிண்டுதல், பிள்ளைகளில் முதலிடுதல், பின்னர் பிள்ளை பின்னடிக்கு, அந்தப் பிள்ளையே வீட்டின் குமருகளை கரை சேர்ப்பான், அவனே உதவியென்று வாழ்கிற நடுத்தர வர்க்க மனப்பாங்கு நன்கு வெளிப்படுகிறது. இந்தக் குடும்பம் ஆயுதப் போராட்டத்தால் மாற்றம் அடைந்து வருகிறது என்பதையும் நாடகம் காட்டுகிறது. ஆயுதப் போராட்டம் ஏற்படுத்திய அதிர்ச்சி தமிழ்ச் சமூகத்தையே மாற்றத்துக்கு உட்படுத்துகிறது என்பதும் வெளிப்படுத்தப்படுகிறது.

யாழ்ப்பாண நடுத்தரக் குடும்பங்களின் மானப் பாரங்களை இறக்கிவைக்கிற இடம் கோவில் அதனை கிராமிய பண்பாட்டு பலத்துடன் உள்ள சன்னதி கோவிலை வைத்து ஆசிரியர் நன்கு வெளிப்படுத்தியுள்ளார் எனலாம். இதில் உள்ள உணர்ச்சிப் பெருக்கு நாடகத்தில் அற்புதமாகக் காட்டப்படுகின்றது.

*'சன்னதிக் கந்தா, சரணம் அப்பு!*
*என்ர இளையவன் சோதினை எடுக்கிறான்*
*மூத்தவனை நம்பிமோசம் போனன்*
*ஊருக்கு உழைக்கிறன் எண்டு அலையிறான்*
*இளையவனைப் பாசுபண்ண வையப்பு*
*மூட்டை அரிசி அவிச்சுப் போடுவன்'*

என்ற அன்னை பாத்திரத்தின் வேண்டுகோள் இதற்கு நல்ல எடுத்துக்காட்டு எனலாம்.

⊙ ⊙ ⊙ ⊙ ⊙

"மண் சுமந்த மேனியர் பயிற்சிகள், மக்களுடன் பழகுதல் ஊடாக யாழ்ப்பாண சமூகக் கட்டமைப்பை ஊடறுத்துப் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தபேறு" என்கிறார் செல்லையா ஞானசேகரன். இவர் மண் சுமந்த மேனியரில்; கிழவன் பாத்திரம் ஏற்றுநடித்தவர். தற்போது அமெரிக்கவில் ஆசிரியராகப் பணியாற்றுகிறார்.

மண்சுமந்தமேனியர் தமிழ்ச் சமூகத்தை ஒரு சமூகவியல் பார்வையில் பார்ப்பதற்கு மேலாக அந்தக் காலத்தில் காணப்பட்ட பிராந்திய அரசியல் நிலமைகள் பற்றியும் பேசுகிறது. குறிப்பாக இந்தியாவை நம்பிய சீவியம் பற்றி அதிகமாகப் பேசுகிறது. அகில இந்திய வானொலியின் மாநிலச்செய்திக்காகக் காத்திருக்கிறது. அதனூடாக இந்திய ஆட்சி வந்து சிறக்கும் என்று காத்துக் கிடந்ததையும் நாடகம் வெளிப்படுத்துகின்றது.

கிழவன் :
அடியடா படலேலை எண்டானாம்!



படங்களை தந்துதவியவர்: செல்லையா ஞானசேகரன்

மாநிலச் செய்தி மூலம் அந்த ஆட்சி இஞ்ச வந்திடுமெண்டு,
வாயைப் பிளந்து வடக்கை பாக்கிற கூட்டம்;
எடேய், வடக்கை வானம் வெளுக்குமெண்டு புடுக்கைச் சொறிஞ்சு பாத்துக் கொண்டு நில்லுங்கோ பேப்ப்... எனக்குவரற ஆத்திரத்துக்கு....! என்று கிழவரின் கோபம் நாடகத்தில் நீள்கிறது.

மண்சுமந்த மேனியர் நாடகம் 1985ஆம் ஆண்டு எழுதப்பட்டது. அதன் பின்னர் இந்திய வானூர்திகள் யாழ்ப்பாணத்தில் பறந்துசாப்பாடுபோடுது. 1987ஆம் ஆண்டில் இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுகுது. இந்திய இராணுவம் வருகுது. புலிகளுடன் சண்டை, பொதுமக்கள் சாகிறார்கள். ராஜீவ்காந்தி கொலை, பிராந்திய அரசியல் மாற்றம் இவையெல்லாம் நடந்து, மண்சுமந்த மேனியர் கிழவன் பாத்திரம் சொன்னதை நிரூபித்திருக்கிறது. வடக்கிலிருந்து வானம் வெளுக்காது, தமிழருக்கு நன்மை வராது என்பது முள்ளிவாய்க்காலுடன் நிரூபணமாகிறது எனலாம். இவற்றை அன்றே எதிர்வு கூறியவர்களை மனப்பிறள்வானவர்களாகச் சித்தரித்தார்கள் என்பதையும் நாடகம் குறிப்பிடுகிறது. நாடகம் அன்றிருந்த நிலமைகளைப் பேசி எதிர்காலம் தொடர்பான எச்சரிக்கையைத் தந்திருக்கிறது. ஆனால் அதனை ஒரு படிப்பினையாகக் கொண்டு எமது அரசியலோ, ஆயதப் போராட்டமோ நகரவில்லை என்பதுதான் எம்முன்னே உள்ள சோகம் என்பேன்.

⊙ ⊙ ⊙ ⊙ ⊙

மண்சுமந்த மேனியரின் பாடலொன்று இதனை அற்புதமாகக் வெளிக்காட்டிநிக்கிறது.



*ஓ நாய்களாக, வேட்டைப் பறவையாய்*
*ஒவ்வொரு நாளும் பலியிடப் படுகின்ற*
*ஆட்டுக் கடாக்களாய்*
*கணிக்கப்படுவதை நாங்கள் வெறுக்கிறோம்*

இந்தப் பாடலில் சொல்லப்பட்டது போன்று, ஒவ்வொரு நாளும் பலியடப்படுகின்ற ஆட்டுக் கடாக்களாய் தமிழ்ச் சமூகம் இருப்பதுதான் அவலம்.

இந்தக் காலத்தில் வானூர்தித் தாக்குதல், ஊரடங்குச் சட்டம், குண்டுவெடிப்பு என்று பல சம்பவங்களையும் நாடகம் பதிவு செய்திருக்கிறது. இந்தியச் செய்தி கேட்டலும் தமிழர்கள் இந்தியா சார்பு நிலையில் நிற்பதும், சுட்டிக்காட்டப்படுகிறது. கிரிக்கெட் விளையாட்டில் கூட இந்தியாவுக்கு ஆதரவளிக்கும் மனோநிலையில் தான் ஈழத்தமிழர்கள் உள்ளார்கள் என்பது அற்புதமாகக் காட்டப்படுகிறது. காலத் தேவையான வானொலிப் பெட்டியின் முக்கியத்து வம் மிகஅற்புதமாக மேடையில் காட்சிப்படுத்தப் பட்டுள்ளது. அதேவேளை வானொலிப் பெட்டியைப் பார்த்து கிழவன் சொல்வது மிகத்தெளிவாக வானொலிப் பெட்டியின் முக்கியத்தை விளக்குகிறது.



*ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே*
*உலகுக் கொரவனாய் நின்றாய் நீயே*
*வாசமலரெலாம் ஆனாய் நீயே*
*மலையான் மருகனாய் நின்றாய் நீயே*
*பேசப் பெரிதும் இனியாய் நீயே*
*பிரானாய் அடியென் மேல் வைத்தாய் நீயே*
*தேசவிளக்கெலாம் ஆனாய் நீயே*
*திருவையாறு அகலாத செம்பொற் சோதி*

தமிழர் போராட்டம் இந்தியாவின் கையில் இருப்பதை நாடகம் கடுமையாக விமர்சித்துச் செல்வதைக் காணலாம்.
ஆற்றையும் கையிலை குடுமியைக் குடுத்திட்டுத்
தலையைக் குனிஞ்சுகொண்டு நிக்கிற சனியன்கள்...

*(தொடரும்)*

# பரதனும் குகனும் அன்பில் உயர்வுறும் பண்பாளர்கள்

இராமபுரத்தூர் நிஷாந்தன்



கம்பரால் இயற்றப்பட்ட கம்பராமாயணம் எனும் இலக்கியத்திலே கடந்த வாரம் கம்பரின் பாடல்களின் வழியே தாரையின் சிறப்பினை கண்ணுற்றோம். அதுபோல இந்த வாரம் கம்பராமாயணத்தில் மனங் கொள்ளத்தக்க இன்னொரு காட்சியைக் காண்போம். கம்பராமாயணத்தில் அன்பின் துருவங்களாக அணி சேர்க்கின்ற பரதன் மற்றும் குகன் பற்றிய பார்வையே இதுவாகும். பரதனும், குகனும் ஒருவர் மீது ஒருவர் கொண்ட அன்பின் ஆசுவாசம் பற்றி இங்கு நோக்குவோம் வாருங்கள்.

**பரதன் எனும் பண்பாளன்**

தசரதன் மற்றும் கைகேயியின் மகனே பரதன். தூய்மையான குணம் படைத்த நற்பண்பாளன் இவன். தனக்காக தன் தாய் கைகேயி தந்தையிடம் பெற்றுக்கொடுத்த அயோத்தியின் ஆட்சியுரிமையை வஞ்சனை நிறைந்தது எனக் கருதி அதை ஏற்க மறுத்தவன். அதுமட்டுமன்றி தன் அண்ணன் அமர வேண்டிய அரியணையில் தான் அமர மாட்டேன் என உரைத்து, அண்ணன் இராமனை மீண்டும் காட்டிலிருந்து அழைத்து வந்து அரியணையில் அமரச் செய்வேன் எனச் சபதம் செய்து, தானும் இராமனைப்போலவே மரவுரி தரித்து அண்ணன் இராமன் சென்ற வழியிலேயே தானும் வனம் நோக்கிச் செல்கின்றான்.

**குகன் எனும் வேடுவர் தலைவன்**

பரதன் குறித்து கண்ட நாம் குகனைக் குறித்தும் இங்கு காண்போம். கங்கைக் கரையில் நெடுங் காலம் வாழ்ந்து வருகின்றவன். அந்தக் கங்கையாற்றின் ஆழம் கண்டவன், அத்தோடு கங்கையாற்றில் படகுகளை செலுத்துபவன், வேடுவர் குலத்தின் நிகரில்லாத தலைவன், இராமனின் மீது எல்லை காண முடியாத அளவுக்கு பேரன்பு கொண்டவன். அந்த இராமனால் தம்பியாக ஏற்றுக் கொள்ளப்பட்டவன். இராமன் தன் மேனியோடு அரவணைத்து அன்பினைப் பொழிந்த சிறப்புக்குரியவன்.

**பரதன் சேனையோடு வருவதைக் கண்டு குகனது சந்தேகம்**

இது இவ்வாறு இருக்க, தன் அண்ணன் இராமன் வனம் சென்றதை அறிந்து, உடன் தன் அண்ணன் இராமனை அழைத்து வரும் நோக்கத்துடன் அவ் இராமன் சென்ற வழி தனிலே தன் சேனையோடு பரதன் வருவதைக் கண்ணுற்ற குகனோ தன் மனதில் கோபம் வெளிப்பட சந்தேகம் கொள்கின்றான். அந்தத் தன்மையினை கம்பரின் பாடல் வாயிலாக காண்போம்.

அப் படை கங்கையை அடைந்த ஆயிடை
*'துப்புடைக் கடலின் நீர் சுமந்த மேகத்தை*
*ஒப்புடை அண்ணலோடு உடற்றவே கொலாம்*
இப் படை எடுத்தது என்று எடுத்த சீற்றத்தான்

பரதனின் கணக்கிட முடியாத சேனை கங்கையின் கரையை வந்தடைந்ததைக் கண்ணுற்ற குகன், பரதனது இந்தச் சேனை வலிமையான கடலில் உள்ள நீரினை உண்டு, மழைபொழிவதற்குத் தயாராக உள்ள கருமேகத்தை போன்ற கரிய நிறம் படைத்த இராமனோடு போர் செய்வதற்காகவே இங்கு வந்துள்ளது எனவாறு சந்தேகம் கொண்டு, அக்கணமே கடும் சீற்றம் கொண்டான் குகன். யமனை ஒத்த வலிமை படைத்தவனும், வில்வித்தையில் தேர்ச்சி உடையவனும், வலிமையான வேடுவ சேனையைக் கொண்டவனுமாகிய குகன் தன் கண்களில் இருந்து தீப்பொறிகள் பறக்கவும், நாசியில் இருந்து புகை வெளிப்படவும், தன் தோள்கள் மேலெழவும், புருவங்கள் வளைந்திடவும் தன் வேடுவ சேனையை அழைத்து, பரதனது சேனையோடு போர் செய்திட தயாராகினான் குகன்.

**குகனைக் குறித்து சுமந்திரன் பரதனுக்கு உரைத்தல்**

இவ்வாறு போருக்கு தயாராகி நிற்கின்ற குகனைக் குறித்து அறிந்து கொண்டவனாகிய தசரதனின் தேர்ச் சாரதியாகிய சுமந்திரன், பரதனிடம் வந்து குகனைக் குறித்து கூறத் தொடங்கினான். பாடல் இது தான்,

*கங்கை இரு கரை உடையான்; கணக்கு இறந்த நாவாயான்;*
*உங்கள் குலத் தனி நாதற்கு உயிர்த் துணைவன்; உயர் தோளான்;*
*வெங்கரியின் ஏறு அனையான்; வில் பிடித்த வேலையினான*
*கொங்கு அலரும் நறுந்தண் தார்க் குகன் என்னும் குறி உடையான்*

அதாவது, கங்கையின் இரு பக்கங்களையும் தனக்கு சொந்தமாகக் கொண்டவன், கணக்கிட முடியாத படகுகளை உடையவன், இராமபிரானுக்கு உயிர் போன்ற துணைவன், உயர்ந்த தோள்களைக்கொண்டவன், கொடிய யானையைப் போன்று வலிமை படைத்தவன், தன் கையில் வில்லை ஏந்தியவன், குகன் எனும் பெயர் படைத்தவன், அவன் என குகனை அழகுற அறிமுகம் செய்கின்றான் சுமந்திரன்.

**பரதன் நிலை கண்டு குகன் திகைப்பு**

குகன் குறித்து சுமந்திரன் வாயிலாக பரதன் அறிந்து கொண்டமையால் முன்னமே தன் அண்ணன் இராமனுக்கு இனிய தோழன் குகன் என்பது கருதி, தானே விரைந்து சென்று குகனை காண வேண்டும் எனும் விருப்பத்தில் விரைந்து கங்கையின் வடகரைக்கு வந்தடைகின்றான். அப்போது பரதன் நெருங்கி வந்ததும் அவன் திருமேனி நிலையைக் கண்டு குகன் ஒரு கணம் திகைப்படைந்துவிட்டான். ஏனெனில் பரதன் இருந்த நிலை கண்டுதன் நிலை இழந்தான் குகன். பரதனது கோலத்தை கம்பரின் பாடல் வழியே காணுங்கள்.

*வற்கலையின் உடையானை, மாசு அடைந்த மெய்யானை,*
*நற் கலை இல் மதி என்ன நகை இழந்த முகத்தானை,*
*கல் கனியக் கனிகின்ற துயரானைக் கண்ணுற்றான்;*
*வில் கையினின்று இடை வீழ, விம்முற்று, நின்று ஒழிந்தான்*

அதாவது, மரிவுரியை ஆடையாக உடுத்துள்ளவனும், நல்ல கலைகளை இழந்த நிலவைப் போன்ற ஒளி குன்றிய முகத்தை உடையவனும், கல்லும் தன் நிலை கண்டு கரைகின்ற இயல்புடையவனும் ஆகிய பரதனைக் கண்டு குகன் தன் கையில் இருந்து வில் நழுவி கீழே விழ வருந்தி நின்றான். மேலும் எம்பெருமானாகிய இராமன், பின்பு பிறந்த தம்பியர் எவரும் பிழை செய்வார்களோ? என தன் மனதில் எண்ணி தான் கொண்ட சந்தேகத்தை போக்கிக் கொண்டான் குகன்.

**பரதனும், குகனும் அன்பினால் தழுவிக் கொள்ளுதல்**

பரதனும், குகனும் அருகருகே நெருங்கி வந்ததும், குகன் பரதனை வணங்குகின்றான். அப்போது தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரம்மனும் வணங்கும் சிறப்புடைய பரதனும் அக் குகனது திருவடிகளில் வீழ்ந்தான். அப்போது பரதனை தூக்கி எடுத்த குகன் தந்தையிலும் அதிகமான மகிழ்ச்சி உண்டாக அவனைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டான். இராமன் மீது அன்பு கொண்டவன் குகன் என்பதால் பரதனுக்கு அவன் மீது இயல்பாகவே அன்பு உண்டானது. அது போலவே இராமனின் தம்பி எனும்போது குகனுக்கும் அளவு கடந்த அன்பானது பரதனிடத்து உண்டானது. ஆகா அருமை.

**குகனது வினாவும் பரதனது பதிலுரையும்**

பரதனும், குகனும் ஒருவரையொருவர் அன்பு பாராட்டி மகிழ்ந்த பின்னர், பரதனிடம், நீர் இவ்விடம் வந்ததன் காரணம் யாதோ? என்று வினவி நிற்க, அதற்குப் பரதன் அழகுறப் பதிலுரைத்தான். பரதன் அளித்த அந்தப் பதிலுரையே பரதனின் குணப்பண்பை உலகறியச் செய்கின்றது. உலகம் முழுவதை யும் அரசாண்ட எம் தந்தையான தசரதச் சக்கரவர்த்தி எம் முன்னைய அரசர்கள் காட்டிய அரச நீதியினின்று தவறிவிட்டார். அதனை சீர் செய்யும் பொருட்டு அண்ணனாகிய இராமனை காட்டிலிருந்து அழைத்துச்செல்ல இங்கு வந்துள்ளேன் என்றான் பரதன். இதைக்கேட்டதும் குகன் அந்தக் கணமே பரதனின் பாதங்களில் வீழ்ந்தான், மகிழ்ச்சி பொங்கிட தன் கைகளை பரதனது தாமரை மலர் போன்ற பாதங்களில் பிணைத்துக் கொண்டவாறு நீண்ட நேரம் விழுந்து கிடந்தான்.

**பரதன் மீது குகன் கொண்ட மன நெகிழ்ச்சி**

பரதன் கூறிய மொழியைக் கேட்ட குகன், பரதனின் நல்ல குணம் படைத்த மன நிலையை உணர்ந்து கொண்டான். அவனைப்பற்றி தன் மனதிலே வியப்பு உண்டாக நெகிழ்ச்சியடைந்தான். பரதனைப் புகழ்ந்து உரைக்கின்றான். கம்பர் தரும் பாடலைப் பாருங்கள்.

*தாய் உரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னை,*
*'தீவினை' என்ன நீத்து, சிந்தனை, முகத்தில் தேக்கி,*
*போயினை என்ற போழ்து, புகழினோய்! தன்மை கண்டால*
*ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ, தெரியின் அம்மா!*

தாயாகிய கைகேயியின் வார்த்தைகளைக்கேட்டு, தந்தையான தசரதன் அளித்த அரசுரிமை தன்னை தீவினையால் வந்தது என அதை நீங்கி கவலையினை முகத்தில் நிறைத்தவாறு நீ இங்கு வந்துள்ளாய் எனும்போது, உன் தன்மைகளை ஆராய்ந்து பார்த்தால், ஆயிரம் இராமரும் உன் ஒருவனுக்கு நிகராவரோ? என்று கூறி நின்றான் குகன். ஆகா! இராமனே உத்தம குணங்களின் இருப்பிடம். அத்தகு ஆயிரம் இராமரும் இணையாகாத அளவுக்கு சிறப்புடையவன் பரதன் என்றால் அவன் தன்மை தான் எத்தகையது.

மேலும் குகன் கூறுகின்றான். பகலவன் என்பான் தன் ஒளிக் கதிர்களால் ஏனைய கிரகங்கள், நட்சத்திரங்களை அடக்கிக் கொள்வதைப் போல நீயும் உங்கள் குலத்தினில் தோன்றிய பெருமைமிக்க அரசர்களின் புகழ் அனைத்தையும் உனது கீர்த்திக்குள் அடக்கிக் கொண்டாய் என்கின்றான் குகன். பரதனது நற்பண்பினால் எல்லா மன்னவர்களையும் விட உயர்ந்து நின்றான் என்பதே இதன் கருத்து.

**பரதன் மீது குகன் கொண்ட பேரன்பு**

பரதனது மனக்கருத்தை அறிந்து அவன் களங்கமில்லாத உள்ளத்தைக் கண்டு கொண்ட குகன், அவனைப் பலவாறு புகழ்ந்துரைத்து பேரன்புடன் தன் கைகளால் பரதனுக்கு பல உபசாரங்களை முறையாகச் செய்தான். ஏனெனில் அந்தப் பரதன் மீது அன்பு கொள்ளாதார் எவர் தான் உள்ளனர்? அந்தளவு பரதனின் நல் உள்ளத்தைக் கண்டவர் எவராயினும் அவன் மீது அன்பு கொள்ளத் தயங்கிடமாட்டார். இராமன் மீது முன்பும் இவ்வாறே குகனுக்கு பேரன்பு உண்டாயிற்று. இப்போது அதே அன்பானது பரதனிடத்தில் உண்டாயிற்று என்கின்றார் கம்பர். ஆம்! படிக்கும்போது எம் உள்ளத்தில் அன்பின் பிரதிவிம்பம் வெளிப்படும் காட்சி அல்லவா இது. தூய்மையான அன்பின் வெளிப்பாட்டினை பரதன் மற்றும் குகனின் வாயிலாக பாடியுள்ள கம்பரின் கவித்துவம் நயப்புக்குரியதே.

## இரட்டைக்...

சிதது வருகின்றது.

இரட்டைக்குடியுரிமை உள்ள ஒருவர் வேட்பு மனுத் தாக்கல் செய்தால் என்ன செய்வது என்பது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக் குழு தீவிரமாக ஆராய்ந்துள்ளது. 19ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைவாக இரட்டைக் குடியுரிமை உள்ள ஒருவர் இலங்கையில் எந்தவொரு தேர்தலிலும் போட்டியிட முடியாது. அவ்வாறான ஒருவர் வேட்புமனுத் தாக்கல் செய்தால், அதை எப்படி நிராகரிப்பது? யார் நிராகரிப்பது? என்பது தொடர்பில் ஆணைக்குழு ஆராய்ந்துள்ளது.

வேட்புமனுத் தாக்கலின் பின்னரான ஆட்சேபணைக் காலத்தில், இரட்டைக்குடியுரிமை உள்ள ஒருவர் வேட்பு மனுத் தாக்கல் செய்தமை தொடர்பாக எந்தவொரு சக வேட்பாளரும் ஆட்சேபணையைத் தெரிவிக்க முடியும். ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டால் அதற்கான சான்று ஆவணத்தைக் கோருவதா? அல்லது அதற்கான தீர்வை நீதிமன்றில் சென்று பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்துவதா? என்பது தொடர்பில் ஆணைக்குழுவில் இருவேறு நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. ஆணைக்குழுத் தவிசாளர் சான்று ஆவணத்தைக் கோரி அதனை ஆராய்ந்து அவரே நிராகரிக்க வேண்டும் என்ற கருத்து ஆணைக் குழுவில் முன்வைக்கப்பட்டது. அதை நீதிமன்றமே பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்து மற்றொரு ஆணைக்குழு உறுப்பினரால் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கருத்தை ஆணைக்குழுவின் இரண்டு உறுப்பினர்கள் ஆமோதிக்கும் நிலமை காணப்படுகின்றது.

இதேவேளை - அமெரிக்கக் குடியுரிமையைப் பெற்றுக் கொண்ட கோத்தபாய ராஜபக்சவின் பெயர் 2005ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டமை தொடர்பிலும், சமல் ராஜபக்சவின் வீட்டு முகவரியில் அவரது வாக்காளர் பதிவு காணப்பட்டமை தொடர்பிலும் ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது. (ஒ.5,105)

## மல்லுக்கு...

இராணுவத் தளபதியாகப் பதவி வகித்த ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவின் பதவிக் காலம் முடிந்ததை அடுத்து, இலங்கையின் 23ஆவது இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் நேற்றுமுன்தினம் நியமிக்கப்பட்டார். அரச தலைவரின் இந்த நியமனத்துக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இருந்து பலத்த விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, இறுதிப் போரின்போது நடத்தப்பட்டன என்று கூறப்படும் போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்குப் பொறுப்பானவர் என்று பல மனித உரிமை அமைப்புக்கள் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். இந்தநிலையில் அவருக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டமை ஏற்றுக்கொள்ள முடியாதது என்று கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபை ஆணையாளர், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை ஆணையாளர், அமெரிக்கா, கனடா என பல தரப்பினரிடம் இருந்து கண்டனங்களும், கவலையும் வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இது தமிழருக்கு எதிரான செயற்பாடு என்று கண்டித்திருந்தது.

இந்தநிலையில் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்த இலங்கை அயலுறவுத் துறை அமைச்சு, இந்த விடயங்களில் வெளிப்பாடுகள் அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியாது என்று கூறியுள்ளது.

இராணுவத் தளபதியாக சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டமை தொடர்பாக வெளிநாட்டு நிறுவனங்களின் கருத்துக்கள் தேவையற்றவை. இந்த விடயத்தில் வெளிநாடுகள் தலையிடவோ, அழுத்தங்களைப் பிரயோகிக்கவோ முடியாது. இராணுவத் தளபதியின் நியமனமானது அரச தலைவரின் சுயாதீனமான தீர்மானம் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

## கோத்தாவின்...

தானே? தமிழ் பேசும் மக்கள் என்ற வகையில் முஸ்லிம் மக்கள் எந்த வகையிலும் கோத்தபாயவை ஆதரிக்கக் கூடாது. ஆதரிக்கவும் மாட்டார்கள். மக்கள் நிதானமாகத் தீர்மானிக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி.

நேற்று அவரது கட்சி அலுவலத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கோத்தபாய ராஜபக்சவை வேட்பாளராகக் களமிறக்கியுள்ளனர். இராணுவத்தில் ஓய்வூதியம் பெறும் சிலர் கூறுகின்றனர். ஆயிரம் முன்னாள் இராணுவத்தினரைக் கொண்டு கோத்தபாயவுக்குப் பாதுகாப்பு அளிப்பார்களாம். ஆனால் உடனடியாக கோத்தபாய ராஜபக்சவுக்கு அரசு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று உதய கம்மன்பில கோருகின்றார். தற்போது அவர்கள் எப்படிப்பட்ட வாகனங்களில் பயணிக்கிறார்கள் என்பதைப் பார்த்தால் புரியும். அதைவிடவும் பாதுகாப்பு வேண்டும் என்று உதய கம்மன்பில கேட்கின்றார்.

மகிந்த ராஜபக்ச கோத்தபாய ராஜபக்சவை வேட்பாளராக நிறுத்த முடியாது போனால் வேறொரு முடிவு எடுப்போம் என்கிறார். அமெரிக்கா கோத்தபாயவின் குடியுரிமையை நீங்கியுள்ளது என்றால், அந்த ஆவணத்தைப் பொதுவெளியில் போட வேண்டியதுதானே?. அதனால் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று காட்ட வேண்டியதுதானே?

அவ்வாறு அவர்களால் கூற முடியாது. கடந்த ஜூன் மாதம் வந்த பட்டியலில் கோத்தபாயவின் பெயர் இல்லை. அதற்கு உதய கம்மன்பில கூறுகின்றார், ஆம்! இந்தப் பட்டியலில் இல்லை, அடுத்த மாதம் வெளியாகும் பட்டியலில் இருக்கும் என்று. அறிவில்லாது பேசுகின்றார். அவருக்குப் புரியவில்லை இந்தப் பட்டியல் 3 மாதங்களுக்கு ஒருமுறைதான் வரும் என்பது. அடுத்த பட்டியல் செப்ரெம்பர் மாத இறுதியில்தான் வரும். அந்தப் பட்டியலில் கோத்தபாயவின் பெயர் இல்லை என்றால் அவர் வெளியே. அப்போது சிராந்திதான் வேட்பாளர். அப்படி நடந்தால் மகிந்தவுடனும் ஒருவரும் கோபிக்க முடியாது. அவர் கூறுவார் நான் கோத்தபாயவை வேட்பாளராகப் பெயரிட்டேன். அறிமுகப்படுத்தினேன், விகாரைகளுக்குச் சென்றேன் என்று.

பாகிஸ்தானை பாருங்கள். அங்கு 20 அரசியல் தலைவர்கள் வரையில் சிறையில் இருக்கின்றனர். நாட்டைக் கொள்ளையடித்தனர் என்ற குற்றச்சாட்டிலேயே அவர்கள் சிறையில் உள்ளனர். ஆனால் இங்கு நாட்டைக் கொள்ளையடித்தவன், களவெடுத்தவன், மில்லியன் டொலர்களை டுபாயில் வைத்திருந்தவன் என அனைவரும் வெளியே இருந்து அரசுக்கு எதிராகப் பேசி வருகின்றனர். அவர்களின் வழக்குகளுக்கு என்ன நடந்தது?. விமல் விரவன்ச போலிக் கடவுச்சீட்டுடன் பிடிபடுகின்றார். அமைச்சர் கூறுகின்றார், அவரை விடுவியுங்கள், வந்த பின்னர் பார்க்கலாம் என்று.

இவர்களால் எமக்குப் பிரச்சினை இல்லையா? நாமல் ராஜபக்சவால் பிரச்சினை இல்லையா?. இன்று மறியலில் இருக்க வேண்டிய மகிந்த ராஜபக்ச, சிராந்தி ராஜபக்ச, நாமல் ராஜபக்ச, யோசித ராஜபக்ச ஆகியோர் இப்போது என்ன பேசுகின்றனர்?. கோத்தபாய ராஜபக்ச காலத்தில் அனைத்து நன்றாக நடந்தது என்கிறார்கள்.

சியெத்த, உதயன், சிரச என மூன்று ஊடகங்களுக்குள்ளும் புகுந்து நான்கு, ஐந்து முறை தாக்குதல் நடத்தியது கோத்தபாயவின் காலத்தில் தானே? இவை தொடர்பான மறைகாணி ஆவணங்கள் கூட இல்லாது போயுள்ளன. வெள்ளை வானில் கொழும்பு கடற்கரை வீதியில் முதலாளிகளைத் தூக்கிக் கொண்டு சென்ற வரலாறுகள் மறந்து விட்டனவா? பள்ளிவாசல்களைத் தாக்கியது மறந்து விட்டா?.

மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். நாங்கள் வீதியில் இறங்கிச் செல்ல முடியாத நிலைமையை கோத்தபாய ராஜபக்ச உருவாக்குவார். 9 ஆண்டுகள் பட்ட சிரமங்களை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். கோத்தபாய ராஜபக்ச வாகனத்தில் போகின்றார் என்றால் நீங்கள் மறுபக்கம் திரும்பி நிற்க வேண்டும். அவர் போகும்வரை ஒரு மணித்தியாலம், ஒன்றரை மணித்தியாலம் காத்து நிற்க வேண்டும். இப்படியான நிலமையையா உருவாக்கப் போகிறீர்கள்?

கொள்ளையடித்தார்களாம் ஆனால் நன்றாக வேலை செய்தனராம் என்று சில முட்டாள்கள் கூறுகின்றனர். இப்படியானவர்களை நாட்டை ஆளவிட்டு நாட்டைச் சின்னாபின்னமாக்க இடமளிக்க வேண்டாம் என்று நாம் கேட்டுக் கொள்கின்றோம் - என்றார். (எ-21)

## ஐரோப்பிய...

மிஷேல் பெச்லெட்யின் நிலைப்பாட்டை நாமும் பகிர்ந்து கொள்கின்றோம் என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே ஐரோப்பிய ஒன்றியம் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதன் மூலம் நீதி மற்றும் பொறுப்புக் கூறல் போன்றன தொடர்பில் 2019ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலும், இலங்கை ஐக்கிய மனித உரிமைகள் சம்மேளனத்துக்கு வழங்கியிருந்த கடமைப்பாடு தொடர்பில் தற்போது சிக்கல் நிலை தோன்றியுள்ளன. தேசிய ஒருமைப்பாடு தொடர்பில் இலங்கை காண்பிக்கும் முயற்சிகளைக் குறைத்துக் காண்பிப்பதுடன், போரால் பாதிக்கப்பட்ட மற்றும் உயிர் பிழைத்து வாழும் பொது மக்களுக்கும் கவலையளிக்கும் தகவலை வழங்குவதாக அமைந்துள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

## மகனைத்.....

வரே உயிரிழந்துள்ளார். அவர் உயர் குருதி அழுத்தத்தால் உயிரிழந்துள்ளார் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

செல்வராசா தனது மகனான அச்சுதனை (வயது-26) 2009 ஆம் ஆண்டு ஓமந்தைச் சோதனைச் சாவடியில் இராணுவத்தினரிடம் ஒப்படைத்திருந்தார் என்று கூறியிருந்தார். அதன்பின்னர் மகன் திரும்ப வராத நிலையில் கடந்த பத்தாண்டுகளாகத் தனது மகனைத் தேடி வந்தார்.

வவுனியாவில் கடந்த 913 நாள்களாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் முன்னெடுக்கப்படும் போராட்டத்திலும் அவர் பங்குகொண்டிருந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு அவர் சுகவீனமுற்ற நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் இரவு 10 மணியளவில் உயிரிழந்துள்ளார். இவரது மனைவி தனது மகனைத் தேடித் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

வடக்கு - கிழக்கு மாவட்டங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தமது உறவுகளைத் தேடியலைகின்றனர். அவர்கள் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தொடர் போராட்டங்களையும் நடத்திவருகின்றனர். ஆனால் அவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக இதுவரை காத்திரமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாமை அவர்களை மன உளைச்சலில் தள்ளியுள்ளது.

தொடர் போராட்டங்களாலும், மன உளைச்சலாலும் அவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தமது உறவுகளைத் தேடிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவோரில் இதுவரை 39 பேர் தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறியாமல் உயிரிழந்துள்ளனர். (எ)

## பட்டப்...

சென்றுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் நடந்துள்ளது. சம்பவத்தில் வீட்டில் இருந்த இளைஞன் ஒருவர் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முகத்தைக் கறுப்புத் துணியால் மறைத்தவாறு உந்துருளியில் வந்த கும்பலே இவ்வாறு அட்டூழியம் புரிந்துள்ளது. உந்துருளிகளில் வந்த இந்தக் கும்பல் கையில் கத்தி, கோடரிகளுடன் வீட்டுக்குள் புகுந்துள்ளது. அங்கிருந்த பொருள்களை அடித்து நொறுக்கியதுடன் பெற்றோல் ஊற்றித் தீயிட்டுவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, பட்டப்பகலில் இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் நடப்பது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான சம்பவங்களால் பொலிஸார் மீதான நம்பிக்கை குறைகின்றது என்று பொதுமக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (எ-26)

## ஐ.நா....

நியூயோர்க்கில் நேற்றுமுன்தினம் நடந்த நாளாந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இராணுவத் தளபதியாக லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டுள்ளமை குறித்து சிலர் கேள்வி எழுப்பியிருந்தனர்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம், ஏற்கனவே வெளியிட்டுள்ள அறிக்கையை நீங்கள் பார்த்திருப்பீர்கள். எமது தரப்பில், இந்த நியமனம் குறித்து நாங்களும் கவலையடைகிறோம்.

ஐ.நா. அமைதிகாப்பு நடவடிக்கைகளில், நிறுத்தப்பட்டுள்ள அனைத்து பணியாளர்களும், மிகஉயர்ந்த மனித உரிமை தரங்களுக்கு அமைய இருக்க வேண்டும் என்ற விடயத்தில், ஐ.நா. உறுதியுடன் உள்ளது.

ஐ.நா. அமைதி காப்பு நடவடிக்கைகளில் பங்கேற்கும் அனைவரும் விரிவான மனித உரிமைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள் - என்றார்.

அதேவேளை, சவேந்திர சில்வாவின் நியமனம் தொடர்பில் அமெரிக்கா மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் ஆகியோரும் கண்டனமும், கவலையும் வெளியிட்டிருந்தனர். (ஒ.5)

## பிடியை...

மக்களுக்கு துரோகம் இழைத்துள்ளது என்று தெரிவித்துள்ளது. லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா வெளிநாடுகளுக்குப் பயணிப்பதற்கு அதிகாரபூர்வ பயணங்களை மேற்கொள்வதற்குக் கூட, நுழைவிசைவுகளை மறுக்குமாறு கோருவதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஒரு மோசமான போர்க்குற்றவாளியாக குற்றம்சாட்டப்படும், மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை, இராணுவத் தளபதியாக நியமித்து, அரச தலைவர் நாட்டுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளார். அவருக்கு எதிராக போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றச்சாட்டுகள் உள்ள நிலையில், அவரது இந்த நியமனம் நல்லிணக்க செயல்முறைகளையும் முடிவுக்குக் கொண்டு வரப்படுவதை அடையாளப்படுத்துகிறது.

அத்துடன், அவருக்கு அளிக்கப்பட்டுள்ள பதவி உயர்வு நாடு முழுவதும் அச்சத்தைத் தூண்டும், குறிப்பாக; 2009 ஆம் ஆண்டில் லெப்.ஜெனரல் சவேந்திர சில்வாவின் மேற்பார்வையில் பொதுமக்கள் மீதான தாக்குதல்களில் பெரும் இழப்பை சந்தித்த நூற்றாயிரக்கணக்கான தமிழர்களிடையே, அச்சத்தை ஏற்படுத்தும்.

எண்பதுகளின் பிற்பகுதியில் மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சியை நசுக்குவதில் தனது பங்குக்காக சவேந்திர சில்வா ஒருபோதும் பொறுப்புக்கூறவில்லை.

இதன்போது, படுகொலைகள், காணாமல் ஆக்கப்படுதல்கள், சித்திரவதை, பாலியல் வன்முறைகள், ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை தொடர்பான நம்பகமான குற்றச்சாட்டுகள் உள்ளன.

அப்போது, கோத்தாபய ராஜபக்சவின் தலைமையின் கீழ், 1 ஆவது கஜபாகு றெஜிமெண்டில், சவேந்திர சில்வா பணியாற்றியிருந்தார் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஒ.5)

## விபத்தில்...

டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய இரு நாள்களின் முன்னர் வீட்டில் நடந்த விபத்தொன்றில் காலில் பாதிப்படைந்தார். அவர் தற்போது சக்கர நாற்காலியே உபயோகிக்கும் நிலையில் நேற்று நடந்த ஆணைக்குழுவின் கலந்துரையாடல், ஆணைக்குழுவின் தலைவரின் இல்லத்திலேயே நடைபெற்றுள்ளது.

ஏனைய உறுப்பினர்களில் ஒருவரான இரட்ணஜீவன் எச் ஹூல் அண்மையில் திருகோணமலையில் விபத்தொன்றில் சிக்கியிருந்தார். அவரது ஓர் கையில் முறிவு ஏற்பட்டுச் சிறு சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

நாட்டில் தற்போது தேர்தல்கள் நெருங்கும் சமயத்தில் பணிகள் அதிகரிக்கும் நிலமை உள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் இவர்கள் விபத்தில் சிக்கியுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

(எ-105)

## போட்டி முடிவுகள்

புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் தமது 45ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாவட்ட அணிகளுக்கு இடையிலான 'பி' பிரிவு அணிகளுக்கான கரப்பந்தாட்டத் தொடரில் மல்லாகம் நியூவோறியஸ் விளையாட்டுக் கழகஅணி, அச்சுவேலிவிக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணி ஆகியவை வெற்றி பெற்றது.
புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மின்னொளியில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் புத்தூர் சரஸ்வதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மல்லாகம் நியூவோரியஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.
இந்த ஆட்டம் 3 செற்களைக் கொண்டதாக இடம் பெற்றது. இதில் முதலாவது செற் ஆட்டத்தை மல்லாகம் நியூவோறியஸ்விளையாட்டுக்கழக அணி 25:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. சிறப்பான ஆட்டத்தின் வெளிப்படுத்திய புத்தூர் சரஸ்வதி விளையாட்டுக்கழக அணி 25:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. மூன்றாவது செற் ஆட்டத்தில் தமது அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்திய மல்லாகம் நியூவோரியஸ் விளையாட்டுக்கழக அணி 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.
மற்றுமொரு ஆட்டத்தில் சிறுப்பிட்டி கலைஒளி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் ஆதிக்கம் செலுத்திய அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணி முதல் இரு செற் ஆட்டத்தை 25:23, 25:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி வெற்றி பெற்றது. (23)




### கரப்பந்தாட்டத் தொடரில்

# இந்து இளைஞர் அணி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஓக.20
அரியாலை சரஸ்வதி நிலையத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியாக செற்அப் முறையிலான கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் இந்துஇளைஞர் விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.
அரியாலை சரஸ்வதி நிலைய மைதானத்தில் மின் ஒளியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதியது. ஐந்து செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் இடம்பெற்றது. இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் முதலாவது செற் ஆட்டத்தை 25:18 என்ற புள்ளிகள் அடிப்படையிலும், இரண்டாவது செற் ஆட்டத்தை 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையிலும், மூன்றாவது செற் ஆட்டத்தை 25:13 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் வெற்றி பெற்றது. ஆட்ட நேர முடிவில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது. (23-422)

## அரையிறுதிக்குள் ஹாட்லிஸ் அணி

இலங்கை துடுப்பாட்டச் சங்கத்தால் நடத்தப்பட்டு வருகின்ற பிரிவு 3க்கான யாழ். மாவட்ட அணிகளுக்கு இடையிலான காலிறுதியாட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிஸ் அணி, தவராசா பிரதீபனின் சதத்தால் 115 ஓட்டங்களால் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.
சுழிபுரம் விக்டோரியா கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற காலிறுதியாட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிஸ் அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை ஓல்கோட்ஸ் அணி மோதியது.
நாணயச் சுழற்சியில் வென்ற ஹாட்லிஸ் அணி, துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது. 80 ஓட்டங்களைப் பெற்ற போது, அணி 6 இலக்குகளை இழந்து இக்கட்டான நிலையில் காணப்பட்டது. இருப்பினும் மறுமுனையில் பிரதீபன் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி சதம் பெற்றார். பிரதீபன், ராகவன் இணைப்பாட்டம் 135 ஓட்டங்களைப் பெற அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 239 ஓட்டங்களைப் பெற்றது.
பந்துவீச்சில் சிந்துஜன் 3 இலக்குகளையும், திலீபன் 2 இலக்குகளையும், பிரியலக்‌ஷன் ஓர் இலக்கையும் கைப்பற்றினார்.
பதிலுக்குக் களமிறங்கிய ஓல்கோட்ஸ் அணி ரஜீவனின் பந்து வீச்சில் தடுமாறியது. அணி 21 ஓட்டங்களைப் பெற்ற போது 5 இலக்குகளை இழந்து பரிதவித்தது. சிறிகுகன், சிந்து இணைப்பாட்டம் நிலைத்திருந்து ஆடினாலும் இறுதியில் அணி 33 பந்துப்பரிமாற்றங்களில் 124 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்து 115 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. அணி சார்பில் சிறிகுகன் 43 ஓட்டங்களையும், சிந்துஜன் 13 ஓட்டங்களையும், திலீபன் 17 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் ரஜீவன் 4 இலக்குகளையும், சாகித்தியன் 3 இலக்குகளையும், தினோஷன் 2 இலக்குகளையும், பிரதீன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (422)

## சென்.நியூஸ்ரார் – சென்ஸ்ரார் இறுதியாட்டத்தில் மோதல்





யாழ்ப்பாணம், ஓக.21
அராலி பாரதி சனசமூக நிலையத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட சங்கானை பிரதேச அழைக்கப்பட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கு இடையிலான அணிக்கு 7 வீரர்கள் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்ட தொடரின் இறுதியாட்டம் அராலி பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று புதன்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளன.
இறுதியாட்டத்தில் சென்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்.நியூஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சங்கானை பிரதேச செயலர் திருமதி பிரேமினி பொன்னம்பலம் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்புவிருந்தினர்களாக வலிகாமம் மேற்கு பிரதேசசபைத் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன், வலி. மேற்கு பிரதேச சபை உறுப்பினர் சிவகுருபால கிருஷ்ணர், வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் தலைவர் ரவிச்சந்திரன் யுவராஜ், மதிப்புறு விருந்தினர்களாக பாரதி சனசமூக நிலையத் தலைவர் பரமகுரு ஜெகசீலன், வலி. மேற்கு பிரதேச சபை உறுப்பினர் தீபிகா விஜயகுமார், அராலி மேற்கு ஜே/164 கிராம சேவையாளர் திருமதி றஞ்சிதா றிச்சாட், சங்கானை இளைஞர் சேவை உத்தியோகத்தர் பசுபதி மதன்ராஜ், வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் உபதலைவர் ராஜேந்திரம் தயானந்தன், அராலி பாரதி விளையாட்டுக்கழகத்தின் அபிமானி ஏபி அஸ்பெரி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (23)



## வதிரி சிறி முருகன் வி.க. இறுதிக்கு முன்னேற்றம்

அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும் அமரர் கனகசபாபதி சத்தியநேசன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான அணிக்கு 7 வீரர்கள் பங்கு பற்றும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்டத் தொடரில் வதிரி சிறி முருகன் விளையாட்டுக்கழக அணி 2 இலக்குகளால் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு முன்னேறியது. அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் வதிரி சிறிமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணி நிர்ணியிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றது. இதில் திருவரன் 22 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். பந்து வீச்சில் சதீஸ் 2 இலக்குகளை வீழ்த்தினார். பதிலுக்குக் களமிறங்கிய வதிரி சிறிமுருகன் விளையாட்டுக் கழக அணி 4.4 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. அணி சார்பில் உமைசுதன் 49 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். பந்து வீச்சில் கஜந்தி, டெஸ்மன் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். (23)



தாச்சி சுற்றுப் போட்டியில்

# சண்டிலிப்பாய் உதயசூரியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது

கொடிகாமம், ஒக.21

கைதடி மத்தி குமரநகர் சனசமூக நிலையத்தின் 63 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு குமரநகர் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான மாபெரும் தாச்சி சுற்றுப் போட்டியில் சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சுதுமலை நாவலர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் 6 :3 என்ற கணக்கில் சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று கிண்ணம் வென்றது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனும்; சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க. வாமதேவன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினரும், தென்மராட்சி தமிழரசுக் கட்சியின் தலைவருமான கே.சயந்தன், சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.கே.எம்.ஏ.கே கோணாரவும், கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபையின் வட்டார உறுப்பினர் சு.கேதீஸ்வரன், யாழ். மாவட்ட தாச்சி சங்க தலைவர் தெ.சுகிர்தன், கைதடி மத்தி கிராம அலுவலர் மு.சிவகுமாரசர்மா, சமுர்த்தி உத்தியோகத்தர் க.அன்ரன் தேவகுமார், சனசமூக நிலையங்களின் ஒன்றியத் தலைவர் இ.கந்தசாமி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் அ.செந்தூரன், குமரநகர் மாதர் கிராம அபிவிருத்தி சங்க உப தலைவர் திருமதி நி.கவிதா நடுவர் சங்கத் தலைவர் த.கமலநாதன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (159-23)





# வளர்மதி சாதித்தது!



சாவகச்சேரி, ஒக.21

சாவகச்சேரி நியூபவர் விளையாட்டுக் கழகத்தினர் பிரதேச துடுப்பாட்ட அணிகளுக்கிடையில் நடத்திய துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் மட்டுவில் வளர்மதி அணி 8 ஓட்டங்களால் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிவன் அணித் தலைவர் முதலில் மட்டுவில் வளர்மதி அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தார். முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் வளர்மதி அணி 53 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அமல் 16 ஓட்டங்களையும், தனஞ்சயன் 11 ஓட்டங்களையும், நிசாந்தன் 13 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் வினாயக் 4 இலக்குகளை சாய்த்தார்.

பதிலுக்குக் களமிறங்கிய சிவன் அணி வளர்மதி அணியின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் 45 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்து 8 ஓட்டங்களால் வெற்றியைத் தவற விட்டனர். அணி சார்பில் வினாயக் 11 ஓட்டங்களையும், செந்தூர் 12 ஓட்டங்களையும் அதிகமாகப் பெற்றனர் .பந்து வீச்சில் அமல், கவி, பானு, நிசாந்தன் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.

இந்தச் சுற்றுப் போட்டியின் ஆட்ட நாயகன் விருதை மட்டுவில் வளர்மதி அணி வீரர் அமல் பெற்றார். தொடர் ஆட்ட நர்யகன் விருதை சிவன் அணி வீரர் செந்தூர் தட்டிச் சென்றார். (9)

# அகில தனஞ்சய, கேன் வில்லியம்சன் பந்து வீச்சுக்கு தடை விதிக்கப்படுமா?

இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் நடைபெற்று வரும் இந்த நிலையில் இரு அணிகளின் இரு வீரர்களின் பந்து வீச்சு முறையில் சந்தேகம் எழுந்துள்ளதாக பன்னாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் இலங்கை அணியின் சுழற் பந்து வீச்சாளர் அகில தனஞ்சய மற்றும் நியூசிலாந்து அணித் தலைவர் வில்லியம்சன் ஆகியோரின் பந்து வீச்சு முறைகளிலேயே இவ்வாறு சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக பன்னாட்டு கிரிக்கெட் சபை தெரிவித்தது.

அகில தனஞ்சய, வில்லியம்சன் ஆகியோரின் பந்து வீச்சு முறைமை தொடர்பான நடுவர்களின் அறிக்கை இரு அணிகளின் முகாமையாளரிடமும் சமர்ப்பித்துள்ள நிலையில், குறித்த அறிக்கையிலேயே பந்து வீச்சு முறையில் சந்தேகம் எழுந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இடம்பெறும் போட்டித் தொடர்களில் இருவரும் பந்து வீச முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, எதிர்வரும் 14 நாட்களுக்குள் இருவரும் பந்துவீச்சு முறை தொடர்பான பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டுமென அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 3ஆவது போட்டியில் ஸ்மித் நீக்கம்

இங்கிலாந்தில் நாளை ஆரம்பமாகவுள்ள ஆஷஸ் டெஸ்ட் தொடரின் 3ஆவது ஆட்டத்தில் விளையாடும் ஆஸ்திரேலிய அணியில் இருந்து ஸ்டீவ் ஸ்மித் நீக்கப்பட்டுள்ளார்.

லண்டன் லோட்ஸ் மைதானத்தில் நடந்த 2ஆவது டெஸ்ட் போட்டியின் போது, இங்கிலாந்து வீரர் ஆர்ச்சரின் பவுன்சர் பந்து தாக்கி காயமடைந்தார் ஸ்மித். அந்தக் காயம் முழுமையாக குணமடையாததால், அவர் 3ஆவது டெஸ்ட் போட்டியில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை அறிவித்தது.

5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடரில் இதுவரை 2 போட்டிகள் நடந்து முடிந்துள்ளன. இதில் ஆஸ்திரேலியா 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்து வருகிறது. முதல் டெஸ்டில் ஸ்டீவ் ஸ்மித் தொடர்ச்சியாக இரு இன்னிங்ஸிலும் சதம் கடந்து அணியின் வெற்றிக்கு முக்கியப் பங்காற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2ஆவது போட்டியிலும் 80 ஓட்டங்களைப் பெற்ற நிலையிலேயே பவுன்சர் பந்து தாக்கி இடைநடுவில் களத்திலிருந்து வெளியேறியிருந்தார்.

துடுப்பாட்டத்தில் தடுமாறி வரும் ஆஸ்திரேலிய அணிக்கு ஸ்மித் அணியில் இல்லாதது பெரும் இழப்பே.



# இறுதிக்குள் டயமன்ஸ்

அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும் அமரர் கனகசபாபதி சத்தியநேசன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் 5 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்டத் தொடரில் டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணி 12 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் சிவிலிம விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 49 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிறேம்குமார் 19 ஓட்டங்களையும்,பிரதீப் 11 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் கோகுலன் 2 இலக்குகளை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சிவிலிம விளையாட்டுக்கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 36 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதில் நிதர்சன் 12 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். பந்து வீச்சில் பிரதீப் 2 இலக்குகளை வீழ்த்தினார். (23)



# ஆர்ச்சரின் பவுன்சர்கள் தொடரும்

## ஆஸி. வீரர்களுக்கு பென் ஸ்டோக்ஸ் எச்சரிக்கை

இங்கிலாந்து வேகப்பந்துவீச்சாளர் ஜோப்ரா ஆர்ச்சரிடம் இருந்து அடுத்துவரும் டெஸ்ட் போட்டிகளில் ஏராளமான பவுன்சர்கள் வரும், ஆஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்கள் அவதானமாக விளையாட வேண்டும் என்று இங்கிலாந்து அணி வீரர் பென் ஸ்டோக்ஸ் எச்சரிக்கை செய்துள்ளார்.

லண்டனில் நடந்த ஆஷஸ் தொடரின் 2ஆவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஆர்ச்சரின் பவுன்சர் பந்து தாக்கி ஆஸ்திரேலியா வீரர் ஸ்மித் காயமடைந்தார். இதனால் அவர் 3ஆவது டெஸ்ட் போட்டியிலும் இடம் பெறவில்லை.

இந்தச் சூழலில் இங்கிலாந்து அணியின் சகலதுறை ஆட்டக்காரர் பென் ஸ்டோக்ஸ் தெரிவிக்கையில்;

ஜோப்ரா ஆர்ச்சரின் பந்துவீச்சிலும், பவுன்சரிலும் ஆஸ்திரேலிய வீரர்கள் பார்த்தது ஒரு பகுதிதான். ஏராளமானவற்றை பார்க்க வேண்டியது இருக்கிறது. இன்னும் ஆக்ரோஷமாக, ஆவேசமாக வரும் பவுன்சர்களை ஆஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்கள் எதிர்கொள்ள வேண்டும். எவரும் களத்தில் நிலைத்து நின்று ஆட முடியாது.

சிலர் ஜோப்ரா ஆர்ச்சரின் பந்துவீச்சு குறித்து விமர்சனம் செய்கிறார்கள். ஆனால், பந்துவீச்சில் சில துடுப்பாட்ட வீரர்கள் மோசமாக அடிவாங்கினார்கள் என்பதற்காக, எந்த பந்துவீச்சாளர்களும் இனிமேல் பந்துவீசப் போவதில்லை, யாரும் அடிவாங்குவதற்காக பந்துவீசவில்லை என்று கூறமாட்டார்கள்.

ஆர்ச்சரின் பந்துவீச்சு சீராகத்தான் இருக்கும், விளையாட எளிதாக இருந்தாலும், பவுன்சராக வரும்போது துடுப்பாட்ட வீரரை நோக்கி மோசமாக வரும்.

ஆஸ்திரேலியாவின் மிச்சல் ஜோன்சன் இதுபோன்ற பந்துவீச்சை வெளிப்படுத்துவதை பார்த்திருக்கிறோம். குறிப்பாக 2013ஆம் ஆண்டில் அவர் இதுபோன்ற ஆக்ரோஷமான பந்து வீச்சை வீசியிருந்தார். ஆனால், அதே ஆவேசமான பந்துவீச்சை ஜோப்ரா இப்போது எளிதாக வெளிப்படுத்துகிறார். ஆர்ச்சரிடம் இருப்பது அசாத்தியமான, மிரட்டும் விதமான திறமை. ஆர்ச்சரின் திறமைக்கு வானம்தான் எல்லை. இங்கிலாந்தின் டெஸ்ட் அணிக்கு நல்லதொரு தேர்வாக ஆர்ச்சர் இருக்கிறார் - என்றார்.

**வீட்டுடன் காணி தேவை**

மானிப்பாய், உடுவில் பகுதிகளில் வீட்டுடன் கூடிய 2 - 4 பரப்பு காணி வாங்குவதற்கு தேவை.

**077 359 7310**

**வீடு வாடகைக்குண்டு**

வெளிநாட்டிலிருந்து வருகை தருபவர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கும், சுபநிகழ்வு களை கொண்டாடுவதற்கும் ஏற்ற வகையில் நாளாந்த / வாராந்த / மாதாந்த அடிப்படையில் வீடு வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.

**075 947 8340, 077 637 8340**

**தவறவிடப்பட்டுள்ளது**

கொடிகாமத்தைச் சேர்ந்த குணரட்ணம். குகதாசன் என்பவருடைய மோட்டார் சைக்கிள் லைசன்ஸ் நவாலி மூத்த விநாயகர் கோயில் பகுதியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**077 880 3668**

**நாய்க்குட்டி விற்பனைக்கு**

புலனாய்வு ரக தூய இன
Labrador Retriever
41 நாள்களான நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
இடம்: பருத்தித்துறை வீதி, சிறுப்பிட்டி

**077 618 3118, 076 304 6923**

**வீடு வாடகைக்கு உண்டு**

**"இராசமாளிகை"**
**இல.36/14, பிரம்படி லேன், கொக்குவில்.**
(யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு அருகில்)
வீடு வாடகைக்கு உண்டு.

**076 468 6510, 077 191 2584**




லாலிகா தொடரில் ஆடுவதற்காக கடும் பயிற்சியில் ஈடுபட்டுள்ள பார்சிலோனா வீரர் மெஸ்ஸி.

# அத்தி. மட்ரிட் அசத்தலாட்டம்

ஸ்பானியக் கழகங்களுக்கிடையில் இடம்பெற்று வரும் லாலிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டியொன்றில் அத்திலெட்டிக்கோ மட்ரிட் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அத்திலெட்டிக்கோ மட்ரிட் - கடாவ்பி அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியின் முதலாம் பாதி ஆட்டத்தின் 23ஆவது நிமிடத்தில் மொரரா ஒரு கோலைப் போட்டார். முதல் பாதி ஆட்டத்தில் அத்திலெட்டிக்கோ மட்ரிட் அணி 1:0 என்றகோல்கணக்கில்முன்னிலையிலிருந்தது. முதல் பாதி ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் ஆக்ரோசமாக ஆடி மோதிக் கொண்டதில் இரு அணிகளிலும் இருந்து ஒவ்வொரு வீரர்கள் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டனர்.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய போதிலும், இரு அணி வீரர்களாலும் எந்தவிதமான கோலையும் பெற முடியவில்லை. இறுதியில் அத்திலெட்டிக்கோ மட்ரிட் அணி 1:0 என்ற கோல் கணக்கில் கடாவ்பி அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது.




# ஸ்ரீசாந்தின் வாழ்நாள் தடை 7 வருடங்களாகக் குறைப்பு

சூதாட்டத்தில் ஈடுபட்டதாக இந்திய அணியின் இளம் வீரர் ஸ்ரீசாந்துக்கு வாழ்நாள் தடை விதிக்கப்பட்ட நிலையில், தற்போது அது 7 வருடமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளராக திகழ்ந்தவர் ஸ்ரீசாந்த். கேரளாவைச் சேர்ந்த இவர், ஐ.பி.எல். தொடரில் விளையாடும்போது 'மேட்ச் பிக்சிங்கில்' ஈடுபட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டது.

இதுதொடர்பில் அவர் கைது செய்யப்பட்டார். பின்னர் பிணையில் வெளியே வந்து குற்ற மற்றவர் என்று நிரூபித்தார். ஆனால், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அவருக்கு வாழ்நாள் தடை விதித்தது. இதை எதிர்த்து அவர் நீதிமன்றில் முறையிட்டார்.

தற்போது உச்சநீதிமன்றத்தால் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு விசாரணை அதிகாரியாக முன்னாள் நீதிபதி டிகே ஜெயின் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஸ்ரீசாந்துக்கு வழங்கப்பட்ட வாழ்நாள் தடையை 7 வருடங்களாக குறைத்தார். ஸ்ரீசாந்துக்கு 2013 ஆம் ஆண்டிலிருந்து விளையாட தடை விதிக்கப்பட்டது. இதனால் அடுத்த வருடம் ஓகஸ்ட் மாதத்துடன் அவர் மீதான தடைமுடிவடைகிறது.

# பங்களாதேஷுக்கு எதிரான ஆப்கான் அணி அறிவிப்பு

ரஷித் கான் தலைமையில் ஆப்கானிஸ்தான் அணி பங்களாதேஷுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, ஒரு டெஸ்ட் போட்டி, 3 ரி-20 தொடரில் விளையாடவுள்ளது. இதற்கான ஆப்கானிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஆப்கானிஸ்தான் அணியில் கடந்த முறை அயர்லாந்து அணிக்கெதிராக விளையாடிய ஆறு வீரர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.


உலகக் கிண்ணத் தொடரின் போது சர்ச்சையில் சிக்கிய இலக்குக் காப்பாளர் முகமது ஷேசாத்துக்கும் இடம் கிடைக்கவில்லை. டெஸ்ட் போட்டிக்கான ஆப்கானிஸ்தான் அணியில் இடம் பிடித்துள்ள வீரர்கள் விவரம்:

ரஷித் கான் (அணித் தலைவர்), அஸ்கர் ஆப்கன், முகமது நபி, ஹஸ்ரதுல்லா சேசாய், நஜீப் தராகாய், முஜீப்உர்ரஹ்மான், ஷராபுதீன் அஷ்ரப், நஜிப் ஜத்ரன், ஷஹிதுல்லா கமல், கரிம் ஜனத், குல்பதின் நைப், பரீத் அகமது, ஷஃபிக்யுல்லா ஷஃபக், பசல் நியாசாய், தவ்லத் சத்ரன், நவீன் உல்ஹக், ரஹ்மானுல்லா குர்பாஸ்.

**மரண அறிவித்தல்**

**செல்லத்துரை இராசதுரை**

*(ஓய்வுநிலை அதிபர், யா/ நாரந்தனை கணேச வித்தியாலயம்*



நாரந்தனை வடக்கு ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது வட்டு. மேற்கு திருஞானசம்பந்தர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை இராசதுரை (20.08.2019) செவ்வாய்க் கிழமை இறைவனடிசேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை பொன்னம்மா தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து மீனாட்சிபிள்ளை தம்பதிகளின் மருமகனும் செல்வப்பாக்கியத்தின் (U.K) பாசமிகு கணவரும் சிவசக்தியின் (U.K) பாசமிகு தந்தையும் தில்லை நடராஜா (U.K) வின் மாமாவும் காலஞ்சென்ற சகுந்தலையம்மா மற்றும் பொன்ராசா (ஓய்வுபெற்ற வேலைத்திட்ட மேற்பார்வை அதிகாரி), சரஸ்வதியம்மா, சுப்பிரமணியம் (கனடா), ஏகநாயகியம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்றவர்களான கதிரவேற்பிள்ளை, இரட்ணாதேவி, பாலசுந்தரம் மற்றும் லோகேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற கோபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் கதிர்காமநாதன் காலஞ்சென்ற ஜெகநாதன் மற்றும் மனோறஞ்சிதன், தவத்தலைவி (சுவிஸ்), கலைச்செல்வி, திருச்செல்வி, சுகன்னியா (முன்னாள் பொறியியலாளர், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை - யாழ்ப்பாணம், U.K), குருபரன் (முன்னாள் சாரதி.விவசாயத்திணைக்களம், யாழ்ப்பாணம், கனடா), துஷ்யந்தி (முன்னாள்ஆசிரியை, மல்லாவி மத்தியகல்லூரி), காலஞ்சென்ற முகுந்தன், மற்றும் தர்சினி (முன்னாள் விவசாய போதனாசிரியர், விவசாயத்திணைக்களம், யாழ்ப்பாணம்), சந்திரவதனி (முன்னாள் உபதபால் அதிபர், எழுவைதீவு, U.K), பத்மினி (ஆசிரியை, யா/வேலணை கிழக்கு மகாவித்தியாலயம்), இளங்கோவன் (ஆசிரியர், கிளி/பளைறோ.க.த.கபாடசாலை),கருணாகரன்(சமுர்த்திஅபிவிருத்திஉத்தியோகத்தர், பிரதேசசெயலகம்,ஊர்காவற்றுறை) ஆகியோரின் மாமனாரும் சிவகுமரன் (கனடா), காலஞ்சென்ற திருக்குமரன் மற்றும் செல்வகுமரன் (பிரான்ஸ்), பூங்கோதை (கனடா), சிவசக்தி (கனடா) ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2019) புதன்கிழமை வட்டு. மேற்கு வட்டுக்கோட்டை இல்லத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாரந்தனை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: குடும்பத்தினர்.
021225 0945
சுகன்னியா(U.K) 00447507375531
துஷ்யந்தி (U.K) 00447932647390
குருபரன் (கனடா) 0016474019352
தர்சினி (கனடா) 0014166131942

**திருஞானசம்பந்த வீதி, வட்டு. மேற்கு வட்டுக்கோட்டை (சங்கரத்தைச் சந்தி)**
**WWW.Jaffnanews.tk**

# ஆஷஸ் டெஸ்ட் தொடரே கிரிக்கெட்டை தாங்குகின்றது

## கங்குலி புகழாரம்

இங்கிலாந்து - ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையில் நடைபெறும் ஆஷஸ் தொடர்தான் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளை உயிரோட்டமாக வைத்திருக்கிறது என இந்திய அணியின் முன்னாள் வீரர் கங்குலி தெரிவித்துள்ளார்.

ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடர் இங்கிலாந்து - ஆஸ்திரேலியா நாடுகளுக்கிடையே நூறு ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வருகின்ற பாரம்பரியமிக்க ஒரு தொடராகும். இந்தத் தொடரானது 5 டெஸ்ட் போட்டிகளைக் கொண்டது. இதுவரை நடைபெற்றுள்ள 70 தொடர்களில் 33 முறை ஆஸ்திரேலியா அணியும், 32 முறை இங்கிலாந்து அணியும் கைப்பற்றியுள்ளன. 5 தொடர்கள் சமநிலையில் முடிவடைந்துள்ளது.

தற்போது ரி-20 போட்டிகள் மற்றும் ஐ.பி.எல். போட்டிகள் காரணமாக டெஸ்ட் போட்டிகளுக்கு ஆதரவு குறைந்து வருகிறது.

இந்த நிலையில், ஆஷஸ் தொடர் நடைபெறுவதாலேயே டெஸ்ட் கிரிக்கெட் இன்னும் அழியாமல் உள்ளது என இந்திய கிரிக்கெட் அணி முன்னாள் வீரர் கங்குலி தனது ருவிற்றர் பக்கத்தில் குறிப்பிட்டார்.

இந்த ஆண்டு ஆஷஸ் தொடரின் முதல் போட்டியில் ஆஸ்திரேலிய அணி வெற்றி பெற்றது. இரண்டாவது ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.08.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.